வேவுநகர் வீரத்தேவன்

புலவர் நாக சண்முகம்

அருள் நிலையம்

50/6-7, திருமலைப் பிள்ளை ரோடு,
சென்னை-600017.

முதற்பதிப்பு : 1973.

விலை ரூபாய் மூன்று

நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600014.

91/4

கண்மாயின் கரையோரம்...!

பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும் நற்றவ வானத்தினும் நனிசிறந்தனவாக விளங்குகின்றன.

யாருக்கு?

வீட்டுப் பற்றும் நாட்டுப் பற்றும் உள்ளவனுக்கு! சுருங்கச் சொன்னுல் பெற்றவள், பிறந்த ஊர், நாடு என்ற உணர்ச்சி உள்ளவர்களுக்கு!

தனது சொந்த நலத்திலே பொது நலத்தைப் புறக் கணித்து விடுகிறவன் பொது நலத்துக்காகச் சுயநலத்தை இழந்துவிடுகிறவனுக்கு முன்னே துரும்புக்குச் சமமாகி விடுகிருன்.

உரிமை, அடிமை என்ற போராட்டங்கள் இன வேறு பாட்டாலும், மொழி வேறுபாட்டாலும், நாடு கடந்த பகை உணர்ச்சிகளாலும் உலகந் தோன்றிய கால முதலே தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

உலகத்தில் பொய் எவ்வளவுதான் வலுவுள்ளதாக இருந் தாலும் உண்மையைத்தான் உயர்ந்ததாக உலகம் ஏற்றுக் கொள்கிறது.

கடல் மண்ணகம் முழுவதையும் சூழ்ந்திருந்தாலும் மதிப்பது கங்கையைத்தான்!

எனவே நாட்டுப்பற்றின் பெருமை ஒவ்வொரு காலத் திலும், ஒவ்வொரு சமயத்திலும் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த உண்மை தோன்றுகிற பொழுதெல்லாம் பிறந்த நாட்டிற்கு நாம் என்ன செய்தோம்? என்ற எண்ணமும் தோன்றுகிறது.

நாட்டிற்குத்தான் நம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பிறந்த ஊருக்காவது நாம் என்ன செய்தோம்? என்ற

எண்ணம், அதைத் தொடர்ந்து பல சமயங்களில் தோன்றுவதுண்டு.

செல்வத்தால், செயலால் ஒன்றும் செய்ய இயலவில்லையே என்ற ஏக்கம் அவ்வப்பொழுது தோன்றுவதுண்டு. ஆனால் அண்மைக் காலமாக பிறந்த ஊரை அதன் சுற்றுப் புறத்தை, அதன் பக்கத்திலும் சற்றுத் தொலைவிலும் உள்ள ஊர்களை அடித்தளமாகக் கொண்டு நெடுங்கதை யொன்றை ஏன் புனையக்கூடாது? என்ற எண்ணம் தோன்றிக் கொண்டிருந்தது!

இப்படிப்பட்ட எண்ணம் தோன்றுவதற்கு நியாயமான சூழ்நிலை இருப்பதும் ஒரு காரணமாகும்.

இன்று 'வேகுப்பட்டி' என்ற பெயரால் வழங்கப்படுகிற என் ஊர் 'வேவுப்பட்டி' என்ற பெயரால் முன்னர் வழங்கி வந்தது என்பதற்குத் தக்க ஆதாரங்கள் உள்ளன.

ஒற்றுராய்ந்த பெருவீரர்களின் நிலைக்களமாக இவ்வூர் விளங்கியது என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன.

இவை மட்டுமல்லாமல் 'முந்நூறு ஊர்த்தே தண் பறம்பு நன்னாடு' என்று கபிலரால் பாடப்பெற்ற முந்நூறு ஊர்களுள் ஒன்றாக இவ்வூர் விளங்குகிறது என்பதையும் சொல்ல விழைகின்றேன்.

எனது ஊர் வேவுக்கண்மாய், உசிலைக்கண்மாய், அலைபாய்ந்தான் கண்மாய், ஏனக்கண்மாய் என்ற நான்கு கண்மாய்களால் சூழல் பெற்று விளங்குகிறது. இந்தக் கண்மாய்க் கரைகளில் நான் உலவுகின்ற பொழுதெல்லாம் நவநவமான கற்பனைகள் என் இதயத் தடாகத்திலே புத்தம் புதுமலர்களாகப் பூத்து மணம் பரப்பத் தொடங்கும்.

அன்பார்ந்த நேயர்களே !

என் ஊர்க் கண்மாய்க் கரைகளுக்கு அழைக்கிறேன். ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே நிலவிய சூழ்நிலையில் அங்கே வாழ்ந்த பெருவீரர்களின் வாழ்வினை வரலாற்றினைக் காணுங்கள் என்று வேண்டுகிறேன்.

பதிப்புரை

வரலாற்றுக் கதைகள் என்று வருகின்ற பொழுது அதன் சூழ்நிலை மாறுவதால் சுவையும் வேறுபடு கின்றது.

தாயகத்தை அடித்தளமாகக் கொண்டு உரு வாக்கப்படுகின்ற கதைகளைப் படிக்கும்போது சுவை ஏற்படுவது மட்டுமல்லாமல் உரிமை உணர்வும் ஏற்படுகின்றது.

வேவுநகர் வீரத்தேவன் பாண்டியர்—சோழர் வரலாற்றை அடித்தளமாகக் கொண்ட நெடுங் கதை.

இந்நெடுங்கதையில் பல்வேறு வகையான உணர்ச்சிகளும் பின்னிப் பிணைந்து செல்கின்றன.

வீரத்தேவன் குறுநில மன்னனாயினும் பண்பால் வீரத்தால் பெருநில மன்னனாக வாழ்ந்தவன்.

பாரி ஆண்ட முந்நூறு ஊர்களில் நன்ருன வேவுப் பட்டியை அடித்தளமாகக் கொண்டே இக் கதை செல்கிறது.

அறவழியில் செல்பவனுக்கு என்றும் தோல்வி இல்லை என்பதையே இக்கதை நிலைநாட்டுகின்றது.

தமிழகத்து முன்னோர்கள் பங்குபெறும் இக் கதையை மிகுந்த மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்ருேம்.

அருள் நிலையத்தார்

1. இரண்டு கண்கள்

நிலவரசியின் அமுதச் சுடரொளி பட்டுக் கொன்றை யூரின் தென்கிழக்குப் பகுதியிலிருந்த மணிமாளிகை பொன் மாளிகையாய்க் காட்சி தந்து கொண்டிருந்தது. மாடங்களில் வாழ்ந்து வந்த குயில்கள் காதல் வயப்பட்டிருந்ததால் கானம் பொழிவதை மறந்திருந்தன.

நல்லவர்கள் எங்கு பிறந்தாலும் நானில முழுவதற்கும் உதவிகள் புரிவது போலப் பொதிகையிலே பிறந்த தென்றல் மகள் மண்மகளைத் தன் மெல்லிய கரங்களால் தழுவியபடியே சென்று கொண்டிருந்தாள்.

செம்மேனியுடையவரில் சிலர் உள்ளம் கருமையாக இருக் கலாம் அல்லவா? அவ்வாறுதான் நிலவொளியால் பொன் மாளிகையாக விளங்கிய மணிமாளிகையில் சில இடங்கள் இருள் மண்டிக்கிடந்தன.

அந்திசாயும் நேரத்தில் அழகு மணி மாளிகையின் பல பகுதிகளிலும் உள்ள தீபங்களை ஏற்றும் பணியாளர்கள் அந் தப் பகுதிக்கும் வந்தார்கள்.

நுழைவாயிலாக விளங்கிய கண்ணாடிக் கதவுகள் தாழிடப் பட்டிருந்தன. அவர்களில் சிலர் உள்ளே உற்றுப் பார்த்தார் கள்.

மாளிகைக்கு உரியவன் மஞ்சத்தின் ஓர் ஓரத்தில் அமர்ந்தபடியே எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான். அவ

னுக்கருகிலே மதுக்கோப்பைகள் சாய்ந்து கிடந்தன நெருப்புக்கு நெய் போல உணர்ச்சிகளுக்கு மது!

எதிர்பாராது அவன் திரும்பிப் பார்த்தான். அந்த மாலை மயங்கும் நேரத்தில் அவன் கண்கள் தீப்பிழம்புகளாக எரிந்து கொண்டிருந்தன. பணியாளர்கள் பக்குவப் பட்டவர்கள். அவன் ஆத்திரத்தோடு இருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டு அவர்கள் வந்தவழியே திரும்பிச் சென்றார்கள். மாளிகையின் உட்புறங்கள் எல்லாம் ஒளி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தாலும் மாளிகைக்கு உரியவள் மட்டும் இருள் தேடி ஓடி உட்காரக் காரணம் என்ன? அவன் உள்ளத்தில் இருள் கவிந்து கிடந்ததுதான் அதற்குக்காரணம்! ஆத்திர அலைகள் தொடர்ந்து மோதிக்கொண்டு இருந்ததால் அவன் உள்ளக் கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

சில காலமாக அந்தக் கடலிலே அவன் விட்டிருந்த நம்பிக்கை நாவாய் மீது அவநம்பிக்கை என்ற இடி விழுந்து விட்டதாக அவன் கருதியதே காரணம்!

நாளும் வளர்க்கப்பட்ட நம்பிக்கை திடீரெனக் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியபோது அவன் உடலெல்லாம் ஆத்திரத்தால் அதிர்ந்தது.

உயர்ந்த இடத்தில் இருப்பவர்கள் எல்லாம் தங்கள் நலனுக்காக இப்படித்தான் மற்றவர்களைப் பலியிடுவார்கள் என்று எண்ணியபோது ஏமாற்றமும் அவமானமும் போட்டியிட்டு அவனைத் தாக்கி நிலைகலங்கச் செய்தது.

'அந்தத் தகுதி உனக்கில்லை' என்று மன்னன் சொல்லியிருக்கலாம். ஆனால் ... இன்னொருவனுக்குத் தான் அந்தத் தகுதியிருக்கிறது என்று கூறுவது போல மன்னன் பெருவழுதி செய்த காரியம் தான் அந்த மாளிகைக்கு அதிபதியான சுந்தரத்தேவனை வெறிகொண்டவன் ஆக்கிக் கொண்டிருந்தது.

பைந்தமிழ்த் தாய்க்குப் புலவர் படையொன்றை உருவாக்கி அவளை அரியாசனத்தில் ஏற்றி வாழ்வாங்கு வாழ வைத்து பாண்டியர் பரம்பரையில் வந்தவன்தான் மன்னன் பெருவழுதி!

அன்னை காவிரி தோன்றுமிடத்திலே சிறியவளாகத் தோன்றிக் காவிரியாய்க் கொள்ளிடமாய் இன்னும் பல நதிகளாகப் பரந்து விரிந்து உலகெலாம் வளப்படுத்திச் சின்னஞ் சிறியவளாகப் பூம்புகார்ப் பட்டணத்திலே கடலோடு கலக்கின்றாள். அப்படித்தான் பாண்டியர் பரம்பரையும் சங்க மருவிய பாண்டியர்களோடு தொடங்கிப் புகழ்பெற்ற பல அரசர்களைக் கண்டு, சிறுசிறு கிளைகளாகப் பிரிந்து குறுநில மன்னர்களாக விளங்குகின்ற நிலைவந்தது. அப்படி விளங்கியவர்களில் ஒருவன்தான் பொன்முடிப் பாண்டியன்! அவன் பொன்னமராவதியைத் தலைநகராகக் கொண்டு கோலோச்சி வந்தான். தெற்கில் அரளிப்பாறை, வடக்கில் வெள்ளாறு கிழக்கில் திருக்கோளக்குடி, மேற்கில் பறம்புமலை ஆகியவை அவன் எல்லைகளாக விளங்கி வந்தன.

அண்மையில் பொன்முடிப் பாண்டியன் உயிர்நீத்ததால் அவன் ஒரே செல்வமகன் பெருவழுதி அரசு கட்டிலேறினான். பெருவழுதியின் இளமைக்காலம் முதலே வீரத்தேவனும் சுந்தரத்தேவனும் நெருங்கிய நண்பர்களாக விளங்கி வந்தார்கள். அவர்கள் இருவரும் கூடப் பாண்டியர் பாரம்பரியத்தில் வந்தவர்கள்தாம்!

பெருவழுதி படைக்கலப் பயிற்சிகளை மேற்கொண்ட போதும் சரி, பைந்தமிழைக் கற்றபோதும் சரி இவர்கள் இருவரும் உடன் பயிலும் உற்ற தோழர்களாகவே விளங்கி வந்தார்கள்.

அவன் அரியாசனத்தில் அமர்ந்த நாளன்று இரவு வீரத்தேவனையும் சுந்தரத் தேவனையும் அழைத்து, இருவர் கரங்களையும் பற்றிக்கொண்டு, "நீங்கள் இருவரும் என் இரண்டு

ண்கள்!'', என்று நாத்தழுதழுக்கக் கூறினான். சில நாட்களுக்குள் அவன் மனம் ஏன் இப்படி மாறியது!

சுந்தரத் தேவனால் மாறியது என்று எண்ண முடியவில்லை. யாரோ மாற்றியிருக்கிறார்கள் என்றே தோன்றியது. இந்த எண்ணம் தோன்றியபோது வீரத்தேவன் வானத்திற்கும் வையத்திற்குமாக அவன் முன்னே வந்து நிற்பதுபோல ஒரு பிரமை! அவன் தன்னையும் அறியாமல் பற்களைக் கடித்துக் கொண்டான்.

வீரத்தேவனைப் படைகளுக்குத் தலைமைத் தளபதியாக நியமித்ததோடு வேவுக்காரப் படைகளுக்கும் அவனையே தலைவனாக்க அரசன் தீர்மானித்தான். இருவரும் கண்கள் என்று கூறிய மன்னன் ஒரு கண்ணுக்கே இரண்டு பொறுப்புக்களையும் அளிப்பானேன்?

சுந்தரத் தேவனின் உடலும் உள்ளமும் நெருப்பாய் எரிந்தன. அரசன் அவனுக்கு அந்தப் பதவிகளைக் கொடுத்தான் என்ற முற்றுப்புள்ளியோடு இது முடிந்து விடக்கூடியது அல்லவே! இவனுக்கு ஏன் கொடுக்கவில்லை என்ற கேள்விக் குறிக்கு இடம் தர வல்லதாயிற்றே என்று அவன் எண்ணிப் பொருமினான்.

படைக்களப் பயிற்சிகளை மேற்கொண்டிருந்த காலங்களில் பலமுறை வீரத்தேவன் தன்னைவிட ஆற்றலில் மேலோங்கி நின்ற நிகழ்ச்சிகளும் அவனை அருச்சுனன் என்று ஆசிரியர் வருணித்த சம்பவங்களும் தோன்றி அவனுக்குப் பெருங்கசப்பைத் தந்தன.

தன்னுடைய எண்ணங்கள் சரியா என்று ஒருகணம் தனக்குத் தானே அவன் எண்ணிப் பார்த்தான்.

உலகையே மறந்து யோகியாகி நிற்கின்ற சந்நியாசிக்கு அடியவர்களாக இருக்கிற சீடர்கள் எல்லாம் கூடத் தலைமைச் சீடராக இருப்பதையே விரும்புகின்றார்கள். அப்படியிருக்க ஆட்சியிலே தொடர்புடைய ஒருவன் தனக்குரிய உரிமை

தரப்படவில்லை என்பதில் எவ்வாறு ஆத்திரம் கொள்ளாம லிருக்கமுடியும்? என்று அவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

கனன்று கனன்று எரிகின்ற காட்டுத்தீ போல அவனுடைய ஆத்திரம் மேலும் மேலும் பெருகிக் கொண் டிருந்தது.

மாளிகைக்குச் சற்றுத் தொலைவிலிருந்த முத்துமாரி அம்மன் கோயிலைச் சுற்றித் தீவட்டிகள் எரிந்துகொண் டிருந்தன. ஒளி நல்கும் நெருப்பே அழிக்கும் தன்மையும் பெற்று விளங்குவது போலக் கருணையே உருவான அன்னை தீமைகளை அழிக்க முயலும்போது துர்க்கையாக மாறுகிருள் என்ற தத்துவத்தை விளக்குவன போல அவை விளங்கிக் கொண்டிருந்தன

விரைவிலேயே வரவிருந்த பங்குனித் திருவிழாவிற்காக இரவு வந்தும்கூடப் பணியாளர்கள் கோயிலை அலங்கரிக்கும் பணியிலே ஈடுபட்டிருந்தார்கள்.

கொன்றையூர், வேவுப்பட்டி, கீரணிப்பட்டி, நார்த்தா மலை, இளஞ்சாவூர், திருவப்பூர், மகிபாலன் பட்டி முதலிய ஏழு ஊர்களிலும், விளங்குகின்ற ஏழு அம்மன்களும் சகோ தரிகளாவார்கள். இந்த ஏழு அன்னையரும் தாம் அந்தந்தப் பகுதிக்கு அருளாட்சி செய்யும் தெய்வ அரசிகளாக விளங்கி வருகிருர்கள்.

கொன்றையூர்த் தாய்க்கு அர்த்தசாமப் பூசை மிகவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவள் ஆலயத்து மணி அவள் எல்லை கடந்தும் ஒலித்துக் கொண்டிருந்தது. அவளுக்கு எல்லை ஏது?

ஆனுல்...........

ஆட்சிக்கு எல்லையுண்டு!

அதிகாரத்திற்கு எல்லையுண்டு!

இவற்றை அறிந்துகொள்ள முடியாத மனிதன் ஆணவக்காரனாகிறான். அதற்கு எல்லையில்லை என்று நினைக்கிறான்.

கண்ணாடிக் கதவுகள் தட்டப்படுகிற ஓசை கேட்டுச் சீற்றத்தோடு திரும்பிப் பார்த்தான். அந்த இருள் படிந்த சூழ்நிலையிலும் கூட, வந்தவன் யார் என்பதைச் சுந்தரத்தேவன் புரிந்து கொண்டான். விரைந்து சென்று கதவைத் திறந்தான்.

புலியின் கண்களைப் போன்ற கூரிய பார்வையுடைய அவன் நண்பன் நந்திதேவன் உள்ளே நுழைந்தான்.

2. உபதேசம்

இருள் படர்ந்த அந்தச் சூழ்நிலையில் கூட வந்தவன் யார் என்பதனைச் சுந்தரத் தேவன் தெரிந்து கொண்டான்.

விரைந்து சென்று தாளிட்டிருந்த கண்ணுடிக் கதவைத் திறந்தான். திரும்பிய சுந்தரத் தேவனை வந்தவன் பின் தொடர்ந்தான்.

''சுந்தரத் தேவரே ! நாளை உதயத்தில் நடக்கப் போகிற வீரத்தேவன் பட்டமளிப்பு விழாவிற்கு எந்த ஆடையை அணிந்து கொண்டு போகலாம்?—என்று தனிமையிலிருந்து சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்களா ?''

வந்தவன் கேட்ட இந்தக் கேள்விக்கு மனம் நொந்து போயிருந்த சுந்தரத் தேவன் பதிலொன்றும் கூருது தன் இருக்கையிலே அமர்ந்தான்.

''சுந்தரத் தேவரே! கடந்த பல ஆண்டுகளாக இந்த நந்திதேவன் தங்களோடு ஒட்டி உறவாடி நட்புப் பாராட்டி உற்ற தோழனுய் வளர்ந்து வந்தவன் என்பதால் சில செய்திகளை மனம் விட்டுக் கூற விரும்புகின்றேன். நேற்று இந்த இடத்தில் பலதீபங்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. இன்று இருள் மண்டிக் கிடக்கிறது. நாளை ஏன் மீண்டும் தீபங்கள் பிரகாசிக்கக் கூடாது? அரசியல் தேருக்கு நம்பிக்கைதான் அச்சாணி!'' என்று நந்திதேவன் அழுத்தந் திருத்தமாகக் கூறினுன்.

"கடந்த பத்து ஆண்டுக் காலமாக நான் நம்பித்தான் இருந்தேன். அந்த நம்பிக்கை விலைபோகாத பொருளாகப் போய்விட்டது", என்று வேதனையோடு சுந்தரத் தேவன் கூறினான்.

"விலை போகவில்லை என்பதற்காகப் பொருள் தாழ்ந்தது என்று எவ்வாறு கருதமுடியும்? பொருளைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியாதவர்களிடம் விலைகூறிப் பயன் என்ன? நீங்கள் ஒரு வீர முத்து! இன்று அது விலை போயிருந்தால் அரசனுடைய மார்புக்கு அணிகலனாக விளங்கியிருக்கும், இன்னும் சிலகாலம் பொறுத்துப் போவதன் மூலம் அரச கிரீடத்தையே அலங்கரிக்கின்ற வாய்ப்பினைப் பெறக்கூடும்."

"நந்திதேவா! சுவையான சொற்கள் மட்டும் வாழ வைத்து விட மாட்டா!"

"சுந்தரத் தேவரே! நான் ஆகாயத்திற்குக் குடை பிடிக்கவேண்டும் என்று சொல்லவில்லை. முயன்றால் அரண்மனை முற்றத்திற்கு விதானம் அமைக்க முடியும் என்று கூறுகிறேன். நீங்கள் பாண்டிய வம்சத்திலே பிறந்தவர்கள். என்றாலும் சில தலைமுறைகளாகவே படைத்தலைவர்களாக, அமைச்சர்களாக வாழுகின்ற பரம்பரையாக மாறிவிட்டீர்கள்! ஆனால், பாண்டவர்கள் ஆட்சி செய்துகொண்டிருந்த பேரரசனுக்கு மக்களாகப் பிறந்தார்கள். ஆட்சி செய்தார்கள். என்றாலும் இடையிலே பதின்மூன்றாண்டுகள் பஞ்சையாய் பராரியாய் மறைந்து வாழ்ந்தார்கள். ஆனாலும் அவர்கள் தளரவில்லை. மனிதனுக்கு வயதுண்டு. ஆனால் அவனுக்காகவே ஆண்டவனால் படைக்கப்பட்ட நம்பிக்கைக்கு வயதில்லை. பெருவழுதிப் பாண்டியர் இன்று தளபதிப் பொறுப்பினையும் வேவுக்காரப் படையின் தலைமையினையும் வீரத் தேவனுக்குத் தர முடிவு செய்துள்ளார் என்றாலும் அந்தப் பதவியில் அவனே தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற கட்டாயம் ஒன்றுமில்லை."

இருளின் அந்தகாரத்தையும் அமைதியையும் கிழித்துக் கொண்டு நந்திதேவனின் அழுத்தந்திருத்தமான சொற்கள் சுந்தரத் தேவனை வட்டமிடத் தொடங்கின.

"நந்திதேவா! நீ கூறுவதைப் பார்த்தால் மன்னனையே வீழ்த்திவிடலாம் என்கிருயா?"

"அதுவும் முடியலாம். ஆனால் அதுவே முடிய வேண்டும் என்று நான் சொல்லவில்லை. பெருவழுதி சாதாரணமானவனல்லன். சர்வ வல்லமையும் படைத்தவன். எனவே அவனை நாம் எதிர்ப்பது நாமே குழிதோண்டிக் கொண்டு அதில் நாமே விழுந்து மண்ணையும் தள்ளிக் கொள் வதற்கு ஒப்பாகும்! எனவே நமது முதல் இலக்கு வீரத் தேவன் மீதுதான் இருக்கவேண்டும்!"

"நந்தி தேவா! நீ சொல்வதை நான் ஏற்கிறேன். படைகொண்டு மன்னனை அழிக்க முடியாமலிருக்கலாம். ஆனால் பகைகொண்டு அழிக்கமுடியாதா என்ன? தொழுத கையுள்ளும் படை யொடுங்கும் என்று வள்ளுவர் கூறி யுள்ளார். வீரத்தேவன் தோழனாக உள்ள என்றால் அவனைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து அழித்துவிட முடியாதா என்ன?"

"அழிக்கலாம். ஆனால் ஒன்றின் அழிவிலே இன்னொன்று தோன்ற வேண்டும். நான் சொல்வது சுந்தர பாண்டியருக்கு நன்கு புரியும் என்று நினைக்கிறேன். பெருவழுதிப் பாண்டியன் அழிகின்ற அதே நேரத்தில் சுந்தர பாண்டியத் தேவர் முடிபுனைய வேண்டும். முடியுமா? இந்தப் பகுதி மக்கள் அனைவரும் பெருவழுதியைக் கண்கண்ட தெய்வமாக மதிக்கிறார்கள். எனவே அவருக்கு அழிவென்றால் அதற்குக் காரணமாக இருந்தவர்களை இன்றையச் சூழ்நிலையில் இன்று பிறக்கும் குழந்தைகூட மதிக்காது. நமது சாமர்த்தியம் எல்லாம் மன்னனைத் தழுவிப் போவதில்தான் இருக்கிறது. இவ்வளவு அன்பாய் இருக்கின்ற சுந்தரத் தேவருக்கு இரண்டு

பொறுப்புக்களில் ஒன்றைக் கூடக் கொடுக்காமல் விட்டு விட்டோமே' என்று மன்னன் நினைக்கும்படியாய் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும், கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்! மன்னன் மனம் மட்டும் கரையாதா என்ன? சுந்தரத் தேவரே! திட்டமிட்டுச் செயல்புரிவோம்! கட்ட விழ்த்த காளையைப்போல் களித்துத் திரிகின்ற வீரத்தேவனின் கொட்டத்தை அடக்குவோம். சுந்தரத்தேவரே! உங்களோடு பழகிய நட்பின்மீது ஆணையாகச் சொல்கிறேன். உங்களுக்கு வந்த அவமானம் எனக்கு வந்தது போலத்தான்! எனவே உங்கள் நலம் கருதி உங்கள் வருங்கால வாழ்வுக்காக—வளத் துக்காக—புகழுக்காக நான் எதுவேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன்'' என்று சபதம் இடுகின்ற குரலிலே நந்திதேவன் கூறினான்.

ஓய்ந்து கிடந்த சுந்தரத் தேவனின் உள்ளத்திலே உற்சாகம் பிறந்தது.

''நந்திதேவா! நீ இருக்கும்வரை எனக்கென்ன கவலை?'' என்று கூறியபடியே இருக்கையை விட்டு எழுந்து அவனைத் தழுவிக் கொள்ள முயன்றான்.

இந்த நிலையில், விளக்கேற்றும் தீப்பந்தங்களைக் கையி லேந்தியபடி பணியாளர்கள் நான்கு பேர் பின் தொடர வான தேவதையைப் போன்ற பெண்ணொருத்தி அந்த முற்றத்தை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அந்தக் காட்சியைக் கண்ட சுந்தரத் தேவனும் நந்திதேவனும் பெரும் பரபரப்புக் காளானார்கள்,

3· வெள்ளை மனம்

வந்தவள் மிகுந்த சுதந்திர உணர்வோடு கண்ணாடிக் கதவுகளைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். அவளைப் பின் தொடர்ந்து வந்த பணியாளர்கள் உள்ளே வருவதற்கு அஞ்சியவர்களாகச் சுந்தரத் தேவனை நோக்கியவண்ணம் வெளியேயே நின்றார்கள்.

அவர்களைத் திரும்பிப் பார்த்த அந்த நங்கை, 'ஏன் தயங்குகிறீர்கள்? வாருங்கள் உள்ளே! எல்லா விளக்கு களையும் ஏற்றுங்கள்'' என்று அவள் ஆணையிடும் குரலில் கூறினாள். விரைந்து விளக்குகளை ஏற்றத் தொடங்கினார்கள்.

சுந்தரத் தேவனும் நந்திதேவனும் பிரமித்து நின்றார்கள். தங்கள் கடமையை முடித்துக் கொண்ட பணியாளர்கள் அங்கிருந்து அகன்றார்கள்.

சற்று முன்னர் இருளடைந்து கிடந்த அந்தப் பொன் மணி முற்றம் இப்பொழுது கவின்மிகு கலைக்கூடமாக விளங் கியது. அந்த முற்றத்துச் சுவர்களில் பதிக்கப் பெற்றிருந்த பல்வேறு வகையான பளிங்குக் கற்களில் பற்றிய தீபங்களின் ஒளிக்கதிர்கள் பட்டு ஆயிரமாயிரம் பிரதிபிம்பங்களை உண் டாக்கிக் கொண்டிருந்தன.

வானத்து நட்சத்திரங்கள் எல்லாம் ஒன்று திரண்டு அந்த மணி மன்றத்தில் குடிபுகுந்தன போலத் தோன்றியது. அதற்கு இடையே அந்த எழிலரசி நின்ற கோலம் தனது

பரிவாரங்களாய நட்சத்திரங்கள் எல்லாம் கொன்றையூர் மணிமாளிகை முற்றத்தை அடைந்துவிட்ட பிறகு நமக்கு மட்டும் வானவீதியில் என்ன வேலை? என்று கருதி நிலவரசியும் அங்கே வந்து தஞ்சம் புகுந்துவிட்டது போலத் தோன்றியது. பிரமிப்பிலிருந்து விடுபட்ட நந்திதேவன் வானவல்லியாக வந்து அங்கே நின்ற வனிதையைத் தன்னுடைய நெருப்புக் கண்களால் ஊடுருவிப் பார்த்த வண்ணம் பேசலானான்.

''இளையநங்கை மதுரவல்லியார் வந்தால் வெளிச்சமும் அல்லவா உடன் வருகிறது !''

இதைக் கூறிவிட்டு நந்திதேவன் மெல்லச் சிரித்தான்.

''வெள்ளை மனம் படைத்தவர்கள் வந்தால் வெளிச்சமும் உடன் வரும் கரிய மனம் படைத்தவர்கள் வந்தால் என்ன வரும் ?'' என்று நந்திதேவனைப் பார்த்து அந்த நாயகி கேட்டாள்.

''என்ன வரும் என்று இளவரசியாருக்குத் தெரியாதா ?,' என்று நந்திதேவன் கேலிக்குரலில் கூறினான்.

''தெரியும். தெரியாமல் எப்படியிருக்கும்? நான் வந்த பொழுது இங்கே இருள்தான் நீக்கமற நிறைந்திருந்ததே! இருள் சூழ்ந்த இடத்தில் யார் வேண்டுமானாலும் தீபங்களை ஏற்றலாம். இது பொதுவான நீதி. உரிமையுடையவர்கள் உறுதியாக இருளை அகற்ற வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் உரிமையுடையவர்கள் ஆவார்கள். நந்திதேவரே! நான் என்ன சொல்கிறேன் என்று உங்களுக்குப் புரிகிறதா?'' என்று மதுரவல்லி சினத்தோடு கேட்டாள்.

''எனக்குத் தெரியவில்லையே இளவரசி!'', என்று நந்திதேவன் மிகவும் அலட்சியமாகக் கூறினான்.

''உங்களுக்குத் தெரியவில்லை என்பதறிந்து நான் வியப்படையவில்லை. உங்களுக்கு இதுபோன்ற செய்திகள் எந்த

அளவுக்குத் தெரியும் என்பது பற்றி எனக்குத் தெரியும். அதுபற்றி என் அண்ணனுக்குத் தெரியவேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை!” என்று கூறிவிட்டுச் சீற்ற மிகுந்த கண்களால் மதுரவல்லி நந்திதேவனை ஒரு முறை பார்த்தாள்.

இதுவரை பேசாமலிருந்த சுந்தரத் தேவன் தன் ஒரே அன்புத் தங்கையான மதுரவல்லியை நோக்கி, “மதுரம்! நந்திதேவன் மீது உனக்கென்ன கோபம்?” என்று சிரிப்பை வரவழைத்துக் கொண்டு கேட்டான்.

“அண்ணா! நீங்கள் இப்போது என்னைப் பார்த்துக் கேட்கிற கேள்வி சிறிது நேரத்திற்கு முன்னரே நாகதேவனைப் பார்த்துக் கேட்டிருக்க வேண்டும்!” என்று அவள் வினயமாகக் கூறினாள்.

“நீ என்ன சொல்கிறாய்?” என்று ஒன்றும் புரியாதவனாகச் சுந்தரத் தேவன் கேட்டான்.

“வீரத்தேவன் மீது உனக்கென்ன கோபம்? என்று சற்று முன்னரே நந்திதேவனைப் பார்த்து நீங்கள் கேட்டிருக்க வேண்டும் என்று கூறுகிறேன்” என்று அவள் சீறினாள்.

அவள் அவ்வாறு கூறுவாள் என்று நந்திதேவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஏன், சுந்தரத் தேவன் மட்டும் எதிர் பார்த்தானா என்ன? ஒருகணம் இருவரும் செயலற்று நின்றார்கள். இப்பொழுது சுந்தரத் தேவன் பேசத் தொடங்கினான்.

“மதுரம்! நீ சொல்வது புரியவில்லையே!”

“புரியும்படியாகச் சொல்ல நான் தயாராக இருக்கிறேன். நான் சொன்ன பிறகு ‘நாம் ஏன் கேட்டோம், அவள் ஏன் சொன்னாள்’ என்று நீங்கள் வேதனைப் படக்கூடாது” என்று கூறி அவள் நிறுத்தினாள்.

"என் அன்புத் தங்கையே! நீ ஐந்து வயதுக் குழந்தை யாக இருந்தபோது சோழ மண்டலத்திற்கும் நம் மண்டலத் திற்கும் ஏற்பட்ட பெரும் போரில் விழுப்புண் பெற்று வெற்றி வீரராய் நம் தந்தை மறைந்தார். அவரைத் தொடர்ந்து உன்னை என் கையிலே ஒப்படைத்துவிட்டுத் தாயும் மறைந் தாள். கால வெள்ளங்களைக் கடந்து இருவரும் வாலிபப் பருவத்தை அடைந்து விட்டோம். சின்னஞ் சிறு பிராயத்தில் நாம் இருவரும் இந்த நிலா முற்றத்தில் இருந்து பால் சோறு உண்ட நிகழ்ச்சிகள், நம் பெற்றோர்கள் மறைந்த பிறகு நான் உனக்கு ஊட்டி உண்ண வைத்த நாட்கள், அவையெல்லாம் இன்று என் கண் முன்னே பசுமையாகத் தோன்றுகின்றன மதுரம், நீ வேதனைப்படும்படியாக எதையும் கூறமாட்டாய் என்பது எனக்குத் தெரியும். ஒருவேளை நீ வேதனைப்படும் படியாகக் கூறினாலும் அதை நான் ஒரு பொருளாக எடுத்துக் கொள்ள மாட்டேன் என்பதும் உனக்குத் தெரியும். உன் மனத்தில் உள்ளவற்றை நீ தாராளமாகச் சொல்லலாம்" என்று கூறிவிட்டுத் தன் அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்த சுந்தரத்தேவன் சற்றுத் தொலைவிலிருந்த பொன்னாசனத்தில் அமரும்படி தன் தங்கைக்குச் சைகை காட்டினான்.

தன் கண்களில் உருண்ட நீர்முத்துக்களைத் துடைத்துக் கொண்டாள், மதுரவல்லி

நிலைமையைப் புரிந்துகொண்ட நந்திதேவன் இனிமேல், தான் அங்கே நிற்பது உசிதமல்ல என்று எண்ணலானான்.

"சுந்தரத்தேவரே! அண்ணன் தங்கை அந்தரங்கமான பேச்சிற் கிடையில் அந்நியனான நான் நிற்பது நியாயமல்ல! எனவே இப்போதைக்கு நான் விடைபெறுகிறேன்" என்று கூறிவிட்டுச் சுந்தரத் தேவன் பதிலை எதிர்பாராமலே அங் கிருந்து நழுவ முற்பட்டான்.

"நந்தி தேவரே! நீங்கள் ஓர் உண்மையைச் சொன் னீர்கள்! அதாவது அண்ணன் தங்கைக்கிடையே நீங்கள்

அந்நியர் என்று! ஆனுல் இப்போது நான் என் அண்ண னிடம் மனம் விட்டுப் பேசப் போகின்ற செய்திகளுக்கு மூல வரே நீங்கள் தான்! அவரில்லாமல் உற்சவம் எப்படி நடத்து வது? நீங்கள் இல்லாமல் நான் என் அண்ணனிடம் என்ன பேசுவது? உட்காருங்கள்!'' என்று ஆணையிடும் குரலில் மதுரவல்லி கூறினுள்.

''உட்கார், நந்திதேவா!'' என்று சுந்தரத் தேவனும் கூறவே, வேறு வழியின்றி அங்கிருந்த ஆசனத்தில் நந்தி தேவன் உட்கார்ந்தான்.

''அண்ணு! நமது அரசர் பெருவழுதிப் பாண்டியர் அரியணையில் ஏறியதும் உங்களுக்குரிய மதிப்பினை உங் களுக்குத் தரவில்லை என்ற ஆதங்கம் உங்களுக்கு இருக்கிறது. அது எனக்குப் புரிகிறது. ஆனுல் அதன் பொருட்டு ஆத்திரப் படுவதற்கு என்ன இருக்கிறது?'' என்று மதுரவல்லி அமைதி யான குரலில் கேட்டாள்.

''ஏன் ஆத்திரப்படக்கூடாது? ஒரு பொறுப்புக்கு இரு பொறுப்பை வீரத் தேவனிடம் கொடுத்த அரசர் அந்த இரண்டில் ஒன்றினை ஏன் சுந்தரத் தேவருக்குக் கொடுத் திருக்கக் கூடாது?'' என்று மிகவும் சாமர்த்தியமாகக் கேட்டுவிட்டதாக நினைத்துக் கொண்டு நந்திதேவன் கேட் டான்.

''ஏன் கொடுக்க வேண்டும்?'' என்று மதுரவல்லி அழுத்தந்திருத்தமாகக் கேட்டாள். அதற்கு நந்திதேவன் பதி லொன்றும் சொல்லவில்லை. அவனுல் பதிலொன்றும் சொல்ல முடியவில்லை

''அரசரிடமிருந்து ஏதோ சிறப்பினை அண்ணன் எதிர் பார்ப்பதற்குக் காரணம் என்ன? அரசருக்கும் அண்ண னுக்கும் இருந்த உரிமை மிக்க உறவுதானே! அந்த உறவு நல்ல அன்பின் அடிப்படையில் தோன்றியதா? அல்லது அதிகாரமிகுந்த பதவி ஒன்றினைப் பெறுவதற்காகத்

தோன்றியதா ?'' என்று நந்திதேவனைப் பார்த்து மதுரவல்லி கேட்டாள்.

"இப்படிக் கேட்டால் என்ன பதில் சொல்வது ?'' என்று நந்திதேவன் திருப்பிக் கேட்டான்.

''இப்படித் திருப்பிக் கேட்பதைவிடச் சொல்லமுடிய வில்லை என்று வெளிப்படையாகக் கூறிவிடலாமே! சுந்தரத் தேவர் தன்மீது வைத்திருக்கிற அன்பு, பற்று, பரிவு, பாசம் இவையெல்லாம் காலத்தால் கரையக்கூடியதா? காலங்கடந் தும் நிற்கக் கூடியதா? நிலைக்க வல்லதா?'' என்று அரசர் சோதித்துப் பார்க்க நினைத்திருக்கலாம் அல்லவா?'' என்று மதுரவல்லி கேட்டாள்.

''இந்த நியாயம் வீரத்தேவனுக்கு இல்லையா?'' என்று நந்திதேவன் கேட்டான்

''ஏன் இல்லை? வீரத்தேவருக்குப் படைத்தலைமையினை யும், வேவுக்காரப் படைப்பொறுப்பினையும் நல்கிய அரசர் நாளை உதயத்தில் நடக்கவிருக்கின்ற பட்டமளிப்புப் பெரு விழாவில் அதைவிடப் பெரிய பொறுப்பினை அண்ணனுக்கு அரசர் கொடுக்கலாம் அல்லவா?''

''அல்லவா, போகவா, வரவா? இதெல்லாம் என்ன பேச்சு? இவ்வாறு கருதுவதெல்லாம் முழுமையான அடிமைத் தனம்?'' என்று நந்திதேவன் சீறினன்.

''அடிமைத்தனமல்ல! இராஜவிசுவாசம் காலங்கடந்த காலமாக எங்கள் முன்னோர்கள் ஏற்றி வைத்த தீபம்! அதை, அந்தத் தூண்டா மணிவிளக்கை, இருளகற்றும் பெருஞ்சுடரை ஒரு நந்திதேவரல்ல, ஆயிரம் நந்திதேவர்கள் தோன்றினாலும் அழிக்க முடியாது'' என்று மதுரவல்லி நெருப்பாகச் சீறினள்.

இருந்த ஆசனத்தை விட்டு விரைவாக எழுந்து நின்ற நந்திவேதன். ''சுந்தரத் தேவரே! உங்கள் மீது நான் கொண் டுள்ள அன்பால் இந்த மாளிகையில் அடியெடுத்து வைக்

கிறேன். ஆனால் உங்கள் தங்கையார் என்னைக் குற்றம் சாட்டுவது எனக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. உங்கள் உடன் பிறந்த சகோதரி என்பதால் நீங்கள் வேதனைப்படாமல் இருக்கலாம். ஆனால் என்னால் அவ்வாறு இருக்க முடியாது'' என்று சினம் பொங்க நந்திதேவன் கூறினான்.

''நந்திதேவரே! நீங்கள் வேதனைப்படுவதைப் பற்றியோ விரோதம் கொள்வதைப் பற்றியோ எனக்கு அக்கரையில்லை! என் அண்ணனை வேதனைக்கு ஆளாக்கிடக் கூடாது என்பது தான் என் கோரிக்கை! சுற்றி வளைப்பானேன்? நேரடியாகவே கூறுகிறேன். அண்ணா நீங்களும் கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள். நந்திதேவர் உங்கள் நண்பராக இந்த மாளிகைக்கு வருவதைப் பற்றி யாருக்கும் தடையில்லை. ஆனால் ஆலோசனை கூறுபவராக உங்களுக்கு அறிவுரை நல்குபவராக இங்கே வரவேண்டாம்; வரக்கூடாது! பழி சூழ ஒரு பதவியை நாம் பெறுவதை விடப் பழியில்லாமல் சாதாரண மக்களோடு மக்களாக வாழ்வதே மேல்! நந்திதேவரே இங்கு வந்து உங்களோடு சதுரங்கமாடட்டும்! ஆனால் பாண்டியப் பேரரசை ஒரு சதுரங்கமாக்கி உங்களை ஒரு காயாக வைத்து அவர் விளையாடக்கூடாது! அவர் இங்கே வந்து உங்களோடு மது அருந்தட்டும்! அதைப்பற்றி அக்கறையில்லை. ஆனால் ஆட்சியை ஒரு போதைப் பொருளாக்கி அதன் மூலம் உங்களை மயங்கச் செய்வதை ஒரு போதும் வரவேற்க முடியாது, அண்ணா சுருக்கமாகச் சொல்கிறேன்! நன்மையோ தீமையோ, உறவோ பகையோ, எதுவாக இருந்தாலும் அது நீங்களாக எடுக்கிற முடிவாக இருக்கட்டும்! வெள்ளாற்றங் கரையில் சோழப் பேரரசனோடு நடந்த போரில் தொண்ணூறு விழுப்புண் பெற்று சோமசுந்தரப் பெருமானோடு இரண்டறக் கலந்த பெருவீரரான கடுங்கோ வழுதியின் செல்வமகனான சுந்தரத் தேவருக்குத் தாமே சொந்தமாக முடிவு எடுக்கின்ற தகுதி முழுமையாக இருக்கிறது என்று நான் முழுமையாக நம்புகிறேன் அண்ணா! நம்

தந்தையார் தோள் மீதும் தூய தன் மடிமீதும் வைத்து நம் இருவரையும் கொஞ்சி மகிழ்ந்த முற்றமிது!

மதுரைச் சொக்கேசர் மாண்பால் பிறந்தவர்கள், தங்க மகள் மீனுட்சி தயவால் பிறந்தவர்கள், அங்கமெலாம் பூஞ் சாறு, அத்தனையும் தமிழ்மணமே என்று நம் இருவரையும் கொஞ்சி மகிழ்ந்து நமது அன்னேயார் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டிய இடமிது! இன்று சொல்கிறேன். இனி என் றென்றும் இவ்விடத்தில் இருள் சூழாது காப்பது உங்கள் பொறுப்பு! அண்ணு! இந்த மணிமாளிகையின் வரலாறு சுந்தரத் தேவர் மதுரவல்லியோடு தொடர்ந்ததல்ல! இதற் கென்று பெரிய பாரம்பரியம் இருக்கிறது. நம்மோடு தொடங் கியது அல்ல என்பது போல இது நம்மோடு முடிந்துவிடவும் கூடாது? தன் சுகத்தையே பெரிதாக நினேப்பவன் மனிதப் பிறப்பில் கடையவனுகிருன். பிறர் சுகத்தையே பெரிதென்று நினேப்பவன்தான் முழு மனிதன் என்று நீங்கள் அடிக்கடி சொல்வீர்கள்! அதை நான் இப்போது உங்களுக்குத் திருப்பிச் சொல்லவில்லே. நினேவு படுத்துகிறேன். உண்மை நிலேக்க வேண்டும்; அரசு மீது நாம் கொண்டிருக்கிற பற்று அழியாம லிருக்க வேண்டும் என்பதால் உணர்ச்சிவசப்பட்டு நான் கூறியவற்றில் ஏதேனும் தவறு இருந்தால் நாம் தூக்கி வளர்த்த தங்கைதானே என்று மன்னித்து விடுங்கள்'', என்று கூறிவிட்டு மதுரவல்லி அங்கிருந்து விரைந்து சென்ருள்.

ஆயிரம் எண்ணங்கள் அலேமோதப் பேச வாயற்றவனுகச் சுந்தரத்தேவன் நின்ருன். ஆத்திரம் அலேமோத அதற்கு மேல் அங்கே நிற்பது விரும்பத்தக்கதல்ல என்று எண்ணிய வனுகச் சாரைப் பாம்பைப்போல நந்திதேவன் அங்கிருந்து வெளியேறினுன்.

4. யார் இவர்கள்

கொன்றையூரிலிருந்து பொன்னமராவதி நோக்கிச் செல்கின்ற நெடுஞ்சாலையில் உயர்சாதிக் குதிரையொன்று புயல் வேகமாகச் சென்றுகொண்டிருந்தது.

அச் சாலையில் சிறிது தூரம் சென்றதும் வேவுப்பட்டியை நோக்கிச் செல்கின்ற பாதை பிரிகின்றது. அந்த இடத்தை யொட்டிப் பொன்னமராவதி நெடுஞ்சாலையில் பரந்து விரிந்து நின்ற பேர்ஆலமரங்களின் நிழல் அந்த நிலவுக் காலத்திலும் கூட அந்த இடத்தை இருட் கோலமாக்கிக் கொண்டிருந்தது.

சுருங்கச் சொன்னால் பேரால மரங்களின் நிழல் பேய்களின் கூடாரங்கள் போலக் காட்சி தந்து கொண்டிருந்தது. அந்த இடத்தை நெருங்கிய குதிரை இருட்படலத்துக்குள் நுழைந்ததும் ஒரு கணம் நின்று பிறகு வலப்புறமாகச் சென்ற ஒற்றையடிப் பாதையில் பாய்ந்து செல்லத் துவங்கியது,

அந்தப் பாதை செம்மையான பாதை அல்ல என்றாலும் குதிரை விரைந்து சென்ற முறையிலிருந்து அது அந்தக் குதிரைக்குப் பலமுறை பழகிய பாதை என்பது தெளிவாகத் தெரிந்தது.

இரண்டு கல் தொலைவு சென்றதும் மீண்டும் வலப்புறமாகத் திரும்பிச் சிறிதுதூரம் சென்று அங்கே காணப்பட்ட சிறிய குளம் ஒன்றுக்குப் பக்கத்தில் நின்றது. அந்தக் குளக் கரையில் வளர்ந்தோங்கி நின்ற பொன்கொன்றை மரத்தில்

வெளிப்பட்ட ரம்மியமான மணம் அந்தப் பகுதியெங்கும் பரவி நின்றது. அமைதித் தேவதை ஆட்சி செலுத்த வேண்டிய அந்த இடத்தில் அந்த மரத்திலிருந்து எழுந்த வண்டுகளின் ஒலி அவளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது போல ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

அந்த மரத்தை ஒட்டி, சிறிய மண்டபம் ஒன்று காட்சி யளித்தது. குளக்கரையிலிருந்து மெல்ல நடந்த குதிரை மண்டபத்தின் முன்னே போய் நின்றது. கரிய உடை யணிந்த உருவம் ஒன்று குதிரையிலிருந்து இறங்கியது. அந்த மண்டபத்தின் உள்ளே நுழைந்தது.

'வில்' என்று கரகரத்த குரலில் அந்த உருவம் குரல் கொடுத்தது. உடனே மண்டபத்தின் உள்ளிருந்து 'அம்பு' என்ற குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து தீவட்டி ஏந்திய கையோடு அந்த உருவம் உள் மண்டபத்திலிருந்து வெளியே வந்தது.

"வில்லவா! எத்தனை தொல்லைகள் சூழ்ந்தாலும் இன்று நீ உறுதியாக வந்தே தீருவாய் என்று எனக்கு நன்ருகத் தெரியும் கால வேகத்திலே ஏற்பட்ட புழுதியால் சரித்திரத் தில் நமது பெருமையென்ற கோபுரத்தின்மீது தூசு படிந்திருந் தாலும் அதனைப் போக்க நீ உறுதியாக முயல்வாய் என்று நான் அறிவேன்", என்று கூறி வெளி மண்டபத்தில் நின்ற உருவம் பெரிதாகச் சிரித்தது. அந்தப் பயங்கரமான சிரிப் பொலி மண்டபத்தில் எதிரொலித்துப் பொன்கொன்றை மரத்து வண்டுகளின் ரீங்காரத்தோடு கலந்து அந்தப் பகுதியில் பரவி மறைந்தது.

உள்ளேயிருந்து வெளியே வந்த வில்லவன், "வானவன் கோதை! உன்னுடைய திடமான முயற்சி மட்டும் இல்லா திருந்தால் என்னுடைய எண்ணங்கள் பகற்கனவாகவே மறைந்து ஒழிந்து போயிருக்கும், ஏதோ நான் மீண்டும் அரியணையில் ஏறிட ஆசைப்படுகிறேன் என்று இல்லாமல்

நமது வரலாற்றில் பெரியதொரு மாற்றத்தை உண்டாக்க முயல்கிறேன் என்பதை நீயாவது முழுமையாகப் புரிந்து கொண்டிருக்கிறுயே! என்னுடைய முயற்சிகளுக்கு என் தோளோடு தோளாக நின்று துணைபுரிகிருயே, அதை நான் எப்படி மறப்பேன்! பெருவழுதியின் பெரிய கட்டுக் காவலுக் கிடையே அவனுடைய வேவுப்படையின் கழுகுக் கண்களுக் கிடையே நீ சிக்கிக் கொண்டு விடக் கூடாதே! என்று தான் நான் ஒவ்வொரு கணமும் கவலைப்படுகிறேன்'', என்று கூறினுன். உடனே வந்தவன் வில்லவன் கையிலிருந்த தீவர்த்தியை விரைவாகத் தனது வலக்கரத்தால் பற்றிக் கொண்டு, 'வில்லவா! சாகத்துணிந்தவனுக்கு சமுத்திரமே கால்மட்டுத்தான், எனது தந்திரம் என்ற மந்திரத்தைக் கொண்டு இந்தப் பாண்டியப் பதர்கள் என்னை அடையாளம் கண்டு கொள்ளாது வாழ முடியும். நமது சாம்ராஜ்யத்தை மீண்டும் வாழவைக்க முடியும், என்ற நம்பிக்கை எனக்கு முழுமையாக இருக்கிறது. இந்த அக்கினிமேல் ஆணையாகச் சொல்கிறேன். நான் நினைத்ததை முடித்தே தீருவேன்'', என்று கூறினுன்.

அவன் கண்களிலிருந்து வெளிப்பட்ட ஆத்திர நெருப்பு அந்தத் தீவர்த்தி ஒளியோடு போட்டி போடத் தொடங்கியது. அந்த ஒளியில் அவனுடைய முகத்தைக் கூர்ந்து நோக்கினுல் முன்னரே எங்கோ பார்த்தது போன்ற உணர்வே ஏற்பட்டது. ஆனுல் அது பற்றித் தெளிவாக எண்ண முடியவில்லை.

''வில்லவா! பொழுது விடிவதற்குள் எப்படியும் மதுரையம்பதியைத் தாண்டிவிடும்படியாக இப்பொழுதே புறப் பட்டு விடு!'' என்று கூறிவிட்டு வானவன்கோதை என்பவன் அங்கிருந்து புறப்பட்டான். தான் வந்த குதிரையில் ஏறிக் காற்றெனப் பறந்தான்.

5. கூரம்பு

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான்
தாள் வாழ்க!

—என்று வாழ்வு தந்தவனையே நம் முன்னோர்கள் வாழ்த்தியிருக்கிறார்கள். வாழவைப்பவனை, வாழ்வுக்கு முதலும் இடையும் நிறைவும் ஆனவனை வாழ்த்துவது மிகவும் இன்றியமையாதது.

இறைவனுக்கு இணையான மாமன்னர்களையும் மக்கள் மனமகிழ்ந்து வாழ்த்தியிருக்கிறார்கள்.

ஆலயத்து மணியோசையைக் கேட்கின்றபோது அகமென்னும் பெருவெளியில் பக்திப் பயிர் பசுமையோடு தலை நிமிர்ந்து ஊஞ்சலாடத் தொடங்குகிறது.

யாழோசையைக் கேட்கின்றபொழுது இசை ஞானம் உடைய எழிலரசியருக்குப் பாட்டிசைக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளப் பெருவெளியில் பரவத் தொடங்கி விடுகிறது.

அப்படித்தான் 'வெற்றிவேல்! வீரவேல்!' என்று முழக்கமிடுகிறபொழுது வெறும் வேலை வெற்றிவேலாக்கி விடவேண்டும் என்ற வேகம் உள்ளம் என்ற பெருங்களத்தில் நடைபோடத் துவங்கிவிடுகிறது.

கருவியில் என்ன இருக்கிறது? அதனைக் கைக் கொள்ளு வார் திறனிலேயே அந்தப் பொருளின் பெருமை பளிச்சிடத் தொடங்குகிறது.

எல்லா வேலும் வேலாகுமா? வேலன் கைவேல் போல் அவையாகுமா?

அவ்வாறுதான் வெற்றிகளைக் குவித்த வீரமன்னனுடைய வேலும் தெய்வத் திருவேலாகக் கருதப்படுகின்றது.

இவ்வாறுதான் கொடியிலே கொள்கையையும் கருவி களிலே வீரத்தையும் உழைப்பிலே பண்பாட்டையும் மனித இனம் வளர்த்துவந்திருக்கிறது.

உலகத்தின் இருளை நாள்தோறும் அகற்றியே தீருவேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டவன் போலக் கீழ்வானத் தில் ஆதவன் தன் ஒளிக் கதிர்களைப் பரப்பத் தொடங்கினான்.

பொன்னமராவதியின் கோட்டை வாயிலின் இருபுறமும் இருந்த பெருமாடங்களிலிருந்து உதய காலத்து முரசுகள் முழங்கின.

பெரும் சப்தத்தோடு கோட்டைக் கதவுகள் திறக்கப் பெற்றன.

'பெருவழுதி மாமன்னர் வாழ்க!' 'மீனக் கொடியோன் வாழ்க!' 'வெற்றி வேல்! வீர வேல்!' என்ற முழக்கங்கள் நகரின் உட்பகுதியிலிருந்து எழுந்து அலையலையாகப் பரவிக் கோட்டை மதில்களையும் தாண்டி ஒலித்துக்கொண்டிருந்தன.

எப்போது கோட்டைக் கதவுகள் திறக்கப்பெறும் என்று வெளிப்புறத்தே காத்துக் கொண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மன்னனை வாழ்த்தியபடியே முட்டி மோதிக் கொண்டு கோட்டை வாயிலைக் கடந்து உள்ளே செல்லத் தொடங்கி னார்கள்.

வந்தவர்கள் அனைவரும் புத்தாடை புனைந்திருந்தார்கள். பெண்கள் எல்லாம் வண்ண வண்ண ஆடைகள் அணிந்து

விளங்கியதோடு அழகு பெற வாரி முடிக்கப் பெற்றிருந்த கூந்தலிலே பல வண்ண மலர்களைச் சூடியிருந்தார்கள்.

சில வாலிபர்கள் கார்குழலார் சூடிக் கொள்ள வேண்டிய காந்தள், இருவாட்சி, சம்பங்கி போன்ற மலர்களைத் தங்கள் காதுகளிலே வைத்துக் கொண்டு கன்னிப் பருவத்தினரை ஒய்யாரமாகப் பார்த்தபடி நடந்து கொண்டிருந்தார்கள்.

இந்த நிலையில் தொலைதூரத்திலிருந்து விரைந்து வந்த குதிரை ஒன்று கூட்டத்தினிடையே விரைந்து பாய்ந்து சென்று மறைந்தது.

அப்படி வந்த குதிரை நந்திதேவனுடையது என்பதை யும், அதில் வந்தவன் நந்திதேவன்தான் என்பதையும் அறிந்த மக்கள் அதிர்ச்சியடையத்தக்க வகையில் அப்படிச் சென்ற அவனைப்பற்றி அவதூறுகப் பேசி முணு முணுத்தார் கள்

இந்த நிலையில் மீண்டும் குதிரைகள் வரும் காலடியோசை கேட்டது.

பழைய அனுபவத்தை மனத்தில் கொண்ட கூட்டத்தினர் விரைந்து இருபுறமும் ஒதுங்கினர்கள்.

ஆனுல் அவர்கள் நினைத்த வண்ணம் குதிரைகள் பாய்ந்து வரவில்லை.

பன்னிரெண்டு குதிரைகள் பக்குவமாக அணிவகுத்து வந் தன. அராபிய நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட அந்தக் குதிரைகளின் அழகைப் பார்த்தே மக்கள் மயங்கி நின்றனர்.

அந்தக் குதிரைகளின் மீது வீரமும் திருவும் வெற்றியும் தமது அணிகலன்களாகக் கொண்ட பெருவீரர்கள் வீற்றிருந் தார்கள்.

அந்தக் குதிரைகளைத் தொடர்ந்து இரண்டு உயர்ஜாதிக் குதிரைகள் பூட்டப்பெற்ற முத்துமணித் தேர் ஒன்று வந்து கொண்டிருந்தது.

அதில் பெருவீரரான சுந்தரத்தேவர் வந்து கொண்டிருந் தார்.

அந்தத் தேருக்குப் பின்னே சிறந்த வீரர்கள் சுமக்க முத்துப்பல் லக்கு ஒன்று வந்து கொண்டிருந்தது.

வானத்து நிலவு வையத்திற்கு வந்து அந்தப் பல்லக்கிலே வீற்றிருக்கத் தொடங்கிவிட்டது என்று எல்லோரும் எண்ணும் வண்ணம் நிலவரசியான கொன்றையூர் இளவரசி மதுரவல்லி அதிலே வந்துகொண்டிருந்தாள்.

வழியெங்கும் இருபுறமும் அணிவகுத்து நின்ற மக்கள் இந்தக் கண்கொள்ளாக் காட்சியைப் பார்த்து வியந்து நின்ருர்கள்.

'கொன்றையூர் இளவரசர் வாழ்க!' 'கொன்றையூர் இளவரசி வாழ்க!' — என்று அவர்கள் மனமகிழ்ந்து முழக்கி ஞர்கள்.

இந்த அணிவகுப்புகள் சிறிது தூரம் சென்றதற்குப் பிறகு ஆற்றின் இரு கரைகளும் ஒன்று சேர்ந்ததுபோல இருபுறமும் ஒதுங்கி நின்ற மக்கள் ஒன்று சேர்ந்து நடக்கத் தோடங்கினுர் கள்.

மீண்டும் கோட்டைப் பெருவாயில் பக்கத்திலிருந்து குதி ரைகள் வரும் காலடியோசை கேட்கத்தொடங்கியது.

திரும்பிப் பார்த்த மக்கள் அதிர்ச்சியடையாதவர்களாக யார் வருகிருர்கள் என்ற ஆர்வம் உந்தச் சாலையின் இருபுற மும் ஒதுங்கி நிற்கத் தொடங்கினுர்கள்.

தொலைதூரத்தில் வந்து கொண்டிருந்த குதிரைகள் கூட் டத்தினருக்கு அருகே வரத் தொடங்கின.

நூற்றிற்கும் மேலான உயர்ஜாதிக் குதிரைகள் மீது வீரர் கள் அமர்ந்து தன்னைப் பின் தொடர்ந்துவர, 'பஞ்சகல்யாணி' யென்று சிறப்பிக்கப் பெறுகின்ற உன்னதமான குதிரை

யொன்றின் மீது ஆண்மைக்கும் வீரத்துக்கும் இலக்கணம் வகுத்தது போன்ற பேரழகும் பெருமிதமும் பெருவீரமும் கொண்ட தோற்றமுடைய இளைஞன் ஒருவன் வந்து கொண்டிருந்தான்.

வானத்து வீதியிலே பவனிவர வேண்டிய தேவன் எவனோ ஒருவன் இந்த வையத்து வீதியிலே வழிதவறி வந்து விட்டானோ என்று எண்ணும் வண்ணம் அவனுடைய தோற்றம் பொலிவு பெற்றதாக விளங்கியது.

கரிய நிறத் திருமாலின் அழகுருவும் ஆறுல் செய்யவனின் நிறங்கொண்ட மேனியும் விளங்க வெற்றி வீரனாக அந்தப் புரவியின் மீதமர்ந்து வந்தவன் யார்?

கரை புரண்டு நின்ற மக்கள் கூட்டமே அவனைப் பார்த்ததும் மெய்சிலிர்த்து 'வீரத்தேவர் வாழ்க!' என்று அவன் நாமம் கூறி வாழ்த்தினார்கள்.

வாழ்த்திய மக்களை நோக்கி, தலைதாழ்த்தி இரு கரங் குவித்தான் வீரத்தேவன்.

மீண்டும் மக்கள் 'வேவுநகர் வீரத்தேவர் வாழ்க!' என்று வாழ்த்தினார்கள்.

பல்வேறு பகுதியிலிருந்து வருகின்ற கிளைநதிகள் என்ற குழந்தைகள் எல்லாம் கடல் தாயின் அலைக்கரங்களில் தவழ்வது போல பக்கத்து ஊர்களில் இருந்து வந்த சிற்றரசர்களும், நாற்படை வீரர்களும் மக்களும் பொன்னமராவதி அரண்மனை மைதானத்தை அடைந்தனர். பெருமன்னர் இறந்ததற்குப் பின் பெருவழுதிப் பாண்டியார் முடிசூட்டிக்கொள்ளுகின்ற விழாவினை ஒட்டியே அவர்கள் திரண்டிருந்தனர்.

நகர் விழாக்கோலம் பூண்டிருந்தது. குறுநில மன்னர்கள் எல்லாம் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஆசனங்களில் அமர்ந்தனர்.

வெளியூர்களிலிருந்து வந்த அரச குடும்பத்து மாதர்கள் எல்லாம் அரண்மனைக்குள் சென்று அரச மைதானத்தை நோக்கியிருந்த முற்றமதை அடைந்து, தத்தமது இருக்கைகளில் அமர்ந்தனர்,

வீரமுரசு, கொடை முரசு ஆகியவை மும்முறை ஒலித்தன.

எழுத்தோலை நாயகம், எண் பேராயத்தார், ஐம்பெருங்குழுவினர், அமைச்சர்கள் ஆகியோர் புடைசூழப் பெருவழுதிப் பாண்டியன் அரண்மனையின் உள்ளிருந்து அரச மைதானத்து முற்றத்தில் விளங்கிய அரியணையை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

மன்னர் பின்னோர் என்று வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பெற்ற வணிகர்குலப் பெருமக்கள் மன்னனது முடியை ஏந்தியவர்களாக அரியணைக்குச் சற்றுத் தொலைவில் நின்றுகொண்டிருந்தவர்கள் மன்னனை வரவேற்க அரியணையை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

மன்னன் அரியணைக்கு அருகே வருவதற்கும் வணிகர் குழுத்தலைவர் அரியணைக்கு அருகே வருவதற்கும் மிகவும் பொருத்தமாக இருந்தது.

'மீனக்கொடியோன் வாழ்க! பெருவழுதிப் பாண்டியர் வாழ்க!' என்ற வாழ்த்தொலிகள் விண்ணளவும் எழுந்தன. இந்த நிலையில் திருமுகம் ஒன்றைத் தாங்கிய கூரம்பு ஒன்று அரியணைக்கு முன்னே பாய்ந்து வந்து குத்தி நின்றது.

6. வெற்றிமுரசு

நன்மை தீமை, அறம் மறம், ஒளி இருள், இன்பம் துன்பம், எழுச்சி வீழ்ச்சி என்று உலகம் ஒன்றுக்கொன்று மாறுபட்ட இருவகைக் கூறுபாடுகளோடு இயங்குகின்றது. என்றாலும் மனித இனம் நன்மையையே விரும்புகிறது; சுகத்தையே நாடுகிறது; இன்பத்தையே விழைகிறது.

பிறருக்குத் தீமை செய்பவன் கூட, தான் நன்மை அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் தான் செய்கிறான்.

ஆயினும் மகிழ்ச்சி என்ற வெண்புறு பொன்னமராவதி அரண்மனைத் திறந்தவெளி அரங்கில் பறந்துகொண்டிருந்த வேளையில் அதன்மீது யாரோ கரியவண்ணத்தைச் சிறிது தெளித்தது போல அரியணைக்கு முன்னே கூரம்பு பாய்ந்த நிகழ்ச்சி அமைந்தது.

களிப்புக்கடலிலே மூழ்கிய மக்கள் கூட்டம் ஒரு கணத்திலேயே கலவரப் புயலிலே சிக்கித் தவிக்கத்தொடங்கியது.

'என்ன நடந்தது? ஏது நடந்தது?', என்று மகளிர் பகுதியிலிருந்து கவலைக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின.

மெய்காப்பாளர்கள் உறையிலிட்ட வாளை உருவினார்கள்; உயர்த்தினார்கள்.

தலைமைத் தன்மை பொருந்திய அரசியல் அதிகாரிகள் பெருவழுதிப்பாண்டியனைச் சூழ்ந்து கொண்டார்கள். மைதா

னத்திலே அமர்ந்திருந்த மக்கள் அதிர்ச்சிக்குரல் எழுப்பிய படியே எழுந்து நிற்கத் தொடங்கினர்கள்.

நின்ற நிலையிலிருந்து சிறிது தூரம் முன்வந்த பெருவழுதிப் பாண்டியன் அருகிலிருந்த மேடைமீது ஏறிக் கூட்டத்தினரைப் பார்த்துப் அமைதியாக இருக்குமாறு கையமர்த்தினர்.

'அரசனுக்கு என்ன நேர்ந்ததோ?', என்று அதிர்ச்சியடைந்த மக்கள் அவனைக் கண்டதும் அமைதியடைந்தனர். ஆனந்தம் கொண்டனர். 'வீரவேல்! வெற்றிவேல்', 'மீனக் கொடியோன் வாழ்க! பெருவழுதிப் பாண்டியன் வாழ்க! என்று முழக்கமிட்டனர்.

மின்னலுக்குப் பின் தோன்றும் இடியைப்போல மின்னல் போல் அம்பு பாய்ந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இடிபோல அவர்கள் முழங்கினர்கள்.

கையமர்த்திய பின்னர் எழுத்தோலை நாயகத்தை நோக்கி, ''அம்போடு மடல் ஒன்று வந்திருக்கிறது. எழுத்தோலை நாயகமே! அதை எடுத்துப் படியுங்கள்!'' என்று கம்பீரமான குரலில் பெருவழுதிப் பாண்டியன் கூறினன்.

மைதானமெங்கும் பேரமைதி நிலவியது. வீரர்தலைவன் ஒருவன் விரைந்து சென்று பாய்ந்திருந்த அம்பினைப் பற்றிப் பறித்து மிகுந்த பணிவோடு அதனை எழுத்தோலை நாயகத்திடம் கொடுத்தான்.

அம்பினைச் சுற்றியிருந்த மடலை எழுத்தோலை நாயகம் பிரித்தான். படிக்க முனைந்தான். ஆர்வத்தோடு அனைவரும் கேட்க முனைந்தனர். மன்னன் எழுத்தோலை நாயகத்தை நோக்கி, ''படியுங்கள்; நீங்கள் மட்டுமே படித்துக்கொள்ளுங்கள். ஏன், அதுகூட வேண்டாம், மர்மத்தின் எல்லையாக, எய்யப்பட்ட அம்பு, மாபெரும் ரசசியம் என்று எழுதப்பட்ட மடல் அதிலே என்ன இருக்கிறது என்பதனை நான் சொல்லிக்

கொண்டே வருகிறேன். எழுத்தோலை நாயகமே! அது சரி யாக இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டே வாருங்கள்!

"பாண்டியர் பாரம்பரியம் என்ற மாபெரும் மலையைக் கட்டிக் காக்க முன் வந்திருக்கும் சின்னஞ்சிறு புழுவே! நீ ஒன்றுமறியாத சிறுவனான வீரத்தேவனை இருபெரும் படைகளின் தளபதியாக்கி உன்னையும் உனது நாட்டையும் காத்துக் கொள்ள முனைந்திருக்கும் ராஜதந்திரம் வெட்கக் கேடானது. அந்தத் தளபதிச் சிறுவனின் ஆற்றலுக்கு ஒரு சவால்! பதினைந்து நாட்களுக்குள் இந்த மடலை எழுதியது யார்? கூரம்பில் இதனை வைத்து எய்தது யார்? என்பதனை அவன் கண்டு பிடிக்கிறானா பார்! அதுவரை அவனைத் தளபதியாக்கும் தரமற்ற செயலை நிறுத்திவை!"

மடலில் இருந்தவற்றை ஓர் எழுத்துக்கூட மாருது மன்னவன் கூறிவந்ததைக் கேட்ட எழுத்தோலை நாயகம் வியப்பே உருவாக, "மன்னர் மன்னவா! நீங்கள் சாதாரண மனிதர் அல்ல! எங்கள் கண்கண்ட தெய்வம்! சோமசுந்தரப் பெருமானே எங்கள் மன்னராக உருவாகி வந்திருக்கிறார். அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் நடத்துவதற்காக அறுபத்து நான்கு வேடங்களைத் தாங்கிய அந்த எம்பெருமானே அறுபத்தைந்தாவதாகப் பெருவழுதிப் பாண்டியராக உருமாறி வந்திருக்கிறார் என்றே நான் கருதுகின்றேன்"என மெய்சிலிர்க்கக் கண்களில் நீர் பனிக்க எழுத்தோலை நாயகம் கரங்குவித்த படியே கூறினார்.

அங்கு நின்ற அரசியல் பேரதிகாரிகள் எல்லாம் கரங் குவித்தனர். வாணிபச் செல்வர்கள், "நமச்சிவாயம் வாழ்க! நாதன் தாள் வாழ்க! கண்கண்ட தெய்வமாம் நம் மாமன்னர் வாழ்க!" என்று முழக்கினார்கள்.

மன்னனின் அறிவையும் ஆற்றலையும் கண்டு கடல்போல் கூடியிருந்த மக்கள் அலையொலிபோல் வாழ்த்தொலிகளை எழுப்பினர். மன்னன் அனைவரையும் நோக்கி, கையமர்த்திய

பின் மிகவும் உருக்கத்தோடும் உணர்ச்சியோடும் பேசத் தொடங்கினான்.

"என்னைப் புழுவாக மதித்துப் புறப்பட்டுவந்த அம்பில் இணைக்கப்பட்டிருந்த மடலில் பதினைந்து நாட்களுக்குள் எழுதியவன் யார் என்றும் அம்பு எய்தவன் யார் என்றும் வீரத்தேவன் கண்டுபிடித்தால் தளபதியாக்கலாம் என்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. கூறியவர்களுக்கு ஒன்று சொல்வேன். பதினைந்து நாட்களுக்குப் பிறகல்ல! பதினைந்து நாழிகைகளுக்கு முன்னரே இதனை எழுதியவன் யார் என்பதையும், அம்பை எய்யப் போகிறவன் எவன் என்பதையும் ஒருவன் எனக்குத் தெரிவித்து விட்டான். அவன் பாண்டியர் பாரம்பரியத்தின் பெருமைதான் தன் பெருமை என்று கருதுபவன். மீனக் கொடிக்கு இழுக்கு என்றால் தன் உயிரைத் தானம் தரவும் தயங்காதவன். அறியவேண்டியவற்றை அறிகின்ற காலத்தில் அறிகின்ற ஆற்றல் பெற்றவன்.

"அவன்தான் வீரத்தேவன்! அவனை இருவகைப் படைகளுக்கு மட்டுமல்ல, நால்வகைப் படைகளுக்குமே தளபதியாக்குகிறேன்," என்று அரசன் உரத்த குரலிலே கூறினான்.

வீரத்திற்கு விளக்கமாக, வெற்றித் திலகமாக, ஆண்மைக்கு அணிகலனாக, அன்பிற்கும் பண்பிற்கும் உறைவிடமாக விளங்கிய வீரத்தேவன் மன்னன் பாதகமலங்களில் வீழ்ந்து வணங்கினான். வெற்றி முரசு இடிபோல் முழங்கத் தொடங்கியது.

இந்த நிலையில் மைதானத்தின் இடப்புறத்திலிருந்து பெரும் கூக்குரல் ஒன்று எழுந்தது. அனைவரும் அத்திசையை நோக்கினர்.

7. வணிகர் தந்த வைரமுடி

தீவர்த்தியும் கொள்ளியும் நெருப்பு என்ற நிலையால் ஒன்ருயினும் பலனுல் எவ்வளவு வேறுபட்டு விடுகின்றன.

இவ்வாறுதான் மனித குலமும் பிறப்பால் ஒன்ருனலும் பண்பால் எவ்வளவு வேற்றுமைகளைத் தன்னுடையனவாக ஏற்று விளங்குகின்றது.

மண முரசுகேட்டு வருந்துபவனும் பிணப்பறை கேட்டு மகிழ்பவனும் காலகாலங்களாகத் தோன்றிக் கொண்டுதான் இருக்கிருன்.

மனிதனுக்கு, நன்மையும் தீமையும் மற்ருெரு பிறவியால் வராமல் அவனுலேயே வரவேண்டும் என்பதே ஆண்டவன் கட்டளை. கட்டளை என்பதைவிட படைப்பில் அவன் கைக் கொண்ட தந்திரம் என்றே அதைச் சொல்லலாம்.

பாண்டியன் பெருவழுதிக்கு முடி சூட்டுவிழா. வீரத் தேவன் தளபதியாகப் பதவி ஏற்கும் விழா என்ருல் இது கண்டு ஏன் சிலர் எரிய வேண்டும்? மடல் தன்னை வைத்து மர்ம அம்பு ஒன்றை ஏன் எய்ய வேண்டும்? மன்னவன் சாதுர்யத்தால், ஏற்பட்ட பரபரப்பு அடங்கி அமைதி ஏற்பட்ட போது மீண்டும் மைதானத்தின் இடப்புறத்திலிருந்து வந்த ஒலிகள் அனைவரையும் பெரும் திகைப்பில் ஆழ்த்தின.

மிகவும் போற்றத்தக்க தோற்றமுடைய திடகாத்திரமான நான்கு வீரர்கள் குட்டையாகவும் பார்ப்பதற்கு மிகவும் விகாரமாகவும் இருந்த ஒருவனை இழுத்துக்கொண்டு வந்தார்கள். ஆயிரம் ஆயிரம் வீரர்கள் அங்கே அணிவகுத்து நின்ற காட்சியையும் தன்னைப் பிடித்துள்ளவர்கள் மிகவும் பலசாலிகள் என்பதையும் அவன் நன்கு அறிந்துகொண்டிருந்தாலும் வேண்டுமென்றே அவன் அவர்கள் பிடியிலிருந்து விடுபடுவதற்காகத் திமிரிக்கொண்டிருந்தான். அப்படிச் சொல்வதைவிடத் தன் எதிர்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தவே அவன் முயன்ருன்; அடம்பிடித்தான்.

மன்னனை அந்த வீரர்கள் நெருங்க நெருங்க அந்தக் குட்டையனின் திமிரான நடவடிக்கைகள் அதிகமாயின. முன்னர் அவன் மேற்கொண்ட செயல்களால் பொறுமை இழந்திருந்த அந்த வீரர்கள் மன்னன் அருகில் வந்த பிறகும்கூட அவன் மரியாதைக் குறைவாக நடந்தது கண்டு பெரும் ஆத்திரத்திற்கு ஆளானுர்கள்.

ஒரு கணம் அவர்கள் நடக்காமல் நின்ருர்கள். அவன் இரண்டு கால்களையும் தூக்கிக்கொண்டு தொங்கத் தொடங்கினுன். ஆத்திரத்தின் எல்லையைக் கடந்த வீரர்கள் அவனைக் கை உயருமட்டும் தூக்கிப் 'பொத்'தென்று கீழே போட்டார்கள்.

வலி தாங்காது அவன் அலறினுன். கீழே உட்கார்ந்த நிலையில் இருந்த அவனைத் தூக்கி நிறுத்தி அவன் கைகள் இரண்டையும் பின்புறமாக இணைத்துப் பிணைத்து வலுவாகப் பிடித்தபடியே அந்த வீரர்கள் அவனை இழுத்துக்கொண்டு போய் அரசன் முன் நிறுத்தினுர்கள்.

"மன்னர் மன்னவா! எழுநிலை மாடத்தின் தூண் ஒன்றின் பின்னிருந்து இவன்தான் அந்த அம்பை எய்தான்.

வீரத்தேவர் ஆணைப்படி நாங்கள் இவனைப் பிடித்து வந்தோம்!'', என்று சிரந் தாழ்த்தியபடியே அந்த வீரர்கள் கூறினார்கள்.

''என்னைக் கொன்றாலும் சரி! நான் ஒன்றும் சொல்ல மாட்டேன்'', என்று அந்தக் குட்டையன் அலறிவிட்டு பயங்கரமாக ஒரு முறை சிரித்தான்.

புன்னகை புரிந்த பெருவழுதிப் பாண்டியன், ''நான் உன்னை ஒன்றும் கேட்கப் போவதில்லை. உன்னிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியதும் ஒன்றும் இல்லை. அம்பிலே இணைக்கப் பெற்ற மடலில் என்ன எழுதியிருந்தது என்பதனை நான் அறிந்துகொள்ளத் தணை நின்ற எனது வேவுக்காரப் படையின் திறன், 'நீ யார்?' 'யாரால் ஏவப்பட்டவன்' என்பதனை அறிந்து கொள்கின்ற ஆற்றலில் மட்டும் செத்து விடமாட்டாது. நான் இப்போது உன்னை அழிக்கப் போவதில்லை. ஒன்று உருவாகிற நேரத்தில்-புதிய பாரம்பரியம் ஒன்று பாண்டியர் வரலாற்றில் தொடங்குகின்ற இந்த நல்ல நேரத்தில்—ஒநாயை விடக் கேவலமான உன்னை அழிக்கும் கீழான செயலை நான் மேற்கொள்ளப் போவதில்லை. நீ எய்யப்பட்டவன், எய்தவனே எனக்கு இன்றியமையாதவன். காலம் வரும்போது பாண்டியர் பரம்பரையால் அவனுக்குக் காலன் வருவான். அந்தக் காட்சியை நீ காண வேண்டாமா?'' என்று கூறி மெல்லச் சிரித்த பெருவழுதிப் பாண்டியன் அந்த அலங்கோலக்காரனைப் பாதாளச் சிறையிலே தள்ளும்படி ஆணையிட்டான்.

அந்த வீரர்கள் அவனைப் 'பரபர'வென்று இழுத்துக் கொண்டு போனார்கள். ஏனோ சுந்தரத் தேவன் முகத்திலும் நந்திதேவன் முகத்திலும் கருமை படர்ந்தது.

உதய காலத்திற்கு முன்னே தோன்றுகின்ற இருளைப் போல அங்கே சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்றாலும்

அதன் பின்னே ஆதவனது உதயம்போல ஆனந்தமான நிகழ்ச்சிகள் நடக்கத் தொடங்கின.

வெற்றி முரசுகள் தொடர்ந்து ஒலிக்கத் தொடங்கின. வீரர்கள் அணிவகுத்து நின்றார்கள். மங்கல இசைகள் முழங்கத் தொடங்கின.

பெருவழுதிப் பாண்டியனின் முடிசூட்டு விழாவைக் காணக் கந்தருவ மாதர் கணக்கின்றி வந்ததுபோல் பருவப் பெண்கள் எல்லாம் காட்சி தந்தார்கள். தொடர்ந்து மோதும் கடல் அலைகள் போலக் கூடியிருந்தோர் வாழ்த்தொலிகளை எழுப்பிக் கொண்டே இருந்தார்கள்.

வணிகர் தலைவரான நவரத்தின வணிகர், தங்கத் தாம்பாளத்தில் மன்னனது வைர முடியை வைத்து ஏந்திய வண்ணம் மன்னன் அருகில் வந்தார். அவரைப் பின் தொடர்ந்து வணிகப் பெருமக்கள் வந்தார்கள்.

இந்தக் கண்கொள்ளாக் காட்சியை அரசமாதரோடு இருந்த வணிகர்கள் குடும்பத்து ஆச்சிமார்கள் கண்டு பெருமகிழ்வு கொண்டனர்.

ஆரவாரம் அடங்கியது.

நவரத்தின வணிகர் தன் உடனின்ற பெருவணிகரிடம் தாம்பாளத்தைக் கொடுத்துவிட்டு இருகரங்குவித்து மன்னனை வணங்கினார்.

"தென்னாடுடைய சிவனே போற்றி!" என்று அவர் குரல் எழுப்ப, மற்ற வணிகர்கள் "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!" என்று குரல் கொடுத்தனர்.

"வந்தவர்களை ஆதரிக்கின்ற பெரும் பண்பு தமிழ் நிலத்திற்குச் சொந்தமானது என்பதற்கு எடுத்துக்காட்டாகப் பாண்டிய மன்னர்கள் விளங்குகிறார்கள்.

நாங்கள் சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள். பூம்புகார்ப் பட்டினத்தில் வாழ்ந்தவர்கள். கரை கடவாத் திருமடந்தை யான கடலன்னை கரை கடந்துவிட்டதனுல் எங்கள் கண் களின் கரையைக் கண்ணீர் கடக்கும் நிலை ஏற்பட்டது. மாட மாளிகைகளைக் கூடகோபுரங்களை, அணிமணிகளை, அன்னையரை, பிள்ளைகளை இழந்த எம் முன்னேர் பாண்டிய நாட்டை அடைந்தனர்.

எங்கள் கண்ணீரைத் துடைத்து வாழ வழி தந்த பாண்டிய வேந்தர் பரம்பரைக்குக் காலகாலங்களுக்கு நாங்கள் கடமைப்பட்டவர்கள். புகார் போனுலென்ன? கொற்கை இருக்கிறது என்று அவர்கள் காட்டினுர்கள்.

சோழப் பெருநாட்டில் பரம்பரை பரம்பரையாக மன்னர் களுக்கு முடியெடுத்துக் கொடுக்கின்ற பணி, கொள்வது மிகை கொளாமலும், கொடுப்பது குறைபடாமலும் வாழ்ந்த எங்கள் பரம்பரைக்கே உரியதாக இருந்தது.

அந்த உரிமையினையும் எங்களுக்குத் தந்த பாண்டியப் பெருவேந்தர்களின் திருவடிகளுக்கு எங்கள் தாழ்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேம்

நமது மன்னர் பெருவழுதிப் பாண்டியர் அறிவாலும் ஆற்றலாலும் ஆட்சித் திறத்தாலும் நிகரற்றவர். அவர்கள் தந்தையார் இருந்தபோதே அவர்கள் ஆற்றல்கள் வெளிப் படத் தொடங்கின.

பெருமன்னர் இறைவனைப் போலவும், இவர்கள் முருகனைப் போலவும் விளங்கினுர்கள் என்றுலும் மிகை ஆகாது.

தோன்றுத் துணையாக நின்று நம்மை வாழவைக்கும் அங்கயற்கண் ணியையும், சோமசுந்தரப் பெருமானையும்

வாழ்த்தி வணங்கி இந்தத் திருமுடியினை மன்னர் பெருமானுக்குச் சூட்டுமாறு அமைச்சர் பெருந்தகையார் அம்பலவாணர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்'', என்று கூறி நவரத்தின வணிகர் முடியை எடுத்து அம்பலவாணரிடம் கொடுத்தார்.

முதுமையின் சின்னமாக விளங்கிய அம்பலவாணர் அதனைப் பெற்றுப் பெருவழுதிப் பாண்டியனுக்குச் சூட்டினார்.

வாழ்த்தொலிகளும், இசை முழக்கங்களும், முரசுகளின் ஒலியும் விண்ணைத் தொட்டுத் திரும்பின.

8. ஏழிசை யரசி

பக்தி என்ற உணர்ச்சியின் மூலம் உள்ளம் பக்குவப்பட்டு விடுகிறபோது பணிவு தானே வந்துவிடுகிறது.

மக்களுக்காகவே மன்னன் என்ற சித்தாந்தத்திற்குப் பெரும்பாலான பாண்டிய மன்னர்கள் எடுத்துக்காட்டுகளாக விளங்கியதற்குக் காரணம் சோமசுந்தரப் பெருமான் மீதும் அங்கயற்கண்ணி மீதும் அவர்கள் தொடர்ந்து வைத்திருந்த பழுதற்ற பக்தியேயாகும்.

பெருவழுதிப் பாண்டியன் முன்னோர்கள் காலப்போக்கில் மதுரையம்பதியை விட்டுப் பொன்னமராவதியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தார்கள் என்றாலும் நீதி நெறி, பக்தி, செங்கோல் முறைமை இவற்றிலிருந்து வழுவாதவர்களாகவே வாழ்ந்து வந்தார்கள்.

சுருங்கச் சொன்னால் தலைநகர் மாறினாலும் தன்மை மாறாதவர்களாகவே திகழ்ந்தார்கள்.

அவர்கள் வழி வந்த பெருவழுதிப் பாண்டியன் இளமை முதலே அரிய குணங்களின் ஓர் உருவமாக விளங்கி வரலானான். அவனுக்கு முடிசூட்டிய விழா கண்கொள்ளாக் காட்சியாகக் கருத்திற்கு விருந்தாக விளங்கியது என்றாலும் போற்றுவார் போற்றுதலையெல்லாம் இனிப்புகழ் பெறுவதற்

குரிய வாய்ப்பாகவே அவன் கருதினானே அல்லாது ஒரு சிறிதும் தற்பெருமையாகக் கொள்ளவில்லை.

நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவித்த அவன் சோழப் பெருநாட்டிலிருந்து பாண்டியப் பெருநாட்டிற்கு அடைக்கலம் என்று வந்து அறநெறி பிறழாது வாழ்ந்து வந்த மன்னர் பின்னோரான வணிகர்களைப் போற்றினான்.

பின்னர், தனக்கு முடிசூட்டிய, தந்தையனைய அமைச்சர் அம்பலவாணரைப் போற்றி வணங்கினான்.

பின்னர் அவையோரை நோக்கிச் சில செய்திகளைச் சொல்லலானான்.

''மன்னனை உயிர் என்றும், மக்களை உடலென்றும் சங்கப்புலவரும், மக்களை உடல் என்றும், மன்னனை உயிர் என்றும் கம்பநாடரும் கூறியுள்ளார்கள். எவ்வாறாயினும் மன்னரும் மக்களும் ஒருவருக்கொருவர் ஒன்றியவர்கள் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகிறது. மக்கள் தொண்டே மகேசுவரன் தொண்டு என்பார்கள். சாதாரணத் தொண்டு செய்பவர்களுக்கே அந்த நிலை என்றால் ஒரு மன்னனுடைய பொறுப்பு மிகுதியானது என்று நன்கு உணர்கிறேன். மக்களுக்கு நன்மை செய்வது என்ற என்னுடைய பயணத்தில் எனது உற்ற தோழர்களான சுந்தரத்தேவனும் வீரத்தேவனும் உடன் வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எய்பவன் சாமர்த்தியசாலியாக இருப்பதோடு எய்யப்படுகிற அம்பும் கூர்மையுடையதாக இருக்கவேண்டும். அரசாளும் மன்னனுக்குத் துணை நிற்பவர்கள் ஆற்றல் மிகுந்தவர்களாக இருந்தால்தான் ஆட்சித்தேர் தங்கு தடையின்றி ஓடும். நமதமைச்சர் அம்பலவாணர் அவர்கள் வயதிலே முதிர்ந்தவர்களாக இருந்தாலும் அறிவிலும் ஆற்றலிலும் மதிநுட்பத்திலும் என்றும் வல்லவர்கள். அவர்களுக்குத் துணையாகக் கொன்னையூர் இளவரசன் சுந்தரத் தேவனை ஓர்

அமைச்சராக நியமிக்கிறேன். சுந்தரத் தேவனை அமைச்சராக நான் நியமித்து விட்டதால் எங்களுக்கிடையே எவ்வளவு நட்புரிமை இருந்தாலும் இனிச் 'சுந்தரத் தேவர்' என்று மரியாதையாகவே அழைக்கிறேன்.

தந்தையார் காலம் முதல் குதிரைப்படையில் முக்கியமான ஓர் அங்கம் வகித்து வரும் நந்திதேவனை அப்படையின் துணைத் தளபதியாக நியமிக்கிறேன்'' இவ்வாறு கூறிவிட்டுப் பெருவழுதி நந்திதேவன் முகத்தைப் பார்த்தான். கட்டுக் கடங்காத மகிழ்ச்சியில் அவன் திளைத்துக் கொண்டிருக்கிறான் என்பது நன்கு புரிந்தது.

பெருவழுதி ஆட்சிக்கு வந்ததும் எங்கே உள்ள பதவியிலிருந்து தன்னை இறக்கிவிடுவானோ என்று எண்ணிக் கொண்டிருந்த நந்திதேவனுக்கு உயர் பதவி கிடைத்ததென்றால் பெருமகிழ்ச்சி தோன்றாமல் என்ன செய்யும் ?

மீண்டும் பெருவழுதி பேசினான்.

''பெரு மக்களே ! என் தந்தையாருக்குப் பெரிய ஆசை ஒன்று இருந்தது. அந்த ஆசை நிறைவேறுவதற்கு முன்னரே அவர்கள் இறைவன் திருப்பாதங்களில் கலந்து விட்டார்கள்' கலைக்கு எல்லை கிடையாது, பகை கிடையாது, கட்டுக்காவல் எதுவும் கிடையாது.

சோழப் பெருமன்னனாக விளங்கிய முதலாம் குலோத்துங்கன் தேவியரில் ஒருவர் இசைப் பேரரசியாக விளங்கியதால் 'ஏழிசை வல்லபி' என்ற சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தார்கள்.

அவர்கள் போல நமது நாட்டில் ஓர் இசையரசி விளங்குகிறாள். அவள் இசை கேட்டுக் கல்லும் உருகும் ; காயும் கனியும் ! அந்தத் திருமகளுக்கு, 'ஏழிசையரசி' என்ற

பட்டத்தைச் சூட்டி மகிழ வேண்டும் என்பதுதான் தந்தையின் ஆசை !

மன்னரின் ஆசையை நான் இன்று நிறைவேற்றுகிறேன். அதற்குரிய விருதான 'முத்துமாலை'யையும் வழங்குகிறேன்'', என்று கூறிப் பெருவழுதிப் பாண்டியன் நிறுத்தினான்.

எல்லாரும் மிகுந்த ஆவலோடு அவன் யாரைக் குறிப்பிடுகிறான் என்று அறிய விரும்பினார்கள்.

அவனையே கூர்ந்து பார்க்கத் தொடங்கினார்கள்.

''உங்கள் ஆவலை இன்னும் தூண்ட நான் விரும்பவில்லை. கொன்றையூர் இளவரசி மதுரவல்லியே அந்தச் சிறப்பிற்கு உரியவள்,'' என்று பெருவழுதி கூறியதும் நன்றியுணர்ச்சியால் மதுரவல்லியின் தாமரை நயனங்கள் விரிந்தன.

தனக்கு அமைச்சர் பதவி அளித்ததாக மன்னன் கூறிய போது ஏற்படாத மகிழ்ச்சி தங்கைக்குச் சிறப்பு என்றதும் சுந்தரத் தேவனுக்கு ஏற்பட்டது.

மாடத்திலிருந்த தன் தாய் கோப்பெருந் தேவியை நோக்கி மதுரநாயகியை அழைத்துக் கொண்டு வருமாறு பெருவழுதி குறிப்பால் உணர்த்தினான்.

அன்னை. கோப்பெருந்தேவியார் அவ்வாறே மதுரநாயகியை அழைத்துக் கொண்டு மேடைக்கு வந்தார்கள்.

சைவத் திருப்பழமாக விளங்கிய அவர்கள் அவளை அழைத்துக் கொண்டு, வந்தது கைலாயத்திலிருந்து மூதாட்டியார் ஒருவர் வான மங்கை ஒருத்தியை மண்ணுலகத்திற்கு அழைத்து வந்தது போலிருந்தது.

'ஏழிசையரசி' என்ற பட்டத்தை மதுரநாயகிக்கு வழங்கிய மன்னன் முத்துமணி மாலையைப் பட்டம் வழங்கியதற்குரிய இலச்சினையோடு தன் அன்னையிடம் கொடுத்து மதுரவல்லிக்கு அணிவிக்குமாறு செய்தான்.

அந்தக் காட்சியைக் கண்ட சுந்தரத் தேவன் உள்ளத்தில் புதிய பல எண்ணங்கள் தோன்றி நடமாடத் தொடங்கின.

9. வந்தவன் யார்?

கொன்றையூர் மணிமாளிகையின் கண்ணாடிச் சாளரப் பகுதியில் எல்லா விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன.

முதல்நாள் இரவு இருள் படர்ந்த சூழ்நிலையில் வேதனைப் புயலிலே சிக்கிக் கிடந்த சுந்தரத்தேவன் இன்று சற்று அமைதி பெற்றிருந்தாலும் அவன் உள்ளத்தில் இன்னும் முழுமையான நிறைவு ஏற்படவில்லை.

முத்துச் சிலம்புகளில் சல் சல் என்ற ஓசை கேட்கத் தொடங்கவே தன் தங்கை வருகிறாள் என்பதை அறிந்து கொண்ட சுந்தரத்தேவன் மகிழ்ச்சியாகத் தன் முகத்தை வைத்துக்கொள்ள முயன்றான்.

அவன் அருகிலிருந்த மரகதத் தூணுக்குப் பக்கத்தில் வந்து மதுரவல்லி நின்றாள். அவள் வதனம் என்றுமில்லாத பேரழகு உடையதாக விளங்கியது. அதையே உற்றுப் பார்த்த சுந்தரத்தேவன்,

“அருமைத் தங்கையே! என்னுடைய திருஷ்டியே உனக்குப் பட்டுவிடும் போலிருக்கிறது.” என்று கூறிச் சிரித்தான்.

“அண்ணா! காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு— நீங்கள் உங்கள் தங்கையைப் பற்றி உயர்வாகத்தான் சொல்லுவீர்கள்!” என்று தன் செவ்விதழ்களின் குறுநகை அரும்ப மதுரவல்லி கூறினாள். பின் முதல் நாள் பேச்சுக்களை நினைத்துக் கொண்டவளாக, “அண்ணா! நான் சொன்னது பலித்துவிட்டது பார்த்தீர்களா?” என்று கேட்டாள்.

“என்னை மன்னன் அமைச்சராக நியமித்ததைத்தானே கூறுகிறாய். தங்கையே நான் நினைத்ததும் நடந்துவிட்டது— என்னை மன்னன் ஏதோ காரணத்தால் நடைமுறை நிர்வாகங்களிலிருந்து ஒதுக்குகிறான் என்று நினைத்தேன். அதை அமைச்சர் பொறுப்பு என்று ஒன்றைக் கொடுத்து அவன் உறுதிப்படுத்திவிட்டான்— என்று கூறிய சுந்தரத்தேவன் எது எவ்வாறாயினும் உனக்கு ஏழிசையரசி என்ற பட்டத்தை நல்கிச் சிறப்பித்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.” என்று கூறிவிட்டுத் தங்கையின் வதனத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்படுகிறதா என்று பார்த்தான் — அந்தத் தாமரை வதனத்தில் எந்தவிதச் சலனமும் தோன்றாதது அவனுக்கு வியப்பாகவே இருந்தது.

முத்துமாரி அம்மன் கோயிலில் அந்திக்கால பூசைக்குரிய முன்னறிவிப்பு மணி முழங்கத் தொடங்கியது.

“அண்ணா! இன்று வெள்ளிக்கிழமை — கோயிலுக்குப் போய் வருகிறேன்” என்று கூறிவிட்டு அங்கிருந்து மதுரவல்லி புறப்பட்டாள்.

தேவதை போல நடந்துகொண்டிருந்த தங்கையையே சுந்தரத்தேவன் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் பொன்னமராவதி அரண்மனைப் பளிங்கு முற்றத்தில் நடப்பது போன்ற பிரமையே அவனுக்கு ஏற்பட்டது.

பெருவழுதிப் பாண்டியனுக்கு தன் தங்கை மீது அளவு கடந்த பிரேமை இருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது. அரியணை ஏறி முடிசூட்டிக்கொண்ட அன்றே மதுரவல்லிக்கு ஏழிசையரசி என்ற பட்டத்தைக் கொடுத்தது அவனது எண்ணத்திற்கு வலுவூட்டியது.

தான் மன்னனால் புறக்கணிக்கப்பட்டாலும் தங்கை யாவது நன்கு வாழட்டும் என்று எண்ணிய சுந்தரத்தேவனிட மிருந்து பெருமூச்சொன்று வெளிப்பட்டது.

மாளிகை உட்புறத்தை அடைந்த மதுரவல்லி முத்து மாரியம்மன் கோயிலுக்குச் செல்ல வெளிவாயிலைத் தாண்டி னாள்.

அப்பொழுது நந்திதேவன் எதிர்ப்பட்டான். பேரழ குப் பாவையாக தன்முன் வந்த மதுரவல்லியைக் கண்ட தும் அவன் தன்நிலை தளர்ந்தான்—போதை மிகுந்த கண்களோடு அவளைப் பார்க்கத் தொடங்கினான்—சுட்டெரித்து விடுபவள் போல அவனைப் பார்த்த மதுரவல்லி அவனைச் சிறிதும் பொருட்படுத்தாது அங்கிருந்து விரைந்து சென்றாள். பல்லக்கில் ஏறிக் கோயிலை அடைந்தாள்—

வெள்ளிக்கிழமை அந்திக்கால பூஜைக்கு இளவரசி வழக்கமாக வருவதால் அர்ச்சகரும் கோயில் அதிகாரிகளும் பணியாட்களும் அவள் வரவை எதிர்பார்த்திருந்தனர்.

ஏழிசையரசியாக வந்த இளவரசியை அர்ச்சகரும் பிறரும் பணிவன்போடு வரவேற்று ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றனர்.

ஆதியும் அந்தமும் இல்லாத பெருஞ் சோதியான அன்னையைக் கண்டு மதுரவல்லி அகம் களித்தாள் — கரம் குவித்தாள்.

எதிர்பாராது அவள் சற்றுத் திரும்பியபோது அவள் வியப்பின் எல்லையை அடைந்தாள்.

வழக்கமாக வருகின்ற அவள் வந்தது சரி— ஆனல் எப்போதாவது வருகின்ற அவன் இப்போது எப்படி வந்தான் என்று அவனைக் கண்ட அர்ச்சகரும் பிறரும்கூடப் பெருவியப்படைந்தனர்—

10. மர நிழலில் ஓர் உருவம்

தளபதியாரே! வரவேண்டும், வரவேண்டும்—என்று அர்ச்சகர் சுப்பிரமணியப் பட்டரும் கட்டளைக்காரரான சோம சுந்தரப் பண்டாரமும் கரம்குவித்துவந்தவனை வரவேற்றார்கள்.

"பட்டர் அவர்களே! பண்டாரம் அவர்களே! நாட்டுக் காவலுக்கு நான் தளபதியே தவிர உங்களைப் போன்ற பெரிய வர்களுக்கு நான் என்றென்றும் பணிவுமிக்க வீரத்தேவன் தான்! மன்னர் என்பால் எல்லையற்ற பற்று வைத்திருக்கிறார் என்றாலும் அதைவிடப் பெருநம்பிக்கை வைத்து நான்கு வகைப் படைகளுக்கும் என்னைத் தளபதியாக நியமித்திருக் கிறார்—பதவி கிடைப்பது பெரிதில்லை. அதைப் பாதுகாப்பது தான் பெரிது. நாட்டையே காக்கின்ற பொறுப்பினைப் பெற் றுள்ள எனக்கு அதற்குரிய ஆற்றலையும் அறிவையும் தந்தருள வேண்டும் என்று வேவுநகர் காக்கும் அன்னை ஏன மாரி அம்மன் ஆலயம் சென்று வணங்கினேன். அவள் சகோதரி யும் அகிலாண்ட ஈஸ்வரியுமான முத்துமாரியையும் வணங்கி விடவேண்டும் என்ற ஆர்வம் பெருகியது. இங்கு ஓடி வந்தேன்—" என்று பணிவும் பக்தியும் கலந்த குரலிலே வீரத் தேவன் கூறினான்.

"மிக்க மகிழ்ச்சி—வீரத் தேவரே! நால்வகைச் சேனைகளை யும் நடத்தும்—பொறுப்பினைப் பெற்ற நீங்கள் ஆலயத்திற்கு

வந்த நேரம் ஏழிசையரசி என்ற கௌரவத்தைப் பெற்ற எங்கள் இளவரசியார் தங்களை வரவேற்க வந்திருப்பதுபோல இங்கு எழுந்தருளி இருப்பது மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. எங்கள் ஊர் மன்னர்-கடுங்கோப் பெருவழுதியார் இளவரசியாரை அம்மன் அருள்பெற்றுப் பிறந்த பிள்ளை என்று அடிக்கடி சொல்லுவார்கள். அவர்கள் இதுசமயம் ஆலயத்தில் இருப்பதே தங்களுக்கு காலங்களுக்கும் அன்னை முத்துமாரி அருள் புரிந்துவிட்டாள் என்பதையே காட்டுகிறது'' என்று சுப்பிரமணியப் பட்டர் மெய் மறந்து கூறினர்.

''பட்டரே! நமது வீரபாண்டியத் தேவரையும்—நமது இளவரசியாரையும் பார்க்கின்றபொழுது அவர்கள் இந்த உலகத்தில் பிறந்தவர்களாகவே தோன்றவில்லை. கந்தர்வர்கள் போல காட்சி தருகிறர்கள்'' என்று சோமசுந்தரப் பண்டாரம் கூறினர்.

இதுவரை பட்டரையும் பண்டாரத்தையும் பார்த்துக் கொண்டிருந்த வீரத்தேவனும் மதுரவல்லியும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். பண்டாரம் சொன்னதிலே தப்பில்லை என்றே அவர்கள் இருவருக்கும் தோன்றியது.

வைத்த கண் வாங்காது என்பார்கள். ஆனல் அந்த இளம் சிட்டுக்கள் இருவரும் வாங்க இயலாது தவித்தார்கள்.

கோயில் மணியின் பெருநாதம் அந்த இளம் செல்வங்களை இந்த உலகத்தவர்கள் ஆக்கியது.

சிறப்பான முறையில் தீபாராதனைகளை பட்டர் அவர்கள் செய்து வைத்தார்கள்.

பட்டர் இருவருக்கும் பிரசாதங்களை நல்கியபொழுது இளவரசியார் கையில் வைக்க முனைந்த செவ்வந்தி மலர் ஒன்று தவறிக் கீழே விழுந்தது. தன்னை மறந்த வீரத் தேவன் அதை எடுத்து மதுரவல்லியிடம் கொடுக்கப்போன

வன் சற்று தயங்கிப் பட்டரிடம் கொடுக்கலானுன். வீரத் தேவரே நீங்கள் கொடுத்தால் என்ன கொடுங்க. நீங்கள் கொடுக்க வேண்டும் என்பதுதான் அம்பிகையின் கட்டளை என்று கூறிய பட்டர் அர்த்தச் செறிவோடு பண்டாரத்தைப் பார்த்தார்.

தன் கையிலிருந்த செவ்வந்தி மலரை மதுரவல்லியின் கையிலே வீரத்தேவன் வைத்தான். கையாகவே அது அவனுக்கு தோன்றவில்லை. ஓர் தாமரை மலரில் செவ்வந்திப் பூவை வைத்த எண்ணமே அவனுக்குத் தோன்றியது

அந்த நேரத்தில் பக்தியால் நிறைந்த அந்தப் பதுமையின் உள்ளம் பனி நீர் பட்டுச் சிலிர்க்கும் மலர் போலாயிற்று.

நிலைமையைப் பார்த்த பட்டர்-வீரத்தேவரே, சுந்தரத் தேவர் மாளிகைக்குச் சென்று பின்னர்தானே தங்கள் ஊர் போகப் போகிறீர்கள் என்று வினயத்தோடு கேட்டார்.

அதற்குப் பதில் சொல்ல வீரத்தேவன் சற்று தயங்கினுன்.

“பெரியவர்களிடம் என்றும் நான் வீரத்தேவன்தான் என்று சற்றுமுன்னர் தளபதி அவர்கள் தங்களிடம் கூறினுர்கள். அதுபோலவே கெழுதகை நண்பரான சுந்தரத் தேவரிடம் அவர்கள் நண்பராகவே நடந்து கொள்வார்கள் என எண்ணுகிறேன்” என்று மதுரவல்லி இதழ் விரித்தாள்.

“ஏன் தேவிக்குச் சந்தேகம்” என்று வீரத்தேவன் அடக்கமாகவே கேட்டான்.

“சந்தேகமல்ல. உறுதிப்படுத்துகிறேன், தங்கத்தைத் துடைப்பதால் அதன் தரம் குறைந்ததென்ரு பொருள்?” மான்விழி மாது இதைக் கூறிவிட்டுக் குறுநகை புரிந்தாள்.

பதில் ஒன்றும் கூருது மிகுந்த வியப்போடு அவளை நோக்கிய வீரத்தேவன் சிறிதுநேர அமைதிக்குப் பிறகு, “கொன்னையூர் இளவரசியார் என்னைத் தங்கத்தோடு ஒப்பிட்டதற்காக மிகுந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று கூறிவிட்டு சற்று பரபரப்படைந்தவனாக பட்டரிடமும் பண்டாரத்திடமும் பணியாளர்களிடமும் விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்படத் தொடங்கியவன், “தேவி! தங்கள் தமையனைக் காணத்தான் செல்கிறேன்” என்று கூறிவ்ட்டு முன் நடந்தான். அந்த அழகு மயில் அவனைப் பின் தொடர்ந்தாள்.

கோயில் வெளிமதிலைக் கடந்ததும் ஒருகணம் வீரத்தேவன் நின்ருன். பல்லக்கை நோக்கிய வண்ணம் ‘ தேவி நீங்கள் வாருங்கள். நான் குதிரையில் வருகிறேன்” என்று கூறியவன் புரவிக்கு இலக்கணம் வகுப்பதுபோல் நின்ற அவனுடைய பஞ்ச கல்யாணிக் குதிரையை நோக்கி நடந்தான். அது பெரிதாகக் கனைத்து அவனை வரவேற்றது.

வான வீதியில் பவனி வந்து கொண்டிருந்த நிலவை நோக்கிய மதுரவல்லி, “இந்தப் பால் நிலவைப் பார்க்கிற பொழுது மாளிகைக்கு நடந்தே போகலாம் போலிருக்கிறது” என்று கூறினுள்.

“செல்லலாம் ஆனுல் அவரவர்கள் பொறுப்பிற்கு ஏற்பச் சில கட்டுப்பாடுகள் உள்ளனவே!” என்று வீரத்தேவன் கூறினுன்.

“இருக்கலாம். அது அரசுப் பதவியிலே இருப்பவர்களைத் தான் கட்டுப் படுத்தும்...எனக்கு மன்னர் பட்டம் தான் தந்திருக்கிருர்—பதவி ஒன்றும் தரவில்லையே! நான் நினைத்தால் நடந்தே போகலாம்... போவேன்...” என்று கூறிய மதுரவல்லி வம்பிற்காக நடந்து செல்பவள்போலச் சிறிது தூரம் சென்ருள்.

“நில்லுங்கள் தேவி!” எனக் கூறிய வீரத்தேவன் அவள் அருகில் வந்து “தளபதி என்ருல் படைகளைக் காப்பதும்-படை

எடுப்பதும் படை எடுப்பாரைத் தடுப்பதும் மட்டுமல்ல. தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பளிப்பதும் என் கடமையே ஆகும். அந்த முறையில் கொன்றையூர் இளவரசியார் அவர்கள் நடந்து சென்றால் அவர்களைப் பாதுகாக்க நானும் நடந்து வரவேண்டிய நிலவரும்'' என்று கூறி அவளது வண்ண முகத்தை வீரத்தேவன் கூர்ந்துபார்த்தான். நில வொளியில் அவள் அழகு பேரழகாகப்பெருகி நின்றது. சந்தனப்பாவையாக அவள் விளங்கினாள்—அவள் அழகு வதனத்தின் மீது சுருள் சுருளாகப் படிந்து கிடந்த கூந்தலுக்குத் தான் எத்தனை கவர்ச்சி. அவளது படபடக்கும் நயனங்களுக்குத்தான் எத்தனை ஆற்றல். அவள் கண்கள் எப்பொழுதும் பார்த்துக் கொண்டே இருந்தால் அந்தப் பார்வைக்கு இலக்காகும் ஆண்கள் தன்னிலை தளர்ந்து செயலற்றுப் போவார்கள் என்று எண்ணித்தான் நான்முகன் அந்தக் கண்களுக்கு இமைக்காவலர்களைத் தந்து இமைக்கும்படி செய்தானோ என்று அவன் எண்ணினான்—போதைப் பொருள்களின் மொத்த உருவமாக அவள் செங்கனி அதரங்கள் திகழ்ந்தன. இவற்றிற்கெல்லாம் அடிமையாகாது உலகத்தில் எவனும் இருக்க மாட்டான் அப்படி யாராவது இருப்பானே ஆனால் அவனது தோல்விக்கும் இவளது வெற்றிக்கும் இவையே பெருந்துணை என்பனபோல அவளது மார்பகங்கள் பூரித்துப் பொலிவு பெற்று, கண்டார் கருத்தை உடன் கவ்வும் வன்மை பெற்று விளங்கின—

செயலற்று நின்ற வீரத்தேவனை நோக்கி ''தேவி! தேவி! என்கிறீர்களே என் பெயர் உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேலிக்குரலில் மதுரவல்லி கேட்டாள்.

''உங்கள் பெயர் தெரியாதே!'' என்று வீரத்தேவனும் அதே முறையில் பதில் சொன்னான்.

''உங்கள், உங்கள் என்கிறீர்களே! உங்களிடம் மரியாதை கொடிகட்டிப் பறக்கிறதே!''

"வடவேங்கடம் தென் குமரி இவற்றை எல்லைகளாகக் கொண்ட தமிழன்னையின் திருநாடு முழுவதும் பறக்கின்ற கொடிகளெல்லாம் மரியாதைக் கொடிகளாகவும் நம்பிக்கைச் சின்னங்களாகவும்தான் இருந்து வருகின்றன- தொடர்ந்து அவ்வாறே அவை இருந்து வர வேண்டும் என்பதுதான் இந்த ஏழையின் எண்ணம்" என்று கூறி வீரத்தேவன் வினயமாகச் சிரித்தான் பிறகு மந்தகாசமாகப் பார்த்தபடி நின்று கொண்டிருந்த அந்த மாணிக்கப் பாவையை நோக்கி "என்ன மதுரம் நான் சொல்வது நியாயம் தானே?" என்று கேட்டான்.

அவன் மதுரம் என்று பெயரிட்டு அழைத்ததாலும் ஒருமையிலேயே பேசியதாலும் பெரும் சிலிர்ப்புக்கு ஆளான மதுரவல்லி 'இப்பொழுதுதான் நியாயத்திற்கு வந்திருக்கிறீர்கள்" என்று கூறி பெருமூச் சொன்றை உதிர்த்தாள். விம்மி நின்றமார்பகங்கள் மேலும் விம்மித் தணிந்தன. அவை உயர்ந்த நிலையிலிருந்து தணிந்தனவோ என்னவோ உண்மைதான். ஆனால் அவள் மீது வீரத்தேவனுக்கு ஏற்பட்ட பிரேமையும் அவன் மீது அவளுக்கு ஏற்பட்ட பாசமும் எங்கே தணியப் போகின்றன. பால் நிலவு பொழிந்த அந்தக் குளிர்ச்சியான நேரத்தில் கூட அவர்கள் இருவரின் உள்ளமும் உடலும் சூடாகவே செய்தன.

கோயில் வெளிமுற்றத்தில் அதற்கு மேலும் நின்று கொண்டிருப்பது உசிதமாகாது என்று எண்ணிய வீரத்தேவன் "மதுரம்! நீ பல்லக்கில் வா-நான் உன் பக்கத்திலேயே வருகிறேன்" என்று கூறிவிட்டு பஞ்சகல்யாணிக் குதிரை மீது ஏறினான் - முத்துப்பல்லக்கில் முத்தழகியனைய மதுரவல்லி செல்ல அவள் பக்கமாகவே குதிரை மீது வீரத்தேவன் செல்லலானான்.

இதுவரை நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் கோயிலுக்குச் சற்று தொலைவிலிருந்த பெரிய புளியமரநிழலில் நின்றபடியே கவனித்துக் கொண்டிருந்த ஓர் உருவம் பற்களை நறநற வென்று கடித்தது.

11. ஆலமர விழுதுகள்

உலகத்தில் பசியை அறியாத மனிதனோ காதல் உணர்ச்சிக்கு வசப்படாத மனிதனோ இருக்கமுடியாது.

பக்தி புனிதமானது. ஆனால் சுயநல வாதிகள் சிலர் பக்தியைப் பகல் வேடத்துக்குப் பயன்படுத்திக்கொண்டு விடுகின்றனர்.

அதுபோலத்தான் காதல் புனிதமானது. அதன் தரமும் தன்மையும் உயர்வும் தெரியாத சில மூடர்கள் அதைக் கேளிக்கைப் பொருளாக்கி வருகிறார்கள்.

நந்திதேவன் நல்ல ஆற்றல் உடையவன்தான் என்றாலும் சீர்கேடான நினைவுகள் கொண்டவன். சுந்தரத் தேவனோடு அவன் மிகவும் நெருங்கிப் பழகுவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம் என்றாலும் மதுரவல்லி மீது அவனுக்கு இருந்த மயக்கமும் காரணமானது.

இது கிடைக்குமா? கிடைக்காதா? என்று ஆராய்கின்ற அறிவே பேராசைக்காரனுக்கு இருப்பதில்லை. அதனால்தான் ஆசை வெட்கமறியாது என்று பெரியவர்கள் கூறியுள்ளார்கள்.

கொன்றையூர் மாளிகை முற்றத்தில் பேரழகின் பிம்பமாக விளங்கிய மதுரவல்லியைக் கண்ட நந்திதேவன் தன்னிலை பெறுவதற்குச் சிறிது நேரமாயிற்று.

அதன் பிறகு சுந்தரத்தேவனைப் பார்ப்பதற்காக அவன் சென்றான்.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த அவனைப் பார்த்து "அமைச்சர் பெருமானே, வணக்கம்!" என்று கரங்குவித்தான்.

நந்திதேவனின் குரலில் கேலி கலந்திருப்பதை நன்கு புரிந்து கொண்ட சுந்தரத்தேவன், "உன்னைப் போன்றவர்கள் எல்லாம் என்னைப் பரிகசிக்க வேண்டும் என்பது மன்னரின் ஆசை! அதனால்தான் எங்கே போர்வரும்? எப்போது களம் புகுவோம்? என்று தினவெடுத்திருக்கின்ற தோள்களையுடைய எனக்கு அமைச்சர் பதவி நல்கியுள்ளார்," என்று வெறுப்போடு கூறினான்.

"சுந்தரத் தேவரே! தங்கள்பால் எனக்குள்ள உரிமையால் நான் ஏதோ சொல்லியிருக்கலாம்! மன்னித்துவிடுங்கள்! தோல்வியோ வெற்றியோ அரங்கிற்குள் இருந்தால்தான் ஆடமுடியும். தோல்வி பெற்றவனும்கூட வெற்றிக்கு முயற்சி செய்யமுடியும்! வீரத்தேவனோடு உங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதால் அமைச்சர் பதவி உங்களுக்குச் சாதாரணமாகத் தெரிகிறதே தவிர, நீங்கள் நினைப்பது போல அஃது எளிதான பதவியல்ல! சுருக்கமாகச் சொன்னால் நீங்கள் அந்தப் பதவியை விரும்பினாலும் வெறுத்தாலும் கைவிட்டு விடாதீர்கள்! நாம் உள்ளே இருந்தால்தான் நாம் விரும்புகிறவனை ஒரு நாள் இல்லாவிட்டாலும் ஒரு நாள் வெளியே அனுப்பமுடியும்! களத்திலே காட்டமுடியும் என்று நீங்கள் நினைக்கிற சாமர்த்தியத்தை ஆட்சிப் பொறுப்பிலே காட்டமுடியாதா," என்று அவன் கேட்டுக்கொண்டிருந்தபோது அந்த மாளிகையின் நீண்ட பெரிய மன்றத்தில் வீரத்தேவனும் மதுரவல்லியும் வந்துகொண்டிருந்த காட்சியினைச் சுந்தரத்தேவன் கண்டான்.

வீரத்தேவனை அங்கே கண்டது அவனுக்குப் பெரிய வியப்பையும் திகைப்பையும் தந்தது.

சுந்தரத்தேவனுடைய முகத்திலே தோன்றிய மாற்றத்தைக்கண்ட நந்திதேவன் அவனுக்கு எதிர்புறமாக இருந்தவன் திரும்பி மன்றத்தைப் பார்த்தான்.

வீரத்தேவன் அங்கே வந்து கொண்டிருந்தது, அவனுக்குச் சற்று அதிர்ச்சியாகவே இருந்தது.

அதுமட்டுமல்லாமல் மதுரவல்லியின பக்கமாக அவன் வந்து கொண்டிருந்தது பெரிய ஆத்திரத்தை ஊட்டியது! இத்தகைய சூழ்நிலையில் வீரத்தேவனும் மதுரவல்லியும் அங்கே வந்து சேர்ந்தார்கள்.

எழுந்து நின்று சுந்தரத்தேவன் வீரத்தேவனை வரவேற்றான்.

நந்திதேவனும் வெறுப்போடு தன் ஆசனத்திலிருந்து எழுந்து நின்றான்.

"அன்னை முத்துமாரியைத் தரிசிக்க வந்தேன். அப்படியே அமைச்சர் சுந்தரத்தேவரையும் பார்த்துப் போகலாம் என்று வந்தேன்", என்று விரத்தேவன் கம்பீரமான குரலிலே கூறினான்.

அவன் அப்படிக் கூறிக்கொண்டிருக்கும்போதே, "நால்வகைப் படைகளுக்கும் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் விரத்தேவர் இவ்வளவு தூரம் வந்தது வியப்புத்தான்." என்று நத்திதேவன் சற்று அலட்சியமான குரலில் கூறினான்.

"குதிரைப் படைக்குத் துணைத் தளபதியாக மட்டுமே இருக்கின்ற நந்திதேவர் இவ்வளவு தூரம் வந்திருக்கிறபொழுது நால்வகைப் படைகளுக்கும் தளபதியான நான் இவ்வளவு தூரம் வந்ததில் வியப்பு என்ன இருக்கிறது. தளபதி அமைச்சரைக் காண வந்ததில் நல்ல பொறுப்புத்தான் இருக்

கிறது'' என்று வீரத்தேவன் மிகவும் சாதுரியமாகப் பதில் சொன்னான்.

அவன் கூறியதைக் கேட்டு மதுரவல்லி கலகலவென்று சிரித்தாள். அதனால் நந்திதேவன் முகம் கருத்தது.

''தளபதியாரே! அரசரே முன்னர் திட்டம் போட்டுக் கொண்டு அவரே ஒரு ஆளை ஏற்பாடு செய்து அம்பில் லிகிதத்தை வைத்து எய்யச் செய்து பின் அவை யாருடைய சதியோ என்று வருணித்துவிட்டு குற்றவாளியை காலத்தால் சொல்லப்படும் என்று கூறிச் சமாளித்து விட்டார்'' என்று பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்களாம்.

''இதுபற்றி நீங்கள் என்ன சொன்னீர்கள்?'' என்று வீரத் தேவன் வினயமாகக் கேட்டான்.

''நான் என்ன சொல்வது?'' என்று நந்திதேவன் எதிர் கேள்வி கேட்டான்.

''சொல்வது இருக்கட்டும்''—நீங்கள் இதுபற்றி என்ன நினைத்தீர்கள்?'' என்று கடுமையான குரலில் வீரத்தேவன் கேட்டான்.

சற்று நேரம் யோசித்த நந்திதேவன் சாமர்த்தியமாகப் பதில் சொல்வதாக நினைத்துக்கொண்டு, ''இதைப் பற்றி என்ன நினைப்பது'' என்று கேட்டான்.

வீரத்தேவனின் வதனம் சினத்தால் சிவந்தது. நந்தி தேவரே! என்று இடிபோல் அழைத்தான். அலட்சியமாக நின்றுகொண்ட நந்திதேவன் அதிர்ச்சிக்கு ஆளானாலும் அதை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமல்—வீரத் தேவன் கூறுவனவற்றைக் கேட்கத் தயாராக இருப்பதுபோல அவனைப் பார்க்கத் தொடங்கினான்.

"நந்திதேவரே!" என்று மீண்டும் இடிமுழக்கமாக அழைத்த வீரத்தேவன், "சுந்தரத்தேவர் யார்?" என்று கேட்டான்.

அவன் அவ்வாறு ஏன் கேட்கிருன் என்பதைப் புரிந்து கொள்ள முடியாத நந்திதேவன் மௌனமாக நின்ருன்.

சுந்தரத்தேவர்—பொன்னமராவதி நல் அரசின் நல் அமைச்சர்—நான் தளபதி. எங்கள் இருவர் முன்னிலையிலும் ஒரு செய்தியைச் சொல்லிவிட்டு—அதைப்பற்றி என்ன சொல்வது? என்ன நினைப்பது? என்று கேட்கிறீர்கள். உங்களால் ஒன்றும் சொல்லமுடியாத—ஒன்றும் நினைக்கமுடியாத ஒன்றைப்பற்றி ஏன் சொல்கிறீர்கள். அதை ஏன் பெரிதாக மதிக்கிறீர்கள்?" அனல் பறக்க வீரத்தேவன் கேட்டான்.

"தளபதியாரே! அவ்வாறு மக்கள் பேசுவதால் அரசருக்கு அவமானம்தானே என்ற வருத்தத்தால் கூறினேன்" என்று நந்திதேவன் மழுப்பினுன்.

"நீங்கள் இந்த அரசில் துணைத் தளபதி—'இவர்கள் பேசினுர்கள் என்று அவர்களை விலங்கிட்டு அழைத்து வந்து காட்டுவதை விட்டுவிட்டு ஏதோ சாலையில் போகிறவன் சொல்வது போல மக்கள் பேசினுர்களாம் என்று சொல்கிறீர்களே!" என்று வீரத்தேவன் சீறினுன்.

"வீரத்தேவரே! நீங்கள் தளபதியாக இருக்கலாம், அதற்காக என்னைச் சாலை போகிறவன் என்று கேவலமாகப் பேசலாமா?" என்று நந்திதேவன் ஆத்திரத்தோடு கேட்டான்.

"நந்திதேவரே! சாமர்த்தியமாகப் பேசுவது முன்னுக்குப் பின் முரணுகப் பேசி அதைச் சமாளிப்பது இதெல்லாம் ஒரு கலைதான். ஆனல் இவை எல்லாம் எங்கே செல்லுபடி

யாகும் என்று பார்க்கவேண்டும். ராஜ விசுவாசம் இல்லா தவன் சாலையில் போகிறவன் என்று நான் குறிப்பிட்டவனை விடக் கீழானவன். "அம்பிலே கடிதத்தை வைத்து எய்தச் செய்தது நீங்கள்தான் என்று..." என்று வீரத்தேவன் கூறி வந்தபோதே "நானு? யார் சொன்னது? எதை வைத்துச் சொல்கிறீர்கள்?" என்று நந்திதேவன் அலறினன்.

"எனக்கென்ன தெரியும்? பொதுமக்கள் அவ்வாறுதான் பேசிக் கொள்கிருர்களாம்" என்று வீரத்தேவன் திருப்பினுன்.

இதைக் கேட்டதும் மதுரவல்லி அதன் உட்பொருளை நன்கு புரிந்து கொண்டு பெரிதாகச் சிரித்தாள்.

"நந்திதேவரே! நீங்கள் என்னைவிட சுந்தரத் தேவரைவிட வயதில் சில ஆண்டுகள் மூத்தவராக இருக்கலாம். அதற்காக உரிய மரியாதையை நான் கொடுக்கச் சித்தமாக இருக்கிறேன். சுந்தரத் தேவருக்கு நீங்கள் வேண்டியவர்களாக இருக்கலாம். என் அருமை நண்பருக்கு வேண்டியவராயிற்றே! என்று உங்களை நான் அதற்காக மதிக்கத் தயாராக இருக்கிறேன். ஆனல் அதே சமயம் "பாண்டியர் பாரம்பரியம் என்ற பேருலகத்தில் இன்று ஒரு ஆலமரமாகத் திகழும் பெருவழுதிப் பாண்டியரின் நால்வகைப் படைகளில் ஒன்ருன குதிரைப் படையின் துணைத் தளபதி என்பதை மறந்துவிடக் கூடாது! அந்த ஆலமரத்தில் விழுதுகளாகவே நான், சுந்தரத்தேவர் மற்றுமுள்ள அதிகாரிகளெல்லாம் இருப்பதாகக் கருதுகிறேம். நீங்களும் அவ்வாறே கருதுவீர்கள் என நினைக்கிறேன். ஆணவத்தாலோ அலட்சியத்தாலோ நீங்கள் அதற்குமாருக நினைத்தால் அதனுல் ஏற்படுகின்ற பலன்களுக்கு நீங்களே முழுப் பொறுப்பாளி யாவீர்கள். அதோடு நால்வகைப் படை களுக்கும் நான் தளதிபதி என்பதால் என் அணியில் என் துணையாக இருக்கின்ற நீங்கள் துணையாக இருப்பீர்கள் என் றும் வினையாக இருக்க மாட்டீர்கள் என்றும் நம்புகிறேன்.

இதற்குமேல் நான் இப்போதைக்கு இதைப்பற்றி ஏதொன்றும் பேச விரும்பவில்லை'' என்று வீரத்தேவன் கூறினான்.

அவனது கம்பீரமான தோற்றமும், தர்க்க ரீதியான பேச்சும் எழில் பாவையான மதுரவல்லியைக் கவர்ந்தன. சுந்தரத்தேவன் கூட ஒரு கணம் வீரத்தேவனின் உறுதிமிக்க பேச்சில் தன்னை மறந்து விட்டான். பேச வழியற்ற நந்தி தேவன் உள்ளத்திற்குள்ளேயே கருவிக்கொண்டிருந்தான்.

''சுந்தரத் தேவரே! நேரம் அதிகமாகிவிட்டது. மற்றொரு நாள் வருகிறேன்'' என்று கூறி அவனிடம் விடைபெற்ற வீரத்தேவன் தன் நயனங்களாலேயே நங்கையிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

அவன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம்—நந்திதேவன் அங்கிருந்து புறப்பட்டான்.

அவன் தன் குதிரை மீது ஏறி முத்துமாரி அம்மன் கோயிலைத் தாண்டிச் சென்றபோது வீரத்தேவனும் மதுரவல்லியும் பேசிக்கொண்டிருந்ததைக் கண்காணித்த கரிய உருவம் சற்று தூரம் விரைவாய் ஓடிக் கொன்னைக் கண்மாய்க் கரை ஓரமாக உள்ள மரத்தடியில் கட்டி வைத்திருந்த குதிரை மீது பாய்ந்து ஏறி நந்திதேவனைப் பின்தொடர்ந்தது.

12. நந்திதேவன் திட்டம்

மூத்துமாரி அம்மன் கோயில் பகுதியிலிருந்து புறப்பட்ட இரண்டு குதிரைகளும் புயல்வேகமாகச் சென்று பொன்னமராவதி நெடுஞ்சாலையில் இடதுபுறம் உள்ள வேவுப்பட்டி பிரிவுப் பாதையை ஒட்டி வலம் திரும்பி விரைந்து சென்று குளத்தங்கரையிலே உள்ள மண்டபத்தை அடைந்து நின்றன.

குதிரையிலிருந்து நந்திதேவன் இறங்கியதும் கரிய போர்வை போர்த்திய உருவம் இறங்கியது.

இறங்கிய உருவத்தைத் தட்டிக் கொடுத்த நந்திதேவன், "வில்லவா! நீ நெல்வேலி போய் உடன் திரும்பியது நல்லதாகி விட்டது—இனி நீ அடிக்கடி நமது நாட்டிற்குச் செல்ல வேண்டும் என்று எண்ணுது இங்கேயே சில நாட்கள் தங்கி விடுவது நல்லது. நமக்குச் சூழ்நிலை நன்ருக அமைந்து வருகிறது." நந்திதேவன் கூறினுன்.

'வானவன் கோதை! என்ன இருந்தாலும் உன்னைப் பற்றிய உண்மை எங்கே வெளிப்பட்டுவிடுமோ என்ற அச்சம் எனக்கு நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகிறது."

"அதைப்பற்றி அஞ்சாதே! கிழட்டுப் பாண்டியன் ஆட்சியிலேயே பத்து ஆண்டுகள் நந்திதேவன் என்ற பெய

ரோடு வாழ்ந்து அவன் காலத்திலேயே துணைத் தளபதியாகி விட்டேன். இந்தச் சிறுவர்களிடமா நான் அகப்பட்டுக் கொள் வேன், நான் சொல்வதைக் கேட்கும் அளவிற்கு சுந்தர தேவனைச் சரிப்படுத்திவிட்டேன். அவனுக்காக ஏனையோரிடம் பேசுவதாக வீரத்தேவன் உள்பட நினைக்கும்படியாக நடந்து வருகிறேன். இதனால் இப்போது என்னிடம் எல்லாருக்கும் வெறுப்பு ஏற்பட்டாலும் நாளடைவில் சுந்தரத் தேவனிடமே அது திரும்பும். சுந்தரத்தேவன் உள்ளபடியே தன் தகுதிக்கு ஏற்ற மரியாதை பாண்டிய அரசில் கிடைக்கவில்லை என்று புழுங்கிக் கொண்டிருக்கிறான். இந்த நிலையில் எல்லாரும் அவனை வெறுத்துப் பேசத் தலைப்பட்டால் அவன் கொதித்து எழுவான். அந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு சுந்தரத்தேவனைக் கொண்டே பெருவழுதிப் பாண்டியனையும் வீரத்தேவனையும் விண்ணுலகத்திற்கு அனுப்பிவிட்டு நாம் நம் மண்ணுலகத்தை ஆளத்தொடங்குவோம்"—என்று வானவன் கோதை கூறினான். அவனது உறுதிமிக்கச் சொற் களைக் கேட்டு வில்லவன் பெருமிதம் அடைந்தான்.

அவன் திடீரென ஏதோ சிந்தனையில் ஆழ்வதைக் கண்ட வானவன் கோதை 'வில்லவா, என்ன சிந்தனை?' என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை என்று கூறிய அவன் சிறிது தயங்கி கொன்றையூர் இளவரசி எவ்வளவு அழகாக இருக்கிறாள்?" என்றவன் "அவள் வீரத்தேவனை விரும்புகிறாள் என நினைக் கிறேன்" என்று கூறினான்.

நந்திதேவனாக மாறி உலவும் வானவன் கோதையின் முகம் ஒரு கணம் கருத்துச் சிவந்தது. "வில்லவா அவள் அழகை நீ ரசித்தாய் என்பது பற்றி வியப்பில்லை—அவள் உலகமே ரசிக்கத்தக்க பேரழகி. இந்த உலகமே விரும்பத் தக்க இசையரசி—அவளை வீரத்தேவன் விரும்புவதிலும் வியப்பில்லை. அவள் யாரை விரும்புகிறாள் என்பது பற்றியும்

கவலை இல்லை. சுந்தரத்தேவன் அவளை மன்னன் பெருவழுதிக்கு மணம் முடித்துவிட நினைக்கிறான்! எது எவ்வாறாயினும் அந்தப் பேரழகி என்னவள் ஆகவேண்டும். இந்த மண்ணகம் உன்னது ஆகவேண்டும். இதுதான் எனது திட்டம் என்று கூறிவிட்டு வானவன் கோதை பெரிதாகச் சிரித்தான்—

"தாங்கள் மட்டுமே ஒட்டுக் கேட்கவும் உயர்ந்த ரகசியங்களை அறிந்து கொள்ளவும் முடிந்தவர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்த அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததை அந்த மண்டபத்திற்குப் பக்கத்திலிருந்த பொன் கொன்றை மரத்து மறைவில் நின்றபடி கேட்டுக்கொண்டிருந்த ஒருவன் பதுங்கிப் பதுங்கி அங்கிருந்து மெல்லச் சிறிது தூரம் நடந்து சென்று பின் அங்கிருந்து மரங்கள் அடர்ந்த புதருக்குள் மறைந்தான்.

13. வீரத்தேவனின் தியானம்

கொன்னையூர் பொன்னமராவதி நெடுஞ்சாலையில் தனது குதிரையை வீரத்தேவன் செலுத்திக்கொண்டிருந்தான்.

எப்பொழுது விரைந்துசென்றே பழக்கப்பட்ட அவனுடைய குதிரை - அன்று வழக்கத்திற்கு மாறாகத் தன் தலைவன், தான் வேகமாகச் செல்ல முயன்றால் கூட பிடித்து இழுத்து மெல்லச் செல்ல வைத்ததை எண்ணி வியந்தது போல நடந்து கொண்டிருந்தது.

வீரத்தேவனும் சிந்தனை வயப்பட்டவனாகவே சென்று கொண்டிருந்தான்.

அவன் உள்ளப்பெருவெளியில் முதலில் மதுரவல்லியே தோன்றினாள். அவளைப் பற்றிய இன்பமயமான எண்ணங்கள் சிறகடிக்கத் தொடங்கிய போது நந்தி தேவனைப் பற்றிய எண்ணங்கள் தோன்றி அவன் உள்ளத்தில் வெறுப்பையும் வேதனையையும் பரப்பின.

அவன் பொன்னமராவதிக் கோட்டையை நெருங்கிய போது, கோட்டை வாயில் கதவுகள் மூடப்பட்டு விட்டன. இன்றியமையாதவர்கள் மட்டும் சென்று வருவதற்காக அமைக்கப்பட்டிருந்த புறவாயில் கதவு மட்டும் திறந்திருந்தது. அதன் வழியிலே உள்ளே சென்ற வீரத்தேவன் நேரடியாக அரண்மனையை அடைந்தான்.

அரண்மனைத் தோட்டத்தில் அரசர் இருப்பதாகக் காவலர் அறிவித்தார்கள். வீரத்தேவன் அங்கே சென்ற போது மன்னன் பெருவழுதிப் பாண்டியனும் அவன் ஒரே தங்கை ஆலவாய் அழகியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் இருவரும் மதுரவல்லியைப் பற்றிய பேச்சில் ஈடுபட்டிருந்ததால் தன்னையறியாமலே வீரத்தேவன் சற்று தொலைவிலேயே நின்று விட்டான்.

"அண்ணா! மதுரவல்லி மீது உங்களுக்குள்ள விருப்பத்தால்தான் முடிசூட்டு விழாவன்றே அவளுக்குப் பட்டம் கொடுத்தீர்கள் என்றுதான் நாட்டில் பரவலாகப் பேசுகிறார்களாம்"-என்று கூறி ஆலவாய் அழகி நிறுத்தினாள்.

"அப்படியா...?" என்று ஒன்றும் தெரியாதவன் போலப் பெருவழுதி கேட்டான்.

"நாட்டில் எந்த குகையில் எந்த ரகசியம் நடந்தாலும் அது உங்களுக்கு உடனே வந்து விடுகிறதாமே - உங்கள் தளபதி வீரத்தேவர் எந்தச் செய்தியையும் கொண்டுவந்து விடுகிறாராமே-" என்று கூறிக் கொண்டிருக்கும் போதே தொலைவில் நின்று கொண்டிருந்த வீரத்தேவனை பெருவழுதிப் பாண்டியன் பார்த்து விட்டதால் அதோடு தங்கையுடன் உரையாடுவதை நிறுத்திக் கொண்டு "வீரத்தேவா! என்ன தயக்கம் வா," என்று கூறினான்.

பெருவழுதிப் பாண்டியன் அருகில் வீரத்தேவன் வந்ததும் அவன் முககுறிப்பிலிருந்து தன்னோடு தனியாகப் பேசவிரும்புகிறான் என்பதைப் புரிந்து கொண்ட பெருவழுதிப் பாண்டியன். குறிப்பாகத் தங்கையைப் பார்த்ததும் புன்னகை பூத்த படியே அவள் எழுந்து மாளிகையை நோக்கி நடந்தாள்.

பெருவழுதிப் பாண்டியன் அருகில் வந்த வீரத்தேவனை அருகிலிருந்த பளிங்கு மேடையில் அமருமாறு கூறினான்.

தயக்கத்தோடு அவன் அமர்ந்தான். பிறகு மிக மெல்லிய குரலில் சில செய்திகளைச் சொன்னான். அவன் கூறிய செய்திகளைக் கேட்டு பெருவழுதிப் பாண்டியனின் புருவங்கள் விரிந்து உயர்ந்து பின் தன்னிலை பெற்றன.

"வீரத்தேவா! இனியும் அவர்களைப் பற்றிய உண்மைகளை அறிந்து கொள்ளாதது போலவே நடந்து கொள்-ஏனென்றால் இவர்கள் தொடர்பாக இன்னும் சிலர் நம் பிரதேசத்தில் உலவக்கூடும்" என்று கூறிய பெருவழுதிப் பாண்டியன், "ஏன் அயர்ச்சியாகக் காணப்படுகிறாய்?" என்று கேட்டான்.

"பெருவழுதிப் பாண்டியரின் தளபதிக்கு அயர்ச்சி ஏது?" என்று வீரத்தேவன் கேட்டான்.

"தளபதி என்ற அளவில் உனக்கு அயர்ச்சி இருக்க மாட்டாது என்பது எனக்கு நன்கு தெரியும். ஆனால் வீரத் தேவன் என்ற முறையில் ஏதாவது அயர்ச்சி அதாவது சலனம் இருக்கலாம் அல்லவா?" என்று கேட்டுவிட்டு பெரு வழுதிப் பாண்டியன் வினயமாகச் சிரித்தான்.

"மன்னர் கூறுவது புரியவில்லையே!" என்று வீரத் தேவன் தன்னடக்கத்தோடு கூறினான்.

"புரியவில்லை என்றாலே தொல்லைதான்-மற்றவர்கள் சொல்கின்றவை எப்போது புரியாமல் போகும்! வீரத்தேவா-உனது வாழ்வில் புறத்தைப் பொறுத்தவரை சரி - அகத்தைப் பொறுத்தவரை!..." என்று கேட்டுவிட்டு மீண்டும் சிரித்த பெருவழுதிப் பாண்டியன் - நீ புறப்படு. நெடு நேரமாகி விட்டது" என்று கூறி விடைதந்தான்.

வந்தவழியே வீரத்தேவன் தன் குதிரையைச் செலுத்தினான். ஆனால் வரும்போது இருந்த அவன் மனநிலை இப்போது இல்லை- மதுரவல்லிமீது மன்னருக்கு விருப்பம் இருக்குமோ? என்ற எண்ணம் தோன்றி அவனை நிலைகுலையச் செய்தது.

அந்த வேளையில் உயிரைத் திரணமாக மதித்து நந்தி தேவனாக உலவும் வானவன் கோதையையும் அவனைச் சேர்ந்த வில்லவனையும் பின் தொடர்ந்து சென்று பொன் கொன்றை மரத்து மறைவில் நின்று அவர்கள் பேசியவற்றை அறிந்து பின் பதுங்கி மறைந்து வந்தவன் அவன் தான்-

இவற்றையெல்லாம் யாருக்காகச் செய்கிறோம் என்ற எண்ணம் தோன்றி அவனைத் துளைத்தது.

மதுரவல்லிக்காகவா செய்கிறோம் என்ற கேள்வியும் உடன் தோன்றியது. பெருவழுதிப் பாண்டியன் — புறம் — அகம் என்று பேசியவை அவன் நினைவிற்கு வந்தன.

அகவாழ்வில் ஏற்படுகின்ற சலனங்களுக்காகப் புற வாழ்வில் மனிதன் தன்னிலை பிறழக் கூடாது என்று அவன் தனக்குத்தானே முடிவு செய்து கொள்ளலானான்.

பாண்டியர் பாரம்பரியம் என்ற மாபெரும் வரலாற்றில் தான் என்றும் ஒளிச்சுடராக இருக்கவேண்டுமே யல்லாது வெறும் நெருப்புப் பந்தமாகிவிடக் கூடாது - மன்னருக்கு எவ்வளவு பெரிய நம்பிக்கை இருந்தால் நால்வகைப் படைகளின் தலைமையினையும் தன்னிடம் ஒப்படைத்திருப்பார். உண்மையிலேயே மதுரவல்லியை அடைவதுதான் தனது எண்ணம் என்பதாக இருந்தால் இருவகைப் படைகளின் தலைமைப் பொறுப்புகளை அவர் சுந்தரத் தேவனுக்கு நல்கியிருக்கலாமே! எனவே தன்னூர்க் குலதெய்வமான ஏனமாரி அம்பிகையும் கொன்னையூர் முத்துமாரி அம்பிகையும் பாண்டியர் பரம்பரையை என்றும் கட்டிக் காத்துவரும் அங்கயற்கண்ணியும் ஆலவாய் அப்பனும் என்றென்றும் இந்த அரசுக்கு நன்றி உள்ளவனாகவும், வீரம் உள்ளவனாகவும் என்னை வைத்தருள வேண்டும் என்று தியானித்தபடியே அவன் வேவுப்பட்டிச் சாலையில் குதிரையைச் செலுத்தினான்.

14. சோழ மன்னனின் திட்டம்

பாண்டியப் பேரரசு எவ்வாறு கிளை நதிகள் போலப் பிரிந்து பல குறுநில மன்னர்களின் ஆட்சியாக மாறியதோ அதுபோலவே சோழப் பேரரசும் பல குறு நில மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்ட காலம் அது.

பூம்புகார்பட்டினம், உறையூர், தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம் போன்ற பெருநகரங்களாகக் கொண்டு வெற்றிக் கொடிகளை விண்ணளாவப் பறக்கவிட்ட சோழ அரசர்களின் வம்சத்தில் வந்தவர்கள் குறுநில மன்னர்களான தோடு தம் சுற்றுப் புறங்களுக்கு ஏற்ப ஆங்காங்கே தலை நகரங்களை அமைத்துக் கொண்டார்கள். தம் சக்திக் கேற்ப அந்த நகரங்களுக்குக் கோட்டை கொத்தளங்களை அமைத்துக் கொண்டார்கள்.

அவ்வாறு குறுநிலமன்னர்கள் ஆனவர்களில் ஒருவன் தான் பொன்னிவளவன்...அவனும் அவன் முன்னோர்களும் தஞ்சைப் பெருநகரை ஒட்டி இருந்த வல்லத்தைத் தலை நகராகக் கொண்டு ஆண்டுவந்தார்கள். பொன்னி வளவனின் தந்தை புகழ்ச்சோழர்தான் வெள்ளாற்றங் கரையில் பெருவழுதிப் பாண்டியன் தந்தை மும்முடிப் பாண்டியரோடு போரிட்டு பாண்டியர் தளபதி கடுங்கோ வழுதிப் பாண்டியரால் கொல்லப்பட்டார்-அந்தத் தளபதியின் திருமகன்தான் சுந்தரத் தேவன் !

தந்தை இறந்த காலம் முதலே எவ்வாறேனும் மும்முடிப் பாண்டியனை அழித்துவிட வேண்டும் என்று வாலிபப் பருவத்தினனான பொன்னிவளவன் எண்ணியிருந்தான். ஆனால் பெருவீரரும் பெரும் படைபலம் கொண்டவரும் ஆன மும்முடிப் பாண்டியனை எளிதில் எதிர்த்துவிட முடியாது என்பதையும் இளைஞனாயினும் அவன் நன்குணர்ந்தே இருந்தான்.

இந்த நிலையில்தான் பொன்னமராவதிப் பாண்டியர் அரசியலில் எதிர்பாராத பல நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்கத் தொடங்கின.

பெருவீரராகத் திகழ்ந்த தளபதி கடுங்கோவழுதி உடல் நலம் இல்லாமல் சிலகாலம் இருந்து மறைந்தார்— அவரைத் தொடர்ந்து பொன்னமராவதிப் பாண்டியர் அரசியலில் எதிர் பாராத பல நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்கத் தொடங்கின.

பெருவீரராகத் திகழ்ந்த தளபதி கடுங்கோவழுதி உடல் நலம் இல்லாமல் சிலகாலம் இருந்து மறைந்தார்-- அவரைத் தொடர்ந்து பொன்னமராவதி மன்னர் மும்முடிப் பாண்டியனும் மறைந்தார்.

உடனே வாலிபனான பெருவழுதிப் பாண்டியன் அரசு கட்டில் ஏறும் நிலை வந்தது.

புகழ்ச் சோழர் இறந்து மூன்று ஆண்டுகள் ஆகியிருந்தன. அந்த இடைக்காலத்தில் பொன்னிவளவன் சிறுகச் சிறுகத் தன் படை பலத்தைப் பெருக்கிக்கொண்டிருந்தான் — அவன் நல்ல துணையோடு புதிதாக ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருக்கும் பெருவழுதியை எளிதாக வென்று விடலாம் - என்று அவன் எண்ணினான் — பெருவழுதியும் அவனைச் சேர்ந்தவர்களும் நல்ல வீரர்களாக இருந்தாலும் போர்முறைகளில் எந்தவிதப்

பயிற்சியும் அற்றவர்கள்; ஆதலால் அவர்களை வெல்வது எளிதென்றே அவன் நினைத்தான் — அதனால் அவன் தன் அமைச்சர்களோடும் அரசியல் அதிகாரிகளோடும் தளபதிகளோடும் இது பற்றிக் கலந்து பேசிவந்தான்.

அவர்களும் அதுபற்றித் தீவிரமாக ஆலோசித்து வந்தார்கள். இதற்கிடையே பொன்னமராவதிக் கோட்டைக்குள்ளும் அதன் சுற்றுப்புறங்களிலும் உலாவுமாறு பல ஒற்றர்களைச் சோழர்கள் அனுப்பிவைத்தார்கள்.

அவர்கள் அவ்வப்போது சோழ நாட்டோடு தொடர்பு கொண்டார்கள் என்றாலும் தெளிவான செய்திகள் எதையும் அவர்களால் தரமுடியாத நிலையே இருந்துவந்தது.

ஒருநாள் மாலை பொன்னிவளவனும் அமைச்சர் குணங்கொண்டாரும் மந்திராலோசனை மண்டபத்தில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது பாண்டிநாடு சென்ற ஒற்றர்களில் ஒருவன் மிகுந்த பரபரப்போடும் மகிழ்ச்சியோடும் அங்கு வந்து மன்னரைப் பணிந்து நின்றான்.

"மன்னர் மன்னவர்! பொன்னமராவதிப் பாண்டியனுக்கு எதிராக இதுவரை ஒருவரைக்கூட அங்கு காண இயலவில்லை. ஆனால் இப்பொழுது புதிய செய்தி ஒன்றினை அறிந்து கொண்டோம் - பொன்னமராவதிப் பாண்டியன் அரசையே கவிழ்த்துவிட இருவர் திட்டமிட்டு வேலை செய்து வருகிறார்கள்" என்று ஒற்றன் கூறிவரும்போதே "யார் அவர்கள்?" என்று அமைச்சர் மிகுந்த ஆவலுடன் கேட்டார்.

அவர்கள் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று மட்டுமே ஊகிக்க முடிகிறது. ஏனென்றால் அவர்கள் வில்— அம்பு... என்ற மறைமுகச் சொற்களைக் கூறிக்கொள்கிறார்கள்—

சுந்தரத் தேவரைக் கையாளாக வைத்து பெருவழுதிப் பாண்டியனை அமுக்க அவர்கள் முயல்கிறார்கள். அதுமட்டும் தெளிவாகத் தெரிகிறது'' என்று ஒற்றன் கூறினான்.

சோழ மன்னனின் கண்கள் பெரிதாக விரிந்தன. ''அமைச்சரே! அந்த இருவரும் நமக்குப் பயன்படுவார்கள் என நினைக்கிறேன்'' என்று கூறிய அவன் ஒற்றனைப் பார்த்து, மேலும் அவர்களைப் பற்றிய விரிவான செய்திகளை அறிந்து கொள். அதோடு எவ்வாறேனும் அவர்களிடம் பேச முயன்று சோழ மன்னருக்கு பொன்னமராவதிப் பாண்டியன் மீது போர் தொடுக்கும் எண்ணம் இருக்கிறது என்பதைச் சூசகமாகச் சொல் — அதை அறிந்தால் அவர்களேகூட நம்மை நாடி வரலாம்.'' என்று கூறி ஒற்றனை அனுப்பிவைத்தான்.

அமைச்சர் விடைபெற்றுப் போன பிறகு பொன்னி வளவனின் எண்ணம் பொன்னமராவதி அரசைப் பற்றியே சுற்றிச் சுழன்றது.

எவ்வாறேனும் அதை அழித்துத் தரை மட்டமாக்குவது தான் தனது முதற்கடமை என்று அவன் எண்ணினான்.

15. எண்ண அலைகள்

பௌர்ணமி வர இருநாட்கள் ஆகியிருந்தமையால் பொழுது சாய்ந்து சிறிது நேரத்திற்கெல்லாம் நிலவரசி தன் அமுதக் கிரணங்களை அள்ளிச் சொரியத் தொடங்கினாள்.

வேவுநகர்க் கோட்டையின் மேன்மாடத்தில் நின்று கொண்டிருந்த வீரத்தேவன் அங்கிருந்து தன் பார்வையில் பட்ட வேவுக்கண்மாயின் நீர்ப்பரப்பையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மெல்லிய அலைத்திவலைகள் மீது நிலவொளி பட்ட போது கண்மாயே தங்கத் தண்ணீரால் நிரம்பியது போன்ற பிரமையை அது ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

மாளிகையின் பின்புறத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த பல்வேறு செடிகளில் பூத்துக் குலுங்கிய மலர்களிலிருந்து காற்றோடு கலந்து வந்த இனிய மணம் அவனுக்கு மிகவும் ரம்மியமான சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருந்தது.

மாளிகையின் வலப்புறத்தில் வானோங்கி நின்ற தென்னை மரங்களில் வாழ்ந்த வானம்பாடிகள் ஆனந்தகீதம் பாடிய படியே காதல் வயப்பட்டிருந்தன.

சற்றுத் தொலைவில் கண்மாய்க் கரை ஓரமாக இருந்த ஆலமரத்தில் வாழ்ந்த ஆந்தைகள் நாங்கள் மட்டும் என்ன குறைவு என்பன போலக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தன.

அவலட்சணமான தோற்றமும் வெறுக்கத்தக்க குரலும் கொண்டு விளங்கினாலும் ஆந்தை இனங்கள் தங்களுக்குள் காதல் கொண்டு பேரன்பாய்த் தானே இருக்கும் என்ற எண்ணம் வீரத்தேவனுக்குத் தோன்றியது.

மிகவும் இழிபிறப்பாகக் கருதப்ட்டுகின்ற மிருகங்கள் கூடத் தம் இனத்துப் பெண் மிருகங்களிடம் ஆருக் காதல் உடையவையாகவே இருக்கின்றன என்ற எண்ணம் தோன்றிய போது, உலகப் பிறவிகள்தான் உருவத்தாலும் குணத்தாலும் தமக்குள் குறைபாடுகளையும் வேறுபாடுகளையும் காணுகின்றனவேதவிர ஆண்டவன் படைப்பில் எல்லா உயிர்களும் ஒன்றே என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது.

இது போன்ற சிந்தனைகளுக்கு இலக்கான வீரத்தேவன் உள்ளத்தே உடனே மதுரவல்லியின் மதுரமான தோற்றமும் பேச்சும் சிரிப்புமே நினைவிற்கு வந்தன.

ஏனோ அவன் அதை மறக்க முயன்றவனாக ஆட்சிப் பொறுப்புகள் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான்.

அத்தயை சிந்தனைகள் அவனுக்குத் தோன்றியபோது மூன்றாண்டுகளுக்கு.முன் வெள்ளாற்றங்கரையில் பாண்டியருக்கும் சோழருக்கும் நடத்த பெரும் போர் நினைவிற்கு வந்தது.

இன்று நாட்டில் அமைதி நிலவினாலும் எந்தச் சமயத்திலும் போர் தோன்றலாம்—அல்லது வேறு குழப்பங்கள் தோன்றலாம். உடல் ஆரோக்கியமாக இநக்கிறது என்று அலட்சியமாக இருக்கக்கூடாது அல்லவா? எந்த நேரமும்

நோய் தோன்றலாம். அதுபோலத்தான் நாட்டு நிலையும் என்ற எண்ணங்கள் அவனுக்குத் தோன்றியபோது பொறுப் புணர்ச்சியால் அவன் உள்ளத்தில் பெரியதொரு சுமை தோன்றியது.

மறுநாளே ஒற்றர் படையினரை அழைத்து நாடு எங்கும் செல்லும்படி கூறுவதுடன் பக்கத்து நாடுகளுக்கும் அனுப்ப வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

பாரிமன்னர் ஆண்ட காலத்தில் தன் முன்னோர்களில் ஒருவர் வேவுகாரப் படைத் தலைவராக இருந்து பல சாதனை கள் புரிந்ததால் இந்த ஊர்ப் பகுதிக்குப் பாரிமன்னர் வேவுப் பட்டி என்று பெயரிட்டு அவருக்குப் பரிசாக வழங்கியதுபற்றிய வரலாறு அவன் நினைவிற்கு வந்தது. சாமர்த்தியத்திலும் சாதனையிலும் தான் அத்தகைய பரிசுகளை வாங்க முடியாவிட் டாலும் முன்னோர் சேர்த்து வைத்துள்ள பெருமையைக் காப் பாற்றிக்கொள்ள வேண்டுமல்லவா? என்று அவன் நினைத் தான்.

இத்தகைய சிந்தனை அலைகளுக்கு இடையே அவன் சிக்கிக் கிடந்தபோது யாரோ வரும் காலடி ஓசை கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

வந்தது யார் என்பதை அவன் கண்டபோது அவன் அடைந்தது பெரு வியப்பா, இல்லை பெருந் திகைப்பா என்று அவனே புரிந்து கொள்ள இயலாத நிலை அவனுக்கு ஏற் பட்டது.

16. தம்மை மறந்தனர்

அந்த மாளிகையின் மேன் மாடத்தில் வீரத்தேவனுக்கு மிக அருகாமையில் கொன்றையூர் இளவரசி மதுரவல்லி வந்து நின்ருள்.

''ஏன் இப்படித் திகைக்கிறீர்கள் என்று அவள் கேட்ட போது அதற்கு வீரத்தேவன் பதில் ஒன்றும் சொல்லமுடியாமல் நின்ருன். இன்னும் சொல்லப் போனுல் அவள் வந்ததால் ஏற்பட்ட வியப்பிலிருந்தும் திகைப்பிலிருந்தும் அவன் விடுபடாதவனுக இருந்தான்.

''தளபதி அவர்களே! நீங்கள் எப்படி முத்துமாரி அம்மனை வணங்குவதற்கு வந்தீர்களோ, அதுபோலவே தங்கள் ஊர்த்தெய்வமான ஏனமாரி அம்மனைவணங்க நான் வந்தேன். நீங்கள் அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் வரவேற்ருலும் வரவேற்காவிட்டாலும் பரவாயில்லை என்று நானே தங்கள் மாளிகையை நோக்கி வந்தேன்'' என்று மதுரவல்லி தன் மலர் இதழ்களை விரித்தாள்.

தன்னிலை அடைந்த வீரத்தேவன், ''வானதேவதைகளை யாரும் வரவேற்க முடியாது—வரவேற்ருலும் வரமாட்டார்கள்; அவர்களாக விரும்பினுல்தான் வருவார்கள்'' என்று கூறிக் குறுநகை புரிந்தான்.

அவனது பாராட்டுமொழிகள் மதுரவல்லியைப் பெருங் களிப்பில் ஆழ்த்தின. அவனது உயர்ந்த தோற்றமும் மள மளவென்றிருந்த தோள்களும் செம்மை நிறமும் சிறிய கண்களும் உயர்ந்த அழகிய புருவங்களும் கவர்ச்சி மிகுந்த முகத்தோற்றமும் அவளை விம்மிதமடையச் செய்தன.

"வந்த பிறகுகூட வானதேவதையை உட்கார்" என்று சொல்லமாட்டார்களா?" என்று அவள் சாமர்த்தியமாகக் கேட்டாள்.

"அந்தத் தேவதை அமர்வதற்குத் தகுதியான ஆசனம் இந்த ஏனழயின் மாளிகையில் இல்லையே என்றுதான் கவலைப் பட்டுக்கொண்டிருக்கிறேன்" என்று வீரத்தேவன் குறும்பாகக் கூறினன்.

அதைக்கேட்ட கொன்றையூர் ராணி கலகலவென்று சிரித்தாள். அவள் சிரிப்பொலியே இனிய இசை மழையாக அவனுக்குத் தோன்றியது. தன் கண்ணெதிரே அமுதம் ஒரு பெண்ணுக வடிவெடுத்து வந்து நிற்பதாகவே அவன் நினைத் தான்.

மன்னன் பெருவழுதி அவளை மணக்க விரும்புகிருனே என்று முதல்நாள் ஏற்பட்ட குழப்பங்கள் பற்றிய சிந்தனை களே அவனுக்கு இப்பொழுது தோன்றவில்லை. அவளை வானதேவதை என்று வருணித்த அவன் தன்னை அறியாமலே கந்தர்வனுக ஆகிக்கொண்டிருந்தான்.

இந்த நேரத்தில் பக்கத்துப் புன்னைமரத்திலிருந்த இரட் டைக் கிளிகள் சிறகடித்துப் பறந்து மீண்டும் மரத்தில் அமர்ந்தன.

அவற்றின் சிறகடிப்பில் ஏற்பட்ட படபடவென்ற ஓசையைக் கேட்ட மதுரவல்லி சிறிது மிரண்டவள் இரண்டடி எடுத்து வைத்தவள் பக்கத்தில் நின்ற வீரத்தேவன் மீது மோதிக் கொண்டாள். காந்தமெனக் காதல் இருவரையும்

கவர்ந்தது. அவள் அவனை ஏறெடுத்துப் பார்க்க முயன்றாள். நாணம் மிகுந்ததால் சிரம் தாழ்த்திக் கொண்டாள்—அவள் தாடையைப் பிடித்து மெல்ல நிமிர்த்திய வீரத்தேவன் அந்தப் பஞ்சின் மெல்லிய பாவையின் இடையில் தன் வலிய கரமொன்றை வைத்து வளைத்துத் தன் உடலோடு அவள் உடலை இணைத்துக் கொண்டான். போதை மயக்கத்தில் ஆழ்ந்தவள் போல அவள் குவளைக் கண்கள் மூடின. அந்த மலர்களை மலர வைக்கும் பணியை மேற்கொண்டவன்போல அந்த அழகு இமைகள் மீது அவன் தன் இதழ்களைப் பலமுறை இணைத்தான். அவளது கன்னங்களில் கணக்கற்ற முத்திரைகளை அவன் பதித்தான். அவளது மாந்தளிர் மேனி அவனுடைய வலிய கரங்களுக்கிடையே அகப்பட்டுக் குழைந்தும் நெளிந்தும் தவழ்ந்தும் பல நிலை பெற்றன. அந்தக் காந்தப் பாவையை அவன் சின்னஞ்சிறு குழந்தையைத் தூக்குவது போலத் தூக்கிக்கொண்டு பக்கத்திலிருந்த பளிங்கு மேடைக்குச் சென்று அதிலே அவன் அமர்ந்து கொண்டு தன் விசாலமான மடிமீது அவளைப் படுக்க வைத்துக்கொண்டான். தன் மடிமீது குழந்தையைப் போலக் கிடந்த கோலமயிலின் மார்பகங்கள் மீது குழந்தையைப் போல வீரத்தேவன் தன் முகத்தைப் பதிக்க முனைந்தான். அப்பொழுது யாரோ மேன்மாடப் படிகளில் வரும் காலடி ஓசை கேட்டுப் பரபரப்போடு அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

அவன் மடியிலிருந்து எழுந்த மதுரவல்லி தன் மார்புக் கச்சினையும் அதை மறைப்பதாகப் பெயர் செய்துகொண்டிருந்த கண்ணுடியனைய மெல்லிய ஆடையினையும் பிற அணிகலன்களையும் அவள் மிகமிக விரைவாகச் சீர் செய்துகொண்டாள். மேன்மாடப் படிகளில் வருவது யாரோ என்று மிகுந்த அச்சத்தோடு இருவரும் பார்க்கத் தொடங்கினர்.

17. வெள்ளாற்றங்கரை விழா

ஆனந்தத்தில் கட்டுண்டு கிடந்த காதல் பறவைகளான வீரத்தேவனும் மதுரவல்லியும் அதிர்ச்சியோடு மேன்மாடத்திற்கு வருகின்ற பாதையையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஒற்றர்படையின் தலைமைப் பொறுப்பாளனுன் வேள்மாறன் அங்கே வந்து மிகுந்த பணிவோடு நின்ருன். அந்த நேரத்தில் அவன் வந்தது எதிர்பாராதது என்ருலும் வேறு யாருமில்லாமல் அவன் வந்தானே என்று வீரத்தேவன் மிகுந்த மகிழ்ச்சி கொண்டான்.

"தளபதியாருக்கு எந்த நேரத்தில் அரசியல் பிரச்சினைகள் வரும் என்று சொல்ல முடியாது. அது எந்த நேரத்திலும் வரும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் வேள்மாறன் வந்திருக்கிருர்", என்று கூறித் தனது கரிய பெரிய விழிகளால் போதையோடு வீரத்தேவனைப் பார்த்து மதுரவல்லி விரைந்து அங்கிருந்து புறப்பட்டாள்.

பரபரப்போடு வீரத்தேவன் அருகில் வந்த வேள்மாறன், "அரசருக்கு உடல் நலமில்லை, அதனுல் உங்களை உடனே அழைத்துவரச் சொன்னுர்", என்று கூறினுன்.

மேலும் அவனோடு பேசிக்கொண்டிருக்க விரும்பாத வீரத்தேவன் விரைந்து கீழே சென்று பாய்ந்து தன் குதிரை

மீது ஏறிச் சில விநாடி நேரங்களிலேயே பொன்னமராவதி அரண்மனையை அடைந்து மன்னனைக் கண்டான்.

சுரத்தால் பிடிக்கப்பட்டுப் படுக்கையில் இருந்த மன்னனருகில் சென்ற வீரத்தேவனை நோக்கிப், "பரபரப்பு அடையும்படியாகவோ பயப்படும்படியாகவோ ஒன்றுமில்லை", என்று கூறிய மன்னன், "ஆண்டுதோறும் தைமாதப் பௌர்ணமியன்று வெள்ளாற்றங்கரையில் விரிவான முறையில் தந்தையார் அவர்கள் விழாக் கொண்டாடி வந்தார்கள். இந்த ஆண்டு நான் அரசியல் பொறுப்பு ஏற்ற ஆண்டு ஆதலால் மிகவும் சிறப்பாகவே அதனைக் கொண்டாட விரும்பினேன். ஆனால் எதிர்பாராது உடல்நலக் குறைவு ஏற்பட்டு விட்டதால் நாளை மறுநாள் நடக்கவிருக்கும் பௌர்ணமி விழாவில் நான் கலந்துகொள்ள முடியாதவனாக இருக்கிறேன். எனவே தங்கை ஆலவாயழகியையே அனுப்ப எண்ணியுள்ளேன். நானில்லாத குறையில்லாமல் விழாவை மிகச் சிறப்பாக நடத்துவது உனது பொறுப்பு! அரச காரியங்களில் ஆலோசனைக்காக மட்டுமல்லாமல் எனக்கு அருகில் யாராவது இருக்கவேண்டும் என்பதற்காகவும்கூட அமைச்சர் சுந்தரத்தேவர் இங்கேயே இருக்கட்டும். மதுரவல்லி விழாவிற்கு வரட்டும். அவள் வருவது என் சகோதரிக்குத் தக்க துணையாக இருக்கும்", என்று கூறிய மன்னன் வீரத்தேவனுக்கு விடை கொடுப்பதுபோலப் பார்த்தான்.

அந்தக் குறிப்பினை யுணர்ந்த வீரத்தேவன் அங்கிருந்து புறப்பட்டான்.

சென்றவனை அழைத்த மன்னன், "வீரத்தேவா! இன்னொரு இன்றியமையாத செய்தி! வெள்ளாற்றங்கரை எங்கே இருக்கிறது என்று உனக்குத் தெரியும் என்று நினைக்கின்றேன்" என்று கூறிவிட்டு அர்த்தமுள்ள பார்வையொன்றை வீரத்தேவனை நோக்கி மன்னன் வீசினான்.

"தெரியும்", என்று மிக்க பணிவோடு வீரத்தேவன் தலையை ஆட்டினான்.

“எங்கே இருக்கிறது?” என்று விநயத்தோடும் விளையாட்டாய்க் கேட்பது போலும் மன்னன் கேட்டான்.

“மன்னவா! நமது எல்லைக்கோடாக வெள்ளாற்றங்கரை இருக்கிறது. அது மட்டுமல்லாமல் சோழ நாட்டின் எல்லைக் கோடாக வெள்ளாற்றங்கரையின் அக்கரை இருக்கிறது”, என்று கூறி வீரத்தேவன் நிறுத்தினான்.

“வீரத்தேவா! இவை பற்றியெல்லாம் என்றும் உனக்கு அக்கறையிருக்கும் என்பது எனக்கு நன்கு தெரியும். அதனால் தான் வெள்ளாற்றங்கரை விழா அமைப்பினையே உன் பொறுப்பில் விடுகின்றேன். அப்பகுதியில் நம் எல்லையைக் கடந்து கூடச் சோழப் புலிகள் சில மோப்பம் பிடிக்கக்கூடும்!” என்று மன்னன் கூறினான்.

“அவ்வாறு வந்தால் அந்தப் புலிகளுக்கு அங்கேயே விலங்கிட்டுக் கால்நடையாகவே பொன்னமராவதிக்கு இழுத்து வருவேன்”, என்று வீரத்தேவன் சீறினான்.

அம்பு போல் அவன் அங்கிருந்து பாய்ந்து சென்றாலும் மன்னன் முன்னிருந்து நடத்தவேண்டிய விழாவை நாம் நடத்த வேண்டியிருக்கிறதே என்ற எண்ணம் அவன் நெஞ்சத் திரையிலே நிழலாடிக் கொண்டிருந்தது.

18. மூவர் செய்த சதி

வல்லத்து அரண்மனையில் எழுநிலை மாடத்தில் யார் வருகையையோ எதிர்பார்த்த வண்ணம் சோழமன்னன் பொன்னிவளவன் நடமாடிக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஒற்றர் தலைவன் ஓடிவந்து, "அவர்கள் வருகிறார்கள்," என்று கூறினான்.

மனிதனுடைய தகுதி எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் தேவைகளைப் பொறுத்துச் சமயத்தில் அது மிகவும் தாழ்ந்துவிடுகிறது. பொன்னிவளவன் கோடி மன்னர்கள் என்ற பெரிய பாரம்பரியத்தில் வந்தவன். அவனுக்கு என்று அரண்மனையும் ஆட்சியும் ஆள் அம்பு சேனைகளும் இருந்தன. ஆயினும் பாண்டி நாட்டு மண்ணைத் தனதாக்கிக் கொண்டு விடவேண்டும் என்ற எண்ணம் தலைதூக்கியபோது இவர்கள் யார்? என்று சரியாகத் தெரியாதவர்களைக்கூட வரவேற்பதற்காக எழுந்து நடைபோடுகிற அளவிற்குத் தன்னிலை மறக்கும்படியாக ஆகிவிடுகிறது.

வந்துவிட்டார்கள் என்று ஒற்றர் தலைவன் சொன்னதும் அந்த வல்லத்து இளவரசன் தனது பொன்னாசனத்தில் அமர்ந்துகொண்டான். வந்தவர்களை அழைத்து வருமாறு ஒற்றர் தலைவனிடம் கூறினான்.

அவனும் அழைத்து வந்தான்.

வந்தவர்கள் வேறு யாருமல்லர்! நந்திதேவன் என்ற பெயரிலே நாடகமாடுகின்ற வானவன் கோதையும் வில்லவனும்தான்! தன் முன்னே இருந்த ஆசனங்களில் அவர்கள் இருவரையும் உட்காரும்படி சைகை செய்த பொன்னிவளவன் அவர்கள் அமர்ந்ததும், "நீங்கள் என்னைப் பார்க்க விரும்புவதாக அறிந்தேன். எதன் பொருட்டுப் பார்க்க விரும்பினீர்கள், என்பதனை அறிய விரும்புகிறேன்", என்று மிடுக்கோடு கூறினன்.

பொன்னமராவதிப் பாண்டியனை வெல்வதற்கு எந்த வகையிலேயாவது நாம் உதவ மாட்டோமா? என்ற எண்ணம் சோழனுக்கு இருந்தாலும் அவனுக்கு என்று ஒரு சூழ்நிலை இருப்பதால் அதனைக் காட்டிக் கொள்ளாமல் பேசுகிருன் என்பதனை வில்லவன் கோதை மிக எளிதாய்ப் புரிந்துகொண்டான். என்ருலும் பலம் இருக்கிற இடத்தில் பலவீனமானவன் எல்லாவற்றையும் சொல்லிவிட முடியாதல்லவா? எனவே சோழ மன்னனை உயர்த்திப் பேசுகிற தோரணையிலேயே அவன் பேச்சைத் தொடங்கினன்.

"பகையுலகை நோக்கிப் படையெடுப்பதிலிருந்து பக்தி உலகிற்குக் கோயில்கள் கட்டுவது வரை எல்லாவற்றையுமே மிகப் பெரிதாகச் செய்து உலகப் புகழ்பெற்ற சோழ மன்னர்களின் பெருமதிப்பிற்குரிய வாரிசாக விளங்குகின்ற மன்னர் அவர்களே!

எங்கள் இருவரைப் பற்றிய உண்மையை உங்களிடம் சொல்லிக் கொள்வதிலே நாங்கள் வெட்கப்படவில்லை. இந்த வில்லவன் குமரிச் சீமையின் ஏகப்பிரதிநிதியாக விளங்கிய சேர நன்னுட்டுக் குறுநில மன்னர் இரும்பொறையின் ஒரே மைந்தன். இன்று பொன்னமராவதிச் சீமையை ஆளுகின்ற பெருவழுதிப் பாண்டியனின் தந்தை மும்முடிப் பாண்டியனின்

ஆட்சி எல்லை அரளிப்பாறையாக இருந்தாலும் இராமநாதபுரம், நெல்வேலி ஆகிய சீமைகளை ஆளுகின்ற பாண்டிய மன்னர் களின் தலைவனாகவும் என்றென்றும் இவனே விளங்கி வந் தான்.

ஒருமுறை நெல்வேலிச் சீமையை ஆண்ட பாண்டியனுக் கும் குமரிச்சீமையுள்ளிட்ட பகுதிகளை ஆண்டுவந்த சேர மன்னன் இரும்பொறைக்கும் இடையே போர் மூண்டது. அன்று நெல்வேலிப் பாண்டியனுக்கு இந்த மும்முடிப் பாண் டியன் உதவிக்கு வாராமல் இருந்திருந்தால் அவர்களுக் கிடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டிருக்கும். அல்லது தோற்றவர் வென்றவருக்கு திறைப்பொருள் செலுத்துவது என்ற அளவோடு அந்தப் போர் முடிந்திருக்கும். ஆனால் மும்முடிப் பாண்டியன் பெரும்படையோடு வந்து நெலவேலிப் பாண்டியனுக்கு உதவுகிறேன் என்ற பெயரில் சேர மன்னர் இரும்பொறையைக் களத்திலேயே கொன்ருன்.

குமரிப் பகுதிகளைச் சின்னபின்ன மாக்கினுன். அந்த மன்னனுடைய ஒரே வாரிசான இந்த வில்லவன் திருவனந்த புரம் பகுதிக்கு ஓடிவிட்டான். போர் என்று வருகிறபொழுது வாழ்வும் தாழ்வும் தோன்றும் என்ருலும் மும்முடிப்பாண்டியன் செய்த கொடுமையைச் சேரன் இரும்பொறையின் சொந்தத் தம்பியான என்னுல் ஒருபோதும் மறக்க இயலவில்லை இதனுல் குமரிப்பகுதியிலிருந்து மும்முடிப் பாண்டியன் திரட்டி வந்த படைவீரர்களில் ஒருவரைப் போல நானும் வந்து துணைத் தளபதி என்ற பதவியை அதே மும்முடிப் பாண்டிய னிடம் அடைந்தேன்.

குமரிப் பிரதேசத்திலிருந்து அவன் கொண்டுவந்த படை வீரர்கள் பல்வேறு இடங்களுக்குப் பிரித்து அனுப்பப்பட்டு விட்டதால் எனக்கென்று படைவீரர்களிடையே ஒரு பக்க பலத்தை என்னுல் உருவாக்க முடியாமற் போய்விட்டது. சில வேளைகளில் மும்முடிப் பாண்டியனைக் கொன்று விடலாம் என்று கூட நான் எண்ணியதுண்டு! ஆனுல் சில காலத்திற்கு

முன்னால் இயற்கையாக அவனே இறந்துவிட்டான். அவனுக்கு வலதுகரம்போல் விளங்கிய கொன்றையூர் மன்னன் கடுங்கோப் பாண்டியனின் மகன் சுந்தரத் தேவனோடு நட்பு முறையில் பழகுவது போலச் சில ஆண்டுகளாகத் திட்டமிட்டே நான் பழகிவருகிறேன். அதற்கேற்பவே பெருவழுதிப் பாண்டியனும் என்ன காரணத்தாலோ சுந்தரத்தேவனுக்கு உரிய பதவிகளைக் கொடுக்காமலே இருந்து வருகின்றான்.

சோழ மன்னரே! சுற்றிவளைத்துப் பேச நான் விரும்பவில்லை, பெருவழுதிப் பாண்டியனின் தளபதியான கடுங்கோப் பாண்டியனால் உங்கள் தந்தை கொல்லப்பட்டார். பொன்னமராவதிப் பாண்டியனால் நாங்களும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். நீங்களும் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள்! ஆனால் ஒரு வேறுபாடு! நாங்கள் நாடோடிகளாகிவிட்டோம். நீங்கள் இன்னும் நாடாளுகிற சூழ்நிலையில் இருக்கிறீர்கள். பெருவழுதிப் பாண்டியன் மீது படையெடுப்பதற்கு இது மிக நல்ல தருணம்! பலவகையிலும் ஏமாற்றத்திற்கு ஆளாகியிருக்கிற சுந்தரத் தேவனை நாம் நம் பக்கம் இழுத்துக் கொண்டு விடலாம்! நமக்கு எதிர்ப்பாக இருக்கக் கூடிய ஒரே ஆற்றல் உள்ளவன் வீரத்தேவன் மட்டுமே! சுந்தரத்தேவனைக் கொண்டு அவனை மிகச் சுலபத்தில் இழுத்துவிடலாம். காரணம் அவன் அன்பிற்குக் கட்டுப்பட்டவன். சுந்தரத் தேவனுக்கும் அவனுக்கும் இருக்கிற அன்பைக் கொண்டே அவனுக்கு முடிவு கட்டிவிடலாம். என் அண்ணனுக்கு என்ன நிலை நேர்ந்ததோ உங்கள் தந்தைக்கு என்ன நிலை நேர்ந்ததோ, அந்த நிலையைப் பெருவழுதிப் பாண்டியனுக்கு நாம் உண்டாக்குவோம். களத்திலேயே அவனைச் சின்னா பின்னமாக்குவோம்! அவன் தலையைத் தனியாக அறுத்து நாய் நரிகளுக்குப் பருந்து கழுகுகளுக்கு விருந்தாக்குவோம்! செயலற்ற நிலையுண்டாகிற பொழுது சுந்தரத்தேவனால் என்ன செய்ய முடியும்? அப்பகுதிக்கு அவனைத் தளபதியாக்கினாலே போதுமென்று அவன் அமைதியாக இருந்துவிடுவான்! வில்லவனை மீண்டும் குமரிப் பகுதிக்கு அரசனாக்குவோம்!

நான் அவனுக்குத் தளபதியாக இருந்து அவனைக் காக்கின்றேன். பொன்னமராவதிச் சீமையையும் சேர்த்து நீங்களே ஆட்சி செய்து கொள்ளுங்கள்! நெடுந்தொலைவில் இருக்கின்ற எங்களுக்கும் உங்களுக்கும் இடையே பகைநேர்வதற்கு ஒன்றுமில்லை!'', என்று வானவன் கோதை மிக உணர்ச்சியோடு பேசி நிறுத்தினன்.

யாரோ வரப்போகிறார்கள், ஏதோ பேசப்போகிறார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்த பொன்னிவளவனுக்கு வானவன் கோதையின் வீரமிக்க பேச்சு எல்லையற்ற உத்வேகத்தை உண்டாக்கிற்று. எழுந்து வானவன் கோதையைத் தழுவிக் கொண்ட அவன், "மனம்விட்டுப் பேசிய நண்பனே! உங்கள் நிலைகண்டு நான் மிகவும் வருந்துகிறேன். மீண்டும் நீங்கள் பாண்டிநாட்டிற்குச் சென்று சுந்தரத்தேவனை முழுமையாக நம்மவனாக்கும் முயற்சியில் வெற்றி காணுங்கள்! அடுத்த பௌர்ணமியன்று நாம் படை கொண்டு சென்று பொன்னமராவதிப் பாண்டியனைப் புழுதி மண்ணாக்குவோம்!'' என்று சீறினன்.

"சோழ மன்னரே! இந்தப் பௌர்ணமியன்று பெருவழுதிப் பாண்டியன் வெள்ளாற்றங்கரையிலே பௌர்ணமிப் பெருவிழாக் கொண்டாடுகிறான். அடுத்த பௌணர்மியன்று அந்த வெள்ளாற்றங்கரையிலேயே நாம் வெற்றிவிழாக் கொண்டாடுவோம்', என்று முழங்கிவிட்டு வில்லவனை அழைத்துக் கொண்டு அவன் அங்கிருந்து சென்றான்.

19. பௌர்ணமி விழா

வெள்ளாற்றின் தென்கரையில் பல இடங்களில் பாடி வீடுகள் அமைக்கப்பட்டிருந்தன.

வண்ண வண்ணத் துணிகளால் இரண்டு பாடி வீடுகள் அமைக்கப் பெற்று அதன் இருபுறமும் வரிசையாக இருந்த பாடி வீடுகளுக்கு அவை தலைமை தாங்குவன போலத் தோற்றம் அளித்தன.

ஆற்றின் வடகரையில் ஆங்காங்கே சோழர்களின் காவற் சாவடிகள் காட்சியளித்தன. பாண்டியர்கள் வெள்ளாற்றுக்குப் பௌர்ணமி விழாக் கொண்டாட வருகிறார்கள் என்பதை யொட்டியே புதிய புலிக் கொடிகளை அவர்கள் பறக்க விட்டிருந்தார்கள்.

அந்தக் காவற் சாவடிகளிலிருந்த வீரர்களுக்குக் கரையின் மறுபுறத்தே ஆயிரம் ஆயிரமாகப் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்த மீனக்கொடிகளைப் பார்த்த பொழுது பெரும் எரிச்சலாகவே இருந்தது.

பாண்டிய வீரர்கள் பல்லாயிரக் கணக்கில் வந்து குழுமி யிருந்ததைப் பார்த்தபோது அவர்களுக்குச் சிறிது அச்சமும் ஏற்பட்டது.

காலை முதலே பல்வேறு கலைநிகழ்ச்சிகள் ஆங்காங்கே நடக்கத் தொடங்கின. பக்கத்தூர்களிலிருந்து ஆயிரக்கணக்

காக ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் சாரை சாரை யாக வந்து அந்த விழாவிலே கலந்து கொண்டார்கள்.

பெண்கள் கும்மி, கோலாட்டம், குரவை போன்ற குடும்ப நிகழ்ச்சிகளையும் ஒரு புறம் நடத்திக் கொண்டிருந்தார்கள். ஆடவர்கள் சிலம்பம் ஆடுவதிலிருந்து புலிவேடம் போடுவது வரை பல நிகழ்ச்சிகளிலே ஈடுபட்டிருந்தார்கள்.

இந்த நிலையில் பிற்பகல் வேளையில் நால்வகைப் படையின ரும் முன் வரப்பாண்டியன் பாவை ஆலவாயழகி பல்லக்கில் வந்தாள். அவளைத் தொடர்ந்து மதுரவல்லி ஒரு பல்லக்கில் வந்தாள். மக்கள் எல்லாம் இளவரசியை வாழ்த்தி ஆரவாரம் செய்தார்கள். தெய்வம் போல் வந்த திருவிளக்கு என்று போற்றினார்கள். இளம் பெண்களும் பிள்ளைகளும் அழகே உருவான இளவரசியை முட்டி மோதிக் கொண்டு வியப்போடு பார்த்தார்கள். பொதுமக்கள் பார்வைக்காகச் சிறிது நேரம் ஆற்றங்கரையில் நின்ற அரசி ஆலவாயழகியும் மதுரவல்லியும் அவர்களுக்கென்று அமைக்கப்பட்டிருந்த அந்த இரு பாடி வீடுகளுக்கும் சென்றார்கள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மதுரவல்லி இளவரசியின் இருக்கையை அடைந்தாள். இருவரும் நகைச்சுவையாகப் பல விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பேச்சிற்கிடையே அவர்களுடைய திருமணத்தைப் பற்றிய பேச்சும் தலைதூக்கியது.

"உனக்கென்னடி...? உன்னை என் அண்ணனே சிறையெடுத்துப் போனாலும் போய்விடுவார்" என்று இளவரசி ஆலவாயழகி கூறினாள்.

தன் உள்ளக் கருத்தையறியாது பேசுகிறாளே என்று எண்ணிய மதுரவல்லி, உன் அண்ணன் மகாப் பெரிய மன்னர் என்பதை ஒப்புக் கொள்கிறேன். அதற்காக

மணக்கப் போகிற பெண்ணைக்கூடச் சிறைதான் எடுத்துச் செல்வாரா ?'' என்று கூறிச் சிரித்தவள், ''உன்னை யாரடி சிறையெடுத்துப் போகப் போகிறுன் ?'' என்று கேட்டாள்.

''எனக்கென்று யாரடி இருக்கிறுர்கள் ?'' என்று ஆற்ருமையோடு இளவரசி ஆலவாயழகி கூறினுள்.

''கவலைப்படாதே, அங்கயற் கண்ணி அருளால் உனக்கு விரைவிலேயே நல்ல கணவன் வருவான்'', என்று மதுரவல்லி கூறினுள்.

ஏதோ பாட்டிபோல ஆசீர்வாதம் செய்கின்ருய்; சோதிடக்காரி போல ஆருடம் சொல்கிருய்!'' என்று கூறிவிட்டு ஆலவாய் அழகி 'கலகல' வென்று சிரித்தாள்.

இளம்பெண்கள் இருவர் கூடிஞல் பேச்சிற்கு என்ன குறை ? இருவரும் எதையெதையோ பேசிக் கொண்டிருந்து விட்டு அந்தி சாயும் வேளையில் பாடி வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள். பகலெல்லாம் தகித்துக் கொண்டிருந்த சூரியன் மேலைக் கடலிலே நீராட விரும்பி உடலெங்கும் செம்மைப் பொடியைப் பூசிக் கொண்டவன் போலக் காட்சி தந்தான். அவனுடைய செவ்விய ஒளிபட்டு அந்த ஆறு வெள்ளாறு என்று பெயர் பெற்றிருந்தாலும் சிவப்பாருகக் காட்சி தந்தது. பொழுது கழியக் கழியப் பூரண நிலவரசியின் தண் கதிர்கள் பட்டுப் பொன்னுருகக் காட்சி தந்தது.

ஆலவாயழகியும் மதுரவல்லியும் அவரவர்களுடைய பாடி வீடுகளிலே பஞ்சணைகளின் மீது சாய்ந்து கொண்டிருந்தார்கள். வெளியே லேசாகக் குளிர்காற்று வீசத் தொடங்கியிருக்கிறது என்பதை அவர்கள் உள்ளிருந்தே உணரத் தொடங்கினுர்கள். எப்படியும் அப்பொழுது முதற் சாமம் இருக்கும் என்று மதுரவல்லி எண்ணினுள்.

வீரத்தேவனும் அவளும் இரண்டறக் கலந்து விட்டார்கள் என்ற நிலை ஏற்பட்டிருந்தாலும் கூட, ஏழிசையரசி என்ற பட்டத்தை அவள் பெற்றிருந்தாலும் கூட, அவள் பாடி அவன் கேட்டதில்லை என்ற நினைவு அவளுக்கு வந்தது.

எனவே இந்த விழாச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு யாழை இசைத்துப் பாடினால் அது பொதுவாக விழாவிற்காகப் பாடியது போலிருக்கும்! தன்னைப் பொறுத்த வரை அவருக்காகப் பாடியது ஆகும்! என்று அவள் நினைத்தாள். இந்த எண்ணம் தோன்றிய பொழுது அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை! எழுந்தாள். பக்கத்திலிருந்த யாழை எடுத்து இசைத்தாள்.

தொடுக்குங் கடவுள் பழம்பாடல்
தொடையின் பயனே! நறை பழுத்த
துறைத்தீந்தமிழின் ஒழுகு நறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கையகழ்ந்

தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்

உடுக்கும் புவனங் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத் திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோவியமே! மதுகரம் வாய்

மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே! மலயத்
துவசன் பெற்றபெரு வாழ்வே!
வருக! வருகவே!

மதுர வல்லியின் இசை கேட்டு வெள்ளாற்றங் கரைப் பிரதேசமே தன்னிலை மறந்தது! பாண்டி நாட்டு வீரர்களெல்லாம் அந்தப் பாவையின் இசை கேட்டுக் கற்சிலையானார்கள்.

இந்த நிலையில் தன்னிலை மறந்து மஞ்சத்தில் சாய்ந்து கிடந்த ஆலவாயழகி தங்கியிருந்த பாடி வீட்டிற்குள் பாண்டியரின் வலிமை மிக்க காவலைக் கடந்து மூன்றாமவனாக ஓர் இளைஞன் நுழைந்தான்.

20. இளவரசியின் கோரிக்கை

மதுரவல்லியின் இசைமயக்கத்தில் ஆழ்ந்த ஆலவாய் அழகி மஞ்சத்தில் தன்னை மறந்து ஒரு பக்கமாக சாய்ந்தபடி படுத்திருந்தாள்.

பட்டுத்தலையணைமீது அவளுடைய இடதுபுற மார்பகம் அழுந்தியிருந்தாலும் கூட அது தன் இளமைக் கோலத்தைப் புலப்படுத்திக் கொண்டிருந்தது. அவளது மார்க் கச்சுகளின் மீது போர்த்துவதற்காக அவள் போட்டிருந்த மெல்லிய பட்டாடை நழுவி மஞ்சத்தில் ஒருபுறம் கிடந்தது.

தன்னந்தனியவளாக மஞ்சத்தில் சாய்ந்திருந்த ஆலவாய் அழகி ஆடை அணிகலன்கள் என்ன நிலையில் இருந்தன என்பது பற்றிக் கவலைப்படாதவளாகவே இருந்தாள். அதிலும் மதுரவல்லியின் இசைவேறு அவளைப் போதை கொள்ளச் செய்திருந்தது.

யாருமறியாமல் ஆடவன் ஒருவன் தன் இருக்கைக்குள் வருவான் என்று அவள் எப்படி எதிர்பார்க்க முடியும்?

தன்னை மறந்து கிடந்த அவளை வந்த வாலிபன் கூர்ந்து கூர்ந்து பார்த்து ரசித்தான். அவள் அவனுக்குப் பேரழகுப் பெட்டகமாகவே, அமுத கலசமாகவே தோன்றினாள்.

வந்தவன் யார், அவன் எப்படி வந்தான் என்பனவற்றை அறிந்தால் நமக்கும் இந்த நிகழ்ச்சி சுவையுடையதாக இருக்கும்.

பாண்டியர் கட்டுக்காவலை மீறி இளவரசி ஆலவாய் அழகி இருக்கும் பாடி வீட்டிற்குள் நுழைந்தவன் சோழ இளவரசன் பொன்னிவளவனே ஆவான்.

வெள்ளாற்றின் வடகரை ஓரமாக இருந்த பாடி வீடுகளை நோக்கி இரவோடு இரவாக வந்த சோழ மன்னன் ஏழிசை அரசியாக விளங்கும் மதுரவல்லியின் இனிய பாடல்தனைக் கேட்டு அனைவரும் மெய்மறந்திருந்த சமயம்—பாண்டிய இளவரசியைப் பார்த்துவிட வேண்டும் என்ற பேராவலில் அவன் எவ்வாறு அக்கரையை அடையலாம் என ஒருகணம் யோசித்தான். அடுத்தகணமே பாண்டிய வீரர் உடையில் அவன் பாண்டிய இளவரசியின் பாடி வீட்டை அடைந்தான். இசைமயக்கத்தில் பாண்டிய வீரர்கள் ஆழ்ந்திருந்ததாலும் அவன் பாண்டிய வீரர் உடையில் இருந்ததாலும் மெல்ல மெல்ல பாடி வீட்டிற்கு அருகில் வந்து அரசிக்கு ஏதோ பொருள் கொண்டு செல்வதுபோல அழகிய கூடை ஒன்றைக் கையிலேந்தியபடி உள்ளே நுழைந்துவிட்டான்.

பாண்டியரைத் தான் வெல்லப் போவது உறுதி என்பதும் அதுசமயம் பாண்டியன் பாவையான ஆலவாய் அழகியைச் சிறையெடுத்துவந்து மணந்துகொள்ளலாம் என்றும் அவன் எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். அதற்குள் ஒருமுறை அவளைப் பார்த்துவிடவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. எனவே மதுரையாளும் மீனும்பிகையைப்பற்றிய பாடல் முடிவதற்குள் வந்துபார்த்துத் திரும்பிவிடலாம் என அவன் எண்ணினான். ஆனால் அவன் நினைத்தபடி அது அவ்வளவு எளிதாக ஆகிவிடவில்லை.

பார்த்ததும் திரும்பலாம் என்று அவன் எண்ணியதே பாண்டியன் பாவையைப்பார்த்தும் அவனுக்கு மறந்துபோய்

விட்டது. அவளுடைய அங்கப் பொலிவுகளும் யாரையும் மயக்கும் முகவனப்பும், அவனை நிலைகுலையச் செய்தன. தன்னை மறந்த அவன் மெல்ல நடந்து அவள் சாய்ந்து படுத்திருந்த நிலைக்கு ஓரமாக அவன் சென்றான். அவள் அழகை விழுங்கி விடுபவன் போல அவன் பார்த்தபடி நடந்தபோது அகில் புகை வைத்திருந்த சிறிய மேடைமீது அவன் மோதிக் கொள்ளவே, திரும்பிய அரசி பாண்டிய வீரன் ஒருவன் தன் அருகில் நிற்கிறான் என்று முதலில் எண்ணியவள் பிறகு அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்து ஏதோ பெரியதொரு ஐயத்திற்கு இலக்காகிக் கூச்சலிட முயன்றாள். பாய்ந்து சென்ற பொன்னி வளவன் அவள் மலர்வாயைத் தன் உறுதிமிக்க கரங்களால் மூடியவன், மெல்லிய குரலில்! தேவி! என்று மெல்லஅழைத்து மார்பில் இருந்த காவலன் உடையை நீக்கிப் பார்க்கும்படி கண்களால் சைகை செய்தான். அதில் உள்ள புலிச்சின்னத்தைப் பார்த்த ஆலவாய் அழகியின் கண்களில் அச்சம்- ஆச்சரியம்—என்று பல உணர்ச்சிகள் தோன்றலாயின.

"பாண்டியன் பாவையே, உன் அழகு பற்றி நான் பல முறை கேள்விப்பட்டிருக்கிறேன். உனக்காக நான் எதையும் தரச் சித்தமாக இருக்கிறேன்—நீ என்னை நம்பு—நான் சோழ நாட்டு மன்னன் பொன்னிவளவன்—காதலும் ஒரு சங்கமம் தான். அதற்கு நீண்ட நாட்கள் பழகியிருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. பாண்டி நாட்டை வென்று நான் உன்னைச் சிறை எடுக்க நினைத்தேன். ஆனால் உன் சாந்தம் தவழும் வதனத்தைக் காணுகின்றபொழுது சமாதானமே எனக்குத் தோன்றுகிறது—அன்பு வழியாலேயே உன் அண்ணனை அணுகி உன்னை நான் மணப்பேன்—இது சத்தியம்" என்று அவன் கூறினான்.

தன் மலர் இதழ்களைப் பற்றியிருந்த அவன் வலிய கரங்களைத் தன் பூங்கரங்களால் பற்றிய ஆலவாய் அழகி "நானும் உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களை இன்றுதான் நான் காண்கிறேன் என்றாலும் யுகயுகமாக நான்

உங்களுக்குரியவள் என்ற எண்ணமே எனக்கு மேலிடுகிறது'' என்று ஆவலாய் அழகி கூறினுள்.

பொன்னிவளவனின் திடகாத்திரமான உருவமும் நேர்த்தியான மிக அழகிய அவன் வதனமும் அவளைத் தன்னிலை மறக்கும்படி செய்தன.

''மதுரவல்லி பாடலை முடிக்கும் முன் நீங்கள் புறப்பட்டு விடுங்கள்'' என்று ஆலவாய் அழகி பரபரப்போடு கூறினுள்—

''நல்லவேளை! உன் தோழியின் இசைகேட்டு உங்கள் நாட்டு வீரர்களெல்லாம் கல்லாய்ச் சமைந்து விட்டார்கள்—நான் சுலபமாக வந்துபோக வாய்ப்பாகப் போய்விட்டது—'' என்று கூறிய பொன்னிவளவன் பிரிய மனமின்றித் திரும்பினுன்.

அங்கே உருவிய வாளோடு வீரத்தேவன் நின்றுகொண்டிருந்தான்.

மகாவீரனுன பொன்னிவளவன் ரத்தமே ஒருகணம் உறைந்துவிட்டது.

நிலையை அறிந்த ஆலவாய் அழகி மஞ்சத்திலிருந்து எழுந்து அங்கு வந்தாள்.

''பாண்டிய வீரர்கள் கல்லாக இருந்தாலும் கடமையை மறக்கமாட்டார்கள் சோழ மன்னரே!'' என்று கூறி நெருப்பாக வீரத்தேவன் கொதித்தான்.

வீரத்தேவனது வருகையை எதிர் பார்க்காத சோழ இளவரசனும்—பாண்டிய இளவரசியும் சற்று நேரம் செயலற்றுப் போயினர்.

இருப்பினும் நாடாளும் வேந்தனல்லவா?எந்த ஒரு நிலையி லும் தன்னிலை பெறும் ஆற்றல் அவனுக்கு இருக்குமல்லவா?

"வீரத்தேவரின் சாமர்த்தியங்கள் பற்றி நிறையக்கேள்வி பட்டிருக்கிறேன். இன்று நேரிலேயே காணும் வாய்ப்பினைப் பெற்றுள்ளேன். பாண்டிய நாட்டுத் தளபதியாரே! எனது வருகை சமாதானப் படை உடையே! சங்கம் வைத்துக் கன்னித் தமிழ் வளர்த்த உங்கள் முன்னோர்கள் புறத்தை மட்டுமல்லாமல் அகத்தையும் வளர்த்தார்கள். அகத்திற்கு எல்லையில்லை. காதலால் நாங்கள் கட்டுண்டு விட்டோம்—எனவே இந்த இடத்தில் புறத்திற்கு முதன்மை கொடுக்கமாட்டீர்கள் என எண்ணுகின்றேன்" என்று வினய மாக பொன்னிவளவன் கூறினான்.

"சோழ மன்னரே! நாங்கள் அகத்தைப் பற்றிப் புரிந்து கொண்டவர்கள் தான். ஆனால் அதே சமயம் புறத்தைப்பற்றி யும் புரிந்து கொண்டவர்கள். பகைவர்களுக்கு அருளுவது அருள் உலகத்திற்குச் சரியாக இருக்கலாம்; அரசியல் உலகிற்கு அது ஒவ்வாதது"—என்று கூறினான். இல்லை, வீரத்தேவன் சீறினான்.

ஆலவாய் அழகியின் கண்களில் நீர் முத்துக்கள் தேங்கி உதிர்ந்தன.

"வீரத்தேவரே! நான் பாண்டிய இளவரசியாக இருந்து அல்ல—சாதாரணக் குடிமகளாக இருந்து கேட்கிறேன். அவரை நான் என் கணவராக ஏற்றுக்கொண்டு விட்டேன். எனவே அவர் என் தெய்வமாகி விட்டார். என் சகோதரர் அனைய நீங்கள் என் தெய்வத்தை இது பொழுது காத்தே ஆக வேண்டும்" என்று கரம் குவித்தாள்.

செய்வதறியாது சற்றுத் திகைத்த வீரத்தேவன் ஆலவாய் அழகியின் வேண்டுகோளுக்கு உடன்பட்டான் என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சிரம் தாழ்த்தினான்.

பொன்னிவளவன் அங்கிருந்து புறப்பட்டுக் காற்றென மறைந்தான்.

"வீரத்தேவரே ! பாண்டிநாட்டின் நலத்திற்காக நீங்கள் செய்துவரும் செயற்கரிய செயல்களைப்பற்றி நான் நன்கு அறிவேன்—இன்றையச் சூழ்நிலையால் அல்ல என்றுமே தங்களை என் சகோதரராகவே நான் கருதி வருகிறேன். என் மனங்கவர்ந்தவரைக் காத்தது பெரிதல்ல. இந்த நிகழ்ச்சியை தயை செய்து என் சகோதரரிடம் கூறவேண்டும்—முறைப்படி திருமணம் பேசி எனக்கும் அவருக்கும் திருமணம் நடந்த தாகவே சூழ்நிலை அமையட்டும்" என்று கெஞ்சாத குறையாக ஆலவாய் அழகி கேட்டாள்.

அதற்கும் வீரத்தேவன் உடன்பட்டான். பின் அவன் அங்கிருந்து புறப்பட்டபோது பாடிவீட்டு முன் வாயிலை ஒட்டி நின்று கொண்டிருந்த மதுரவல்லி அங்கிருந்து விரைந்து சென்றுள்.

21. வேவுநகர் வீரத்தேவன் வாழ்க!

பாண்டிய மன்னன் பெருவழுதி அரசுப் பொறுப்பை ஏற்று முடிசூட்டிக் கொண்ட பிறகு முதன் முறையாக அவை கூடியது.

புதிய மன்னன் கூட்டிய அவையாதலால் அதன் சிறப் பைக் காண வெள்ளமென மக்கள் திரண்டிருந்தார்கள்.

அமைச்சர்களும் புலவர்களும் எண் பேராயத்தாரும் ஐம்பெருங்குழுவினரும் அரசியல் அதிகாரிகளும் மற்றும் பல் துறை அறிஞர்களும் அவையை அலங்கரித்தனர்.

பெருமன்னர் இறந்ததற்குப் பின்னர் பெருவழுதி ஆட் சிக்கு வருவதற்கு முன்னர் நடந்த சில குற்றங்கள் பற்றி விசாரணை தொடங்கியது.

ஒற்றர் படையைச் சேர்ந்த நல்லியக் கோடன் என்பவன் பகை நாட்டிற்குச் சார்பாக நடந்து கொண்டான் என்பது ஒரு வழக்கு.

அதனைத் தீர விசாரித்த பெருவழுதிப் பாண்டியன், "நான் அரசுக் கட்டில் ஏறிய பின்னர் விசாரிக்கும் முதல் வழக்காக இது இருப்பதால் மரண தண்டனை விதிக்க வேண்டிய இந்த நல்லியக் கோடனை நாடுகடத்துகிறேன்" என்று தீர்ப்புக் கூறினான்.

அவனது கண்டிப்பு மிக்க நீதி வழங்கும் தன்மையைக் கண்டு அவையே வியந்தது.

இந்த நிலையில் நந்திதேவன் தன் அருகில் இருந்தவரிடம் கூறி மன்னரிடம் ஏதோ ஒன்றைக் கூறுமாறு மெல்லிய குரலில் கூறிக் கொண்டிருந்தான்.

பக்கத்திலிருந்தவர் பெரிதும் தயங்கினர். இதனைக் குறிப்பால் உணர்ந்த மன்னன் "நந்திதேவரே! இங்கு யாரும் தங்கள் கருத்தைக் கூறலாம்—நீங்களோ துணைத் தளபதி. நீங்கள் கூற விரும்புவது ஏதாவது இருப்பின் தாராளமாகக் கூறலாம்" என்று கூறினன்.

எழுந்து நின்ற நந்திதேவன் "மன்னர் மன்னவா? நான் சொல்லப் போகும் செய்தி பலருக்கு திகைப்பைத் தரலாம்—சிலருக்கு என் மீது பெரு வெறுப்பை உண்டாக்கலாம்—இருப்பினும் ராஜ விசுவாசம் உள்ளவன் என்பதால் கூறுகிறேன். இன்று ஒற்றன் ஒருவன் தவறு செய்ததற்காக அவனை நாடு கடத்தினீர்கள். இதே போல யார் தவறு செய்தாலும் தவறு தானே?" என்று கேட்டான்.

"உறுதியாக!" என்று கூறி மன்னன் நிறுத்தினன்.

"நமது தளபதி வீரத்தேவரே தவறு செய்திருக்கிருர்."

இதைக் கேட்டதும் அவையே பெரும் கலக்கத்தில் ஆழ்ந்தது.

"யார் வீரத் தேவரா?" என்று மன்னனே திகைப்போடு கேட்டான்.

"ஆம்...சோழ மன்னன் வெள்ளாற்றங்கரையில் நம் பாடி வீட்டிற்குள் வந்துபோகிற அளவிற்கு அவர் சோழ மன்னனுக்கு உடந்தையாக இருந்தார்" என்று மிகவும் திமிரோடு நந்திதேவன் கூறினன்.

இதைக் கேட்டதும் ஆலவாய் அழகியும் மதுரவல்லியும் அதிர்ந்து போனர்கள்.

''வீரத்தேவா! இந்தக் குற்றச் சாட்டிற்கு நீ கூறும் பதில் என்ன?'' என்று மன்னன் கேட்டான்.

வீரத்தேவன் இருக்கையை விட்டு எழுந்து நின்றுனே தவிர பதில் ஏதும் பேசவில்லே.

நந்திதேவன் மகிழ்ச்சி வெள்ளத்திலே மிதக்கலானுன்.

''வீரத்தேவா, உன் குற்றத்தை ஒப்புக் கொள்கிருயா?'' என்று மன்னர் கேட்டார்.

மீண்டும் அவன் மௌனம் சாதித்தான்.

உடனே சுந்தரத்தேவன் எழுந்து ''அரசே! வீரத்தேவன் செய்தது. பச்சைத் துரோகம்—நந்திதேவன் சொல்வது போல சோழ மன்னனுக்கு உடந்தையாக இருந்தானே இல்லேயோ ? எப்படியோ சோழமன்னன் பாடி வீட்டிற்கு வந்து போயிருக்கிருன். அதைப் புரிந்து கொள்ள முடியாதவன் என்ன தளபதி'' என்று கூறினுன்.

அப்பொழுதும் வீரத்தேவன் மௌனமே சாதித்தான்.

அவன் பேசாமல் நின்றதே அவன் குற்றவாளி என்று அனேவரும் நினேக்கும் வண்ணம் செய்தது.

மறுபடியும் சுந்தரத் தேவன் பேசினுன். மன்னவா ? சோழப் புலிகள் மோப்பம் பிடிக்கக் கூடும் என்று நீங்கள் கூறியதற்கு அவற்றை விலங்கிட்டு நடைபாதையிலேயே கூட்டி வருகிறேன். என்று வீரத் தேவன் சொல்லிச் சென்ற தாகக் கூறினீர்கள்—. இன்று விலங்கை இவன் போட்டுக் கொள்ளும்படியாக அல்லவா ஆகிவிட்டது. நமது துணேத் தள பதி நந்தி தேவன் தக்க சமயத்தில் உண்மையை அறிந்து வராவிட்டால் நம் நிலே என்ன ஆகும்? எனவே வீரத்தேவ னுக்குத் தக்க தண்டனே வழங்க வேண்டும்—மன்னர் மரண தண்டனேயே வழங்குவார்என நினேக்கிறேன்'' என்று அவன் கூறினுன்.

"வீரத்தேவா, உன் மௌனமே உன்னைக் குற்றவாளி என்பதனை ருசுப் படுத்திவிட்டது. மதிப்பிற்குரிய அமைச்சரே! உனக்கு மரணத் தண்டனை விதிக்கலாம் என்று கூறி விட்டார். மரண தண்டனைக்கு இலக்காகும் குற்றவாளிகள் அதற்கு முன் தங்கள் எண்ணங்களைச் சொல்வதுதான் மரபு. நீயும் ஏதாவது சொல்லலாமே!" என்று மன்னர் கூறினார்.

"சோழ மன்னன் வந்துபோனது தெரியாமல் இருந்து விட்ட நான் என்ன தளபதி என்று நமது மதியூகம் மிக்க அமைச்சர் சுந்தரத் தேவர் கேட்டார். ஒருவன் நம்மில் ஒருவர் போல நாடகமாடி வருகிறான். அவன் யார் என்பதைப் புரிந்துகொள்ள முடியாத இவர் என்ன அமைச்சர்? எனக்கு மரண தண்டனை என்றால் மதியூகம் மிக்கச் சுந்தர தேவருக்கு என்ன தண்டனை வழங்குவது?" என்று வீரத்தேவன் கேட்டான்.

"என்ன உளறுகிறாய்?" என்று சுந்தரத் தேவர் கேட்டார்"

உடனே வீரத்தேவன் ஒரு முறை கையைத் தட்டினான்— இருபதுக்கும் அதிகமான திடகாத்திரமான வீரர்கள் விரைந்து வந்து நந்திதேவனுக்கு விலங்கிட்டார்கள்.

அவன் யார் என்பதை மன்னனே அவையோருக்கு விளக்கினான்.

மறுபடியும் வீரத்தேவன் கை தட்டியபொழுது பொன்னி வளவனைப் பல வீரர்கள் சூழ்ந்தபடி அழைத்து வந்தார்கள்.

"இளவரசியாரே! சோழ மன்னர் வருகிற முறை குற்றவாளி போல இருந்தாலும் அதன் முடிவு நன்மையாகவே முடியும். தங்கள் எண்ணம் நிறைவேற மன்னரிடம் வரம் பெற்று விட்டேன். என் கடமையையும் நிறைவேற்றி விட்டேன்." என வீரத்தேவன் கூறினான்.

வீரத்தேவனின் எல்லையற்ற சாமர்த்தியத்தையும் ராஜ தந்திரத்தையும் கண்ட அவையோர் அவனை வாழ்க வாழ்க! என வாழ்த்தினர்.

மதிப்பிற்குரிய மக்களே! இந்த நாட்டின் கண்போல விளங்கும் நமது தளபதி வீரத்தேவனுக்கு அவன் வாழும் வேவுப் பட்டியை முழு உரிமை உள்ள ஊராக வழங்குகிறேன். இன்றுமுதல் வேவுநகர்க் கோட்டை அவனுடைய முழு உரிமைக்கு உடன்பட்டதாகும். அதோடு இன்றுமுதல் வேவு நகர் வீரத்தேவன் என்ற அடைமொழியோடு அனைவரும் அவனை அழைத்துச் சிறப்பிப்போம்—மற்றொன்று சுந்தரத் தேவர் நம் சகோதரர் போன்றவர்தான். எனவே அவரைக் கேட்காமலே அவர் உடன்படுவார் என்ற முழு நம்பிக்கையில் நமது ஏழிசை அரசி மதுரவல்லியை வீரத்தேவனுக்கு உரிமை ஆக்குகிறேன். சோழ மன்னர் பொன்னிவளவனுக்கு என் தங்கையை உரிமை ஆக்குகிறேன். என்றென்றும் நாட்டு மக்கள் நலம்பெற வாழ நாங்கள் அனைவரும் பாடுபடுவோம் என்பதனை மிகுந்த அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்''

மன்னன் பெருவழுதி இவற்றை மிகுந்த கனிவோடு கூறியதும்,

மீனக் கொடியோன் வாழ்க !

பெருவழுதிப் பாண்டியர் வாழ்க !

வேவுநகர் வீரத்தேவர் வாழ்க

என்று மக்கள் முழக்கமிட்டனர்.

முற்றும்